# புதிய ஜனநாயகம்

மார்ச் 2012
ரூ.10.00




## மின்வெட்டு:
## இருட்டில் மறைந்துள்ள உண்மைகள்!

# “கூடங்குளம் அணு உலையை இழுத்து மூடு!”

## – புரட்சிகர அமைப்புகள் நெல்லை மற்றும் கூடங்குளத்தில் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணி



நெல்லையில்...

‘‘மக்களின் உயிருக்கும் நாட்டின் அரைகுறை இறையாண்மைக்கும் உலை வைக்கும் கூடங்குளம் அணு உலையை இழுத்து மூடு!’’ என்ற முழக்கத்தின் கீழ் ம.க.இ.க; வி.வி.மு; பு.மாஇ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து தமிழகம் தழுவிய பிரச்சார இயக்கத்தையும், பிப்ரவரி 11 அன்று நெல்லையிலும் கூடங்குளத்திலும் ஆயிரக் கணக்கானோர் பங்கேற்ற எழுச்சிமிகு பேரணிகளையும் நடத்தியிருக்கின்றனர்.

கடந்த செப்டம்பர் மாதம் முதற்கொண்டே கூடங்குளம் வட்டாரத்தைச் சேர்ந்த மீனவர்களும் பிறபகுதி மக்களும் அணு உலைக்கு எதிராகத் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இடிந்தகரையில் உண்ணாநிலைப் போராட்டம் நடத்துவதுடன், கூடங்குளம் அணு உலையை இயக்குவதற்கு அவ்வப்போது மத்திய அரசு மேற்கொண்டு வரும் சதித்தனமான முயற்சிகளையும் விழிப்புடனிருந்து முறியடித்து வருகின்றனர். எனினும், ஊடகங்கள் மற்றும் அப்துல் கலாம் போன்ற ‘அறிவாளிகளின்’ துணையுடன் அணு மின் நிலையத்துக்கு ஆதரவாக மக்கள் மத்தியில் தீவிரமான பொய்ப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருப்பதுடன், அணு உலையை எதிர்ப்பவர்கள் நாட்டின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போட்டு, இந்தியா வல்லரசாவதைத் தடுக்கிறார்கள் என்ற கருத்தையும் மன்மோகன் அரசு உருவாக்கியிருக்கிறது. இந்தப் பிரச்சாரம் தமிழக மக்கள் மத்தியில் தோற்றுவித்திருக்கும் தாக்கத்தை முறியடிக்காமல், கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவாக தமிழகத்தில் பொதுக்கருத்தை உருவாக்க முடியாது என்பதைக் கணக்கில் கொண்டு இப்புரட்சிகர அமைப்புகள் தமது பிரச்சாரத்தை விரிவான அளவில் கொண்டு சென்றனர்.

இலட்சக்கணக்கான துண்டறிக்கைகள், சுவரொட்டிகள், சுவரெழுத்துகள், தெருமுனைக்கூட்டங்கள், அரங்குக் கூட்டங்கள், கலைநிகழ்ச்சிகள் போன்ற வடிவங்களில் தமிழகம் முழுவதும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வியக்கத்தினை ஒட்டிக் கொண்டுவரப்பட்ட சிறு வெளியீடு 50,000 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டது.

கிழக்கு கடற்கரையில் கூடங்குளத்துக்கு வடக்கிலும் தெற்கிலும் உள்ள மீனவக் கிராமங்கள், நெல்லை, தூத்துக்குடி, நாகர்கோவில் உள்ளிட்ட நகரங்கள், அந்த வட்டாரத்தைச் சேர்ந்த கல்லூரிகள் போன்ற பல்வேறு தரப்பு மக்கள் மத்தியிலும் மூன்று மாவட்டங்களில் பிரச்சாரம் கொண்டு செல்லப்பட்டது. கரையோர மக்கள் பிரச்சாரத்துக்கு சென்ற தோழர்களையும், கலைக்குழுவினரையும் நெகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தனர். உடன்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



நெல்லையில்

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

**தொகுதி: 27 இதழ்: 5**

**மார்ச் 2012**

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561


### கூடங்குளம்:

# மக்கள் போராட்டத்தை முறியடிக்க மத்திய - மாநில அரசுகளின் சதி!

அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தினர் கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராக நடத்தி வரும் போராட்டங்களுக்கு அந்நிய நாடுகளில் இருந்து நிதி திரட்டிக் கொடுத்து, அவற்றின் மூளையாக இருந்து, திட்டங்கள் தீட்டிக் கொடுத்து, தானும் பங்கேற்றவர் என்று ஒரு பொய்ப் புகார் சுமத்தி ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஓய்வு பெற்ற கணினிப் பொறியாளர் சோன்டெக் ரைனர் ஹெர்மன் என்பவரை கடந்த மாத இறுதியில் நாகர்கோவிலில் பிடித்து இரவோடு இரவாக, இரகசியமாக சொந்த நாட்டுக்கு நாடு கடத்தி விட்டனர், உளவுப் பிரிவு போலீசார்.

மத்திய உளவுப் பிரிவு போலீசார் (ஐ.பி.) திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் நடத்திய விசாரணையில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் ரைனரைப் பிடித்து நாடு கடத்தும்படி ஐ.பி, தமிழக போலீசு இயக்குநர் ராமானுஜத்திற்கு பரிந்துரைத்தது, தமிழக 'கியூ' பிரிவு போலீசார் அவ்வாறு செய்தனர்; ரைனரிடம் ஐ.பி. அதிகாரிகள் பலகட்ட விசாரணை நடத்தி, கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிரான போராட்டத்துக்கு நிதி திரட்டியதும் போராட்டக் குழுவினருடன் பேசியதும் வழிகாட்டியதும், போராட்டத்தில் அவர் பங்கேற்றதும், கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கே அவர் சென்றதும் ரைனரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மூலம் உறுதிசெய்யப்பட்டது என்று போலீசு மூலம் செய்தி கிடைத்ததாக எல்லா நாளேடுகளும் எழுதியுள்ளன.

கூடங்குளம் அணுமின் நிலையம் எதிர்ப்புப் போராட்டங்களுக்கு வெளி நாடுகளில் இருந்து நிதியுதவி வருவதாக பிரதமர், உள்துறை அமைச்சர் மற்றும் அவர்களின் ''சமக்சா'' நாராயணசாமி கூறிவரும் புகாருக்கு ஆதாரங்களைத் ''தேடித் தரும்படி'' மத்திய உளவுத்துறை சி.பி.ஐ.க்கு உத்திரவிடப்பட்டிருக் கிறது; அதிகாரபூர்வமற்ற ஆதாரமற்ற இந்த விசாரணை எவ்வாறு அமைய வேண்டும் என்று உள்துறை அமைச்சகத்திடம் சி.பி.ஐ. விளக்கம் கேட்டிருக் கிறது. சி.பி.ஐ.யின் விசாரணை விளையத்துக்குள் - கண்காணிப்பு வட்டத் துக்குள் நெல்லை, குமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் மூன்று அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் வந்துள்ளன; அவற்றில் இரண்டு நிறுவனங் களின் வங்கிக் கணக்கு பரிவர்த்தனை முடக்கப்பட்டுள்ளன.

ஜெர்மனி சுற்றுலாப் பயணியை நாடு கடத்துவது, மத்திய அரசின் சி.பி.ஐ., ஐ.பி. மற்றும் மாநில அரசின் கியூ பிரிவு உளவுத்துறையினரின் விசாரணை - கண்காணிப்பு, நடவடிக்கைகள் எதுவும் வெளிப்படையாகவும், அதிகாரபூர் வமாகவும் சட்டப்படியும் செய்யப்படவில்லை. இத்தாக்குதல்கள் எல்லாம் கூடங்குளம் அணுஉலைக்கு எதிராகப் போராடி வரும் இடிந்தகரை மக் களையும் தலைமையையும் மிரட்டிப் பணியவைக்கவும், முடக்கி வைக்கவும் மேற்கொள்ளப்படும் சதி-சூழ்ச்சி தாம் என்பது நாடும் மக்களும் அறிந்த வெளிப்படையான உண்மை. பிடிபட்ட ஜெர்மானியர், விசாரணை-கண் காணிப்பு வளையத்துக்குள் வந்த அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மீது தக்க ஆதாரங்கள் இருப்பின் நேரடியான, வெளிப்படையான அதிகாரபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதுதானே! அதற்குமாறாக சதித்தன மான, நள்ளிரவு, திரைமறைவு, குறுமதி நடவடிக்கைகள் ஒருபுறமும், அவ தூறுக் கூச்சல் மறுபுறமும் ஏன்?

அரசும் ஆளும் வர்க்கங்களும் இத்தகைய தந்திரங்களில் - சதித்தனங்களில், அவதூறுப் பிரச்சாரங்களில் ஈடுபடுவதும் ஒன்றும் புதிதில்லை. மக்கள் எழுப்பும் பிரச்சினைகளுக்கு நேர்மையாக முகங்கொள்வதற்கு பதில், ஒன்று

தொடர்ச்சி 8-ஆம் பக்கம்

## மின்வெட்டு:

# இருளில் மறைந்துள்ள உண்மைகள்

**கார்ப்பரேட் நிறுவனங்கள் ஜொலிப்பதற்காக, தமிழக மக்களின் மீது மின்வெட்டின்சுமை திணிக்கப்படுகிறது.**

கடுமையான மின்வெட்டுக்குக் காரணம் என்ன? தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மின்வெட்டுக்கே ஆற்காடு வீராசாமியின் பெயரைச் சூட்டி, ஒரு அமைச்சரின் நிர்வாகத் திறமையின்மை, ஊழல்தான் மின்வெட்டுக்குக் காரணம் என்பதுபோல பிரச்சினையைச் சுருக்கி சித்தரித்தன ஊடகங்கள். மின்வெட்டு காரணமாக மக்களிடம் ஏற்பட்ட அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்ட ஜெயலலிதா, ''ஆட்சிக்கு வந்தால் ஆறே மாதத்தில் மின்பற்றாக் குறையைப் போக்குவேன்'' என்று தேர்தலுக்கு முன் வாக்குறுதி அளித்தார்.

சென்ற ஆண்டு டிசம்பரில் எப்.ஐ.சி.சி.ஐ. என்ற இந்தியத் தரகு முதலாளிகள் சங்கத்தின் கூட்டத்தில் பேசிய தமிழக மின்துறை அமைச்சர் நத்தம் விசுவநாதன், ''2012-இல் தமிழகத்தில் மின்வெட்டு இருக்காது'' என பிரகடனம் செய்தார். 2012-ஆம் ஆண்டோ, எட்டு மணி நேர மின்வெட்டுடன் தொடங்கியிருக்கிறது. ''2014-இல் தமிழகம் மின் உபரி மாநிலமாக இருக்கும்'' என்று இப்போது குறி சொல்லியிருக்கிறார் அமைச்சர்.

திட்டமிட்டபடி அனல் மின் நிலையங்கள் உற்பத்தியை தொடங்காதது, இருக்கின்ற மின்நிலையங்களில் பழுது காரணமாக உற்பத்தி குறைந்திருப்பது, மத்திய மின் தொகுப்பிலிருந்து கிடைக்க வேண்டிய மின்சாரம் கிடைக்காதது என்று தற்போதைய மின்பற்றாக்குறைக்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன.

2006-இல் தமிழகத்தின் மின் தேவை 8500 மெகாவாட். 2012-இல் 12,000 மெகாவாட். பெருகியிருக்கும் இந்த மின் தேவையை ஈடு செய்யும் விதத்தில் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மின் உற்பத்தி பெருக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டுகிறது அ.தி.மு.க. கடந்த பத்து ஆண்டுகளில் அ.தி.மு.க; தி.மு.க. இரு கட்சிகளின் ஆட்சிக் காலத்திலும் அரசின் சார்பில் புதிதாக மின் நிலையம் எதுவும் அமைக்கப்படவில்லை என்பதே உண்மை.

இருப்பினும் மின்வெட்டு தீவிரமடைய அடைய, மக்களின் கோபம் இந்தக் கட்சிகளை நோக்கித் திரும்பாமல், அணு உலைக்கு எதிராகப் போராடும் கூடங்குளம், இடிந்தகரை மக்களை நோக்கித் திட்டமிட்டே திருப்பப் படுகிறது. தினமலர், காங்கிரசு அமைச்சர் நாராயணசாமி, ப.சிதம்பரம், பாரதிய ஜனதாக் கட்சி, கருணாநிதி, போலி கம்யூனிஸ்டுகள் ஆகிய அனைவரும் ஒரே குரலில் இந்தப் பொய்ப்பிரச்சாரத்தை நடத்துகிறார்கள்.

குப்புறத் தள்ளிய குதிரை குழியும் பறித்த கதைதான். கடுமையானதொரு மின்பற்றாக்குறையில் நம்மைத் தள்ளிய குற்றவாளிகள் இவர்கள்தான். அணு மின்சாரம்தான் இதற்குத் தீர்வு என்று அடுத்த படுகுழியையும் இவர்கள் நமக்குத் தயார் செய்கிறார்கள்.

''மின்வெட்டை அகற்று! கூடங்குளத்தைத் திற!'' என்று கோரும் சிறு தொழில் அதிபர்கள், வியாபாரிகள், விவசாயிகள் போன்ற பல்வேறு தரப்பினரும், தம்மையறியாமல் உண்மையான குற்றவாளிகளைத் தப்பிக்க வைக்கிறார்கள். மின்வெட்டுக்கு எந்த விதத்திலும் பொறுப்

ஓரவஞ்சனை நிறைந்த மின்வெட்டைக் கண்டித்து கோவையில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் மீது தமிழக போலீசு நடத்திய தடியடி.



பாக்க முடியாத, கூடங்குளம் - இடிந்தகரை மக்களைக் குற்றவாளிகளாக்குகிறார்கள்.

இப்படி ஒருபுறம் மக்களின் கோபம் குறி தவறிப் போக, இன்னொரு புறம், பிப். 16 அன்று தமிழகத்தின் பிரபல நாளேடுகளில் வெளிவந்த ஒரு விளம்பரம் மின்வெட்டு பிரச்சினையின் முக்கியமானதொரு பரிமாணத்தை நமக்கு காட்டியது.



தேர்வு நேரத்தில் கடுமையான மின்வெட்டு அமல்படுத்தப்படுவதால், கைவிளக்கு வெளிச்சத்தில் படிக்க முயலும் மாணவர்கள்.

''தமிழகத்தில் மின்பற்றாக்குறையின் அளவு 30%. இந்தப் பற்றாக்குறையை அனைவரும் சமமாகப் பகிர்ந்து கொள்வதற்குப் பதிலாக, இலட்சக்கணக்கான சிறு தொழில்களுக்கும், மேற்கு மற்றும் தென் தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்கும் 65% மின்வெட்டு விதிக்கப்படுகிறது. அதே நேரத்தில், சென்னையிலுள்ள பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் ஐ.டி. நிறுவனங்கள் போன்றவற்றிற்கு மின்வெட்டே இல்லை. மேற்கூறிய நிறுவனங்கள் தமக்குத் தேவையான மின்சாரத்தை நேரடியாகத் தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்தோ, தேசியத் தொகுப்பிலிருந்தோ வாங்கிக் கொள்ள ஏதுவாக கம்பித் தடங்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அவற்றைக் காட்டிலும் தமிழக மின்வாரியம் அளிக்கும் மின்சாரத்தின் விலை குறைவு என்பதால், தமது செல்வாக்கைப் பயன்படுத்தி இந்த மின்சாரத்தை ஒட்ட உறிஞ்சுகிறார்கள்.

மின்சாரம் என்பது தமிழக மக்களின் பொதுச்சொத்து என்பதை உணர்ந்து, தாங்கள் அனுபவித்து வரும் இச்சலுகையை கார்ப்பரேட் நிறுவனங்கள் தானாக முன்வந்து விட்டுக் கொடுக்க வேண்டும்'' என்று தமிழகத்தின் ஜவுளி, இஞ்சினியரிங் ஆலைகள், பவுண்டரிகள் மற்றும் சிறுதொழில் முனைவோரின் சங்கங்கள் அந்த விளம்பரத்தில் கோரியிருந்தனர். இதற்கு பன்னாட்டு நிறுவனங்கள் செவி சாய்க்கவில்லை. அரசாங்கமும் இந்த அநீதிக்கு பதிலளிக்கவில்லை.

எனினும் இந்த விளம்பரம், தமிழக மின்வெட்டின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தையும், அதில் பளிச்சென்று தெரியும் மறுகாலனியாக்க கொள்கையையும் அம்பலப்படுத்துகிறது. நோக்கியா, ஹூண்டாய், போர்டு, ரெனால்ட், நிஸ்ஸான், டைம்லர், அப்போலோ டையர்ஸ், செயின்ட் கோபெய்ன், நோக்கியா, சீமன்ஸ், மோசர் பேர் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள், வாசல் முதல் கழிவறை வரை குளிரூட்டப்பட்ட ஆடம்பர மால்கள், ஐ.டி. நிறுவனங்களுக்காக உள்நாட்டுத் தொழில்கள் காவு கொடுக்கப்படுவதை எடுத்துக் காட்டுகிறது.

திருப்பூரில் மார்ச்-2 அன்று மின் விடுமுறை அமல்படுத்தப்பட்டதையடுத்து, இயங்காமல் வெறிச்சோடி கிடக்கும் பனியன் தொழிலகம்.



இனி தமிழகத்தின் மின் உற்பத்தி, விநியோகம் தொடர்பான சில அடிப்படையான புள்ளி விவரங்களைப் பார்ப்போம். 2010-11-ஆம் ஆண்டில் தமிழகம் பயன்படுத்திய மொத்த மின்சாரம் 7499 கோடி யூனிட்டுகள். இதில் மாநில அரசுக்கு சொந்தமான மின்நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் 2578.40 கோடி யூனிட்டுகள். மீதமுள்ள 4920.60 கோடி யூனிட்டுகளை மத்திய மின் தொகுப்பிலிருந்தும் தனியார் மின் உற்பத்தியாளர்களிடமிருந்தும் தமிழக அரசு வாங்கியிருக்கிறது.

மொத்த மின்சாரத்தில் 18.5% கம்பித்தட இழப்பு மற்றும்

திருட்டுக்குப் போய் விடுகிறது. இதன் மூலம் ஆண்டு தோறும் வாரியத்துக்கு ஏற்படும் இழப்பு மட்டும் ரூ.2000 கோடி.

மாநில அரசு உற்பத்தி செய்யும் மின்சாரத்தின் விலை குறைந்த பட்சம் யூனிட்டுக்கு 0.21 காசுகள் (நீர்மின்சக்தி). அதிக பட்சம் யூனிட்டு ரூ.2.14 காசுகள் (அனல்மின்சக்தி). தமிழகத்திலுள்ள தனியார் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து தமிழக அரசு விலைக்கு வாங்கும் மின்சாரத்தின் விலை குறைந்த பட்சம் யூனிட்டுக்கு ரூ.3.96. அதிகபட்சம் ரூ.17.00.

> **மின் பற்றாக்குறையை அனைவரும் சமமாகப் பகிர்ந்து கொள்வதற்குப் பதிலாக, இலட்சக்கணக்கான சிறு தொழில்களுக்கும், மேற்கு மற்றும் தென் தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளுக்கும் 65% மின்வெட்டு விதிக்கப்படுகிறது. அதே நேரத்தில், சென்னையிலுள்ள பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் ஐ.டி. நிறுவனங்கள் போன்றவற்றிற்கு மின்வெட்டே இல்லை.**

2011-12 கணக்கீட்டின்படி மின்வாரியம் உற்பத்தி செய்கின்ற மற்றும் வாங்குகின்ற மொத்த மின்சாரத்தின் சராசரி அடக்க விலை - யூனிட் ஒன்றுக்கு ரூ.5.31. விற்பனை செய்கின்ற மின்சாரத்தின் சராசரி விலை யூனிட் ஒன்றுக்கு 3.81. இந்த வகையில் தற்போது யூனிட் ஒன்றுக்கு ஏற்படும் இழப்பு ரூ.1.50. இதனை ஈடு செய்வதற்குத்தான் மின் கட்டண உயர்வு என்று ஜெயா அரசு கூறுகிறது.

தமிழகத்தின் மின்சாரம் வீடுகள் 27%, விவசாயம் 20.93%, வணிக நிறுவனங்கள் 10.43%, தொழிற்சாலைகள் 34.92% என்றவாறு நுகரப்படுகிறது. வீடுகளுக்கு ரூ.1.85 முதல் ரூ.2.90 வரை; வணிக நிறுவனங்களுக்கு யூனிட்டுக்கு ரூ.5.05 முதல் ரூ.6.00 வரை; தொழில் துறைக்கு ரூ.3.30 முதல் ரூ.4.05 வரை - என்ற விகிதத்தில் கட்டணம் விதிக்கப்படுகிறது. இதில் வீடுகளுக்கான மின் கட்டணத்தை யூனிட்டுக்கு குறைந்த பட்சம் ரூ.2.00 இல் தொடங்கி அதிகபட்சம் ரூ.5.75 என்று உயர்த்தவிருப்பதாக ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

மேற்கூறிய விவரங்களிலிருந்து பெறப்படும் உண்மை என்ன? மாநில அரசானது, மின் உற்பத்தி நிலையங்களைத் தானே நிறுவாமல், தனியார் முதலாளிகளிடமிருந்து மின்சாரத்தை வாங்குவதால்தான் மின்சாரத்தின் விலை பன்மடங்கு அதிகரிக்கிறது. தமிழக மின்வாரியத்தின் 9% மின்சாரத் தேவையை நிறைவு செய்து விட்டு, வாரியத்தின் வருவாயில் 35 சதவீதத்தை தனியார் முதலாளிகள் விழுங்கி விடுகின்றனர் (இந்தியா டுடே, பிப்,29, 2012).

மின் கட்டண உயர்வுக்கான மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில், 'தனியார் முதலாளிகளிடமிருந்து மின்சாரம் வாங்குவது ஏன்?' என்று மக்கள் கேட்டதற்கு, ''அவ்வாறு வாங்கவில்லையென்றால், 18 மணி நேர மின்வெட்டை அமல்படுத்த வேண்டியிருக்கும்'' என்று பதிலளித்திருக்கிறார் தமிழக மின்வாரியத்தின் நிதிப்பிரிவு இயக்குநர் ராஜகோபால் (தினமலர், ஜன-30, 2012). தமிழக மின்வாரியத்தின் தற்போதைய கடன் 56,000 கோடி ரூபாய் என்றும் இவர் தெரிவித்திருக்கிறார்.

இந்த 56,000 கோடி கடன் வந்தது எப்படி? விவசாயத்துக்கான இலவச மின்சாரம்தான் இதற்கு காரணம் என்று பலரும் இதற்கு பதிலளிக்கக் கூடும். அது உண்மைதானா என்பதை விவரங்களிலிருந்து பின்னர் பார்ப்போம். விவசாயத்துக்கு ஆற்றுத் தண்ணீரை விவசாயிகளுக்கு இலவசமாகத் தரக்கூடாது என்று கூறுவதும், இலவச மின்சாரம் கூடாது என்று கூறுவதும் ஒன்றே. நீர்ப்பாசனம் என்பது விவசாயத்துக்கான அடிப்படைக் கட்டுமான வசதியாகும். இதனை செய்து தருவது அரசின் கடமை. கால்வாய் அல்லது ஏரிப்பாசன வசதிகளை அரசு செய்து தரத் தவறியதால், தனது சொந்தச் செலவில், கிணறு/பம்புசெட் போட்டுக் கொள்ளும் விவசாயிக்கு மின்சாரத்தை வழங்குவது அரசின் கடமை. அது இலவசமல்ல, சலுகையுமல்ல.

ஆறு வழிச்சாலைகள், சலுகை கட்டணத்தில் சரக்கு ரயில்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், மின்சாரம்-தண்ணீர் உள்ளிட்ட வசதிகள், குறைந்த வட்டியில் வங்கிக் கடன்கள், பிட்டர்-டர்னர் முதல் பொறியியல், மேலாண்மைத் துறைகள் வரையிலான அனைத்திலும் தகுதியான நபர்களை உருவாக்கி முதலாளிகளுக்கு வழங்கும் கல்லூரிகள், ஏற்றுமதி மானியங்கள், இறக்குமதி வரிச்சலுகைகள் - என மக்களின் வரிப்பணத்தை கார்ப்பரேட் முதலாளிகளுக்கு வாரிக் கொட்டுகின்ற அரசு, இவற்றையெல்லாம் முதலாளிகளுக்கான 'இலவசம்' என்று அழைப்பதில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

யூனிட் 17 ரூபாய் வரை விலை கொடுத்து வெளிச்சந்தையில் வாங்கும் மின்சாரத்தை, ரூ.3.30 விலையில் கார்ப்பரேட், பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கும் தமிழக அரசு, இதனை மானியம் என்று கூறுவதில்லை. அதனால் ஏற்படும் இழப்பையும் கணக்கிட்டுக் கூறுவதில்லை.

## அறிவிப்பு

**''கறுப்புப் பணம்: கறுப்புக்கும் வெள்ளைக்கும் இடையில்...'' என்ற கட்டுரையின் தொடர்ச்சி தவிர்க்க வியலாத காரணங்களால் இவ்விதழில் இடம் பெற வில்லை; ஏப்ரல் 2012 இதழில் அத்தொடர்ச்சி வெளி வரும்.**

**- ஆசிரியர் குழு.**

இதைத்தான் மின்வெட்டுக்காக சிறு தொழிலதிபர்கள் கொடுத்துள்ள விளம்பரம் அம்பலப்படுத்துகிறது.

அதேபோல, கம்பித்தட இழப்பு என்று கூறப்படும் சுமார் 18.5 சதவீதத்தில் பெரும்பகுதி ஆலை முதலாளிகள் செய்யும் மின்சாரத் திருட்டாகும். துணை மின்நிலையங்களிலிருந்தே நேரடியாகவே மின்சாரம் திருடப்பட்டாலும், அந்த மின்சாரமும் 'இழப்பு' என்று காந்திக் கணக்கில் சேர்க்கப்பட்டு விடுகிறது. இவை ஒருபுறமிருக்க, ''தகவல் தொழில் நுட்பத்தின் துணையுடன் இயங்கும் தொழில்களுக்கான (ITES) மின் கட்டணத்தை யூனிட்டுக்கு 5 ரூபாயிலிருந்து ரூ.3.50 ஆக குறைக்க வேண்டும்'' என்று மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் கோரிக்கை வைத்திருக்கிறது தமிழ்நாடு மின் வாரியம். பன்னாட்டு நிறுவனங்களுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் மின்சாரத்தின் விலை என்ன என்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இடம்பெற்றுள்ள யாருமறியாத இரகசியம். இவை கார்ப்பரேட் முதலாளிகளுக்கு வழங்கப்படும் மின்சாரம் பற்றிய விவரங்கள்.

இனி வாங்கப்படும் மின்சாரத்துக்கு வருவோம். மின் வாரியம் அளிக்கும் விவரங்களின்படியே, அரசாங்க மின்சாரத்தின் விலையை விட தனியார் மின்சாரத்தின் கொள்முதல் விலை பன்மடங்கு அதிகமாக இருப்பதுதான் மின்வாரியத்தின் நட்டத்துக்கு காரணம். இன்டிபென்டென்ட் பவர் புரொடியூசர்ஸ் (சுயேச்சையான மின் உற்பத்தியாளர்கள்) என்று அழைக்கப்படும் தனியார் முதலாளிகளிடம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்து கொண்டும், மெர்ச்சென்ட் பவர் கார்ப்பரேசன் (வணிக மின் உற்பத்திக் கழகங்கள்) என்று அழைக்கப்படுவோரிடம் சந்தை விலையிலும் மின்சாரத்தைக் கொள்முதல் செய்கிறது அரசு. மின்சாரத்தின் வெளிச்சந்தை விலை சென்ற ஆண்டில் மட்டும் குறைந்த பட்சம் யூனிட் ரூ.1.10 இல் தொடங்கி ரூ.12.00 வரை ஏறி இறங்கியுள்ளது. இதில் எப்போதுமே குறைந்த பட்ச விலையைக் கூறுவது அரசு மின் நிலையங்களாகவும், அதிக பட்ச விலையைக் கோருவது தனியார் முதலாளிகளுமாகவே இருக்கின்றனர்.

இன்று மின் வெட்டை சமாளிப்பதற்காக யூனிட் ரூ.4.50 விலையில் குஜராத்திலிருந்து 500 மெகாவாட் மின்சாரத்தை தமிழக அரசு வாங்கி வருகிறது. இதில் 235 மெகாவாட் மட்டுமே வந்து சேர்வதாகவும் 265 மெகாவாட் மின்தட இழப்பில் போய்விடுவதாகவும் கூறுகிறார் அமைச்சர் நத்தம் விசுவநாதன். இதனால், வாங்குகின்ற மின்சாரத்தின் உண்மையான விலை யூனிட்டுக்கு 10 ரூபாய் ஆகிவிடுகிறது. இதே மின்சாரத்தை தமிழகத்தின் தனியார் மின் உற்பத்தியாளர்களிடமிருந்து அரசு வாங்க முடியும். தமிழகத்தின் காற்றாலை மின் உற்பத்தித் திறன் மட்டும் 6007 மெகாவாட். தனியார் அனல் மின் நிலைய உற்பத்தித் திறன் 1180 மெகாவாட். ''சென்ற ஆண்டு யூனிட் 5 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விலை கொடுத்து 1500 மெகாவாட் மின்சாரத்தை தனியாரிடம் வாங்கினோம். 10,000 கோடி ரூபாய் அவர்களுக்கு பாக்கி வைத்திருப்பதால், இந்த ஆண்டு எதுவும் செய்வதற்கில்லை'' என்று கூறுகிறார் ஒரு மின்வாரிய அதிகாரி. (டைம்ஸ் ஆப் இந்தியா, பிப்.23, 2012)

இதுநாள் வரை யூனிட் 5 ரூபாய்க்கு தங்களிடம் மின்சாரத்தை வாங்கிவந்த மின்வாரியம், இப்போது ரூ.3.50 கேட்பதாகவும், இதன் காரணமாக 800 மெகாவாட் அனல் மின் உற்பத்தியை முடக்கவேண்டியிருக்கும் என்றும் சென்ற ஆண்டு மே மாதம் தமிழக அரசிடம் தெரிவித்திருக்கிறது தனியார் மின் உற்பத்தியாளர் சங்கம். (டைம்ஸ் ஆப் இந்தியா, மே 30, 2011) ''மின்சாரத்தின் விலையைக் கூட்டி விற்பதன் மூலம் மின் வாரியத்தை நட்டத்தில் தள்ளுகின்ற தமிழ்நாட்டிலுள்ள 5 தனியார் அனல் மின் நிலையங்களை உடனே அரசுடைமை ஆக்கு'' என்று தீர்மானமே இயற்றி தி.மு.க. அரசுக்கு அனுப்பியிருக்கிறது தமிழ்நாடு மின்வாரியப் பொறியாளர் சங்கம் (தி இந்து, 19.5.2008).

தனியார் மின் நிலையங்களை அரசுடைமை ஆக்குவது இருக்கட்டும், முதலில் கூரை ஏறிக் கோழி பிடித்தார்களா என்று பார்ப்போம். 2005-2010 காலகட்டத்தில் மின் தேவை 3977 மெகாவாட் அதிகரித்தது என்றும், ஆனால் வெறும் 290 மெகாவாட் அளவிற்கு மட்டுமே புதிதாக உற்பத்தி செய்யப்பட்டதென்றும் 2009-10க்கான கணக்குத் தணிக்கையாளர் அறிக்கை கூறுகிறது. இது ஒன்றைத் தவிர 2001-2010 காலகட்டத்தில், (அதாவது அ.திமு.க; தி.மு.க. இரு ஆட்சிகளிலும்) புதிதாக ஒரு மெகாவாட் கூட உற்பத்தித்திறன் கூட அதிகரிக்கப்படவில்லை.

இந்தப் பத்தாண்டுகளில் ஜெயாவும் கருணாநிதியும் போட்டி போட்டுக் கொண்டு தமிழகத்தில் கொண்டு வந்து இறக்கியிருக்கும் பன்னாட்டு நிறுவனங்கள், சென்னையிலும் மற்ற பெருநகரங்களிலும் பெருகியிருக்கும் ஆடம்பர மால்கள், ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்கள், நடுத்தர வர்க்கத்தினரிடையே பெருகியிருக்கும் விதவிதமான மின்


**''புதிய ஜனநாயகம்'' உரிமையாளர்**
**மற்றும் இதர விவரங்கள்**
**படிவம் IV (விதி 8-இன் படி)**

1. வெளியிடும் இடம் : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.
2. வெளியிடும் காலம் : மாதம் ஒருமுறை
3. அச்சிடுபவர் பெயர் : இரா. சண்முகராசு
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.
4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் : இரா. சண்முகராசு,
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.
5. ஆசிரியர் பெயர் : இரா. சண்முகராசு
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

இரா. சண்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

(ஒப்பம்) இரா. சண்முகராசு,
வெளியிடுபவர்.

1.3.2012

உபகரணங்கள், ஏ.சி.மிசின்கள் ஆகிய இவற்றுக்கான மின் சாரத்தை யார் கொடுப்பது? இதற்காகவேனும் மாநில அரசு தனது சொந்த அனல் மின்நிலையங்களைத் தொடங்கவேண்டும் என்று அ.தி.மு.க; தி.மு.க அரசுகளுக்குப் புரியாததற்குக் காரணம் அறியாமையா, நிர்வாகத் திறமையின்மையா?

இரண்டுமல்ல. புதிதாக அரசுப் பள்ளிகளோ கல்லூரிகளோ திறக்காமல், மெட்ரிக் பள்ளிகள், சுயநிதிக் கல்லூரிகளின் கொள்ளைக்கு கல்வியைத் திறந்து விட்டிருப்பதற்கு எது காரணமோ, அதுதான் அரசு தனது சொந்த முதலீட்டில் மின்நிலையங்களைத் தொடங்காததற்கும் காரணம். ''மருத்துவம், கல்வி ஆகியவற்றைப் போலவே, மின்சாரமும் ஒரு விற்பனைச் சரக்கு. பொதுநல நோக்கிலோ அல்லது சமூக நோக்கிலோ அரசாங்கம் மக்களுக்கு மின்சாரத்தை குறைந்த விலையில் வழங்குவது கூடாது. அதன் விலை சர்வதேச சந்தை விலையோடு ஒத்திருக்க வேண்டும். அப்போதுதான் பன்னாட்டு நிறுவனங்கள் இந்திய மின் துறையில் முதலீடு செய்ய இயலும்'' என்ற உலக வங்கியின் ஆணைப்படி 2003- இல் பாரதிய ஜனதா அரசு புதிய மின் சட்டத்தை இயற்றியது.

அம்பேத்கரால் முன்மொழியப்பட்ட 1948 மின்சாரச் சட்டம், மின்சாரம் என்பதை விவசாயம், தொழில், மற்றும் வீட்டு உபயோகங்களுக்கான அத்தியாவசியத் தேவையாகவும், லாப நோக்கமின்றி குறைந்த விலையில் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவையாகவும் வரையறுத்தது. இதன் காரணமாகத்தான் பல மாநிலங்களின் குக்கிராமங்கள் வரை மின்கம்பிகள் சென்றன. 2003 சட்டமோ மின்சாரத்தை லாபமீட்டும் சரக்காகவும், மின் விநியோகத்தை வணிக நடவடிக்கையாகவும் வரையறுத்தது. மாநில மின் வாரியங்கள் மின் உற்பத்தி, மின் கடத்துதல், மின் விநியோகம் என்று மூன்று நிறுவனங்களாக உடைக்கப்பட்டன. மின் உற்பத்தி தனியார் மயமாக்கப்பட்டது.

இன்று அனைத்திந்திய அளவில் தனியார் மின் நிலையங்களின் உற்பத்தி 48,000 மெகாவாட். நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் இது 23% ஆகும். அடுத்த சில ஆண்டுகளில் தனியார் உற்பத்தி மேலும் 30,000 மெகாவாட் அதிகரிக்க இருக்கிறது. அணுமின் நிலையங்கள் அமைப்பதற்கும் டாடா, அம்பானி போன்ற தரகு முதலாளிகளை அனுமதிக்க இருக்கிறது மன்மோகன் அரசு. தமிழ்நாட்டில் மட்டும் 18,140 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட 10 வணிக மின் உற்பத்திக் கழகங்களுக்கு (அனல் மின்சாரம்) தமிழக அரசு அனுமதி அளித்திருக்கிறது.

நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் கார்ப்பரேட் முதலாளிகளின் பங்கு மென்மேலும் அதிகரிப்பதையே இவை காட்டுகின்றன. இது அதிகரிக்க அதிகரிக்க மின்சாரத்தின் விலையை நிர்ணயம் செய்யும் அதிகாரம் அரசின் கையிலிருந்து அவர்கள் கைக்கு முழுவதுமாக மாறிவிடும். 'மேட்டூர் நீர்மின்சாரத்தின் விலை யூனிட்டுக்கு 20 காசு' என்று தமிழக மின்வாரியம் கூறினாலும், 'கூடங்குளம் அணுமின்சாரம் அஞ்சே காசுகள்' என்று அப்துல் கலாம் கூவினாலும், ஒரு யூனிட் மின்சாரத்துக்கு நாம் செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு என்பதைத் தீர்மானிப்பவர்கள் கார்ப்பரேட் முதலாளிகளாகத்தான் இருப்பார்கள். மருத்துவம், கல்வி முதலான துறைகளில் மக்களின் இரத்தத்தைப் பிழிந்து காசாக்கத் தெரிந்த முதலாளிகள், கரெண்டு பில்லுக்கான காசை நம் எலும்பைப் பிழிந்தேனும் எடுத்துவிடுவார்கள்.

மின்சாரம் தனியார்மயம் என்பது உழைக்கும் வர்க்கத்தின் மீதும், உள்நாட்டு சிறு தொழில்கள் மற்றும் விவசாயத்தின் மீதும் நிரந்தரமான மின்வெட்டைத் திணித்துவிடும். இன்றைய மின்வெட்டுக்கு முக்கியக் காரணம், மின்சாரம் வாங்குவதற்கு தமிழக மின்வாரியத்திடம் பணமில்லை என்பதே; மின்சாரப் பற்றாக்குறை என்பது இரண்டாவது காரணம்தான். மின்சாரத்தின் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் நாளை பன்னாட்டு முதலாளிகள், தரகு முதலாளிகளின் கைகளுக்கு முற்றிலுமாக மாறிவிடும் போது, அவர்கள் சொல்லும் சர்வதேச சந்தை விலைக்கு மின்சாரத்தை வாங்க நம்மிடம் பணமிருக்காது. எனவே மின்வெட்டு நம்மீது திணிக்கப்படும். அந்த மின்வெட்டிலிருந்து நம்மைக் காப்பாற்ற எந்த அணு சக்தியாலும் முடியாது. அதற்கு மக்கள் சக்தி தேவைப்படும். இன்று கூடங்குளத்தைக் கூடாதென்று நிறுத்தி வருகிறதே, அதே மக்கள் சக்திதான்!

● சூரியன்

---

தலையங்கத் தொடர்ச்சி...

அந்நிய சதி, சமூக விரோத, தேசவிரோதச் செயல் அல்லது பயங்கரவாத, தீவிரவாதச் செயல் என்று முத்திரை குத்தி அரசு எந்திரத்தை ஏவிவிட்டுத் தாக்குதல் நடத்துவது என்பது வாடிக்கையானதுதான். உள்நாட்டு விவகாரங்களில் அந்நியத் தலையீடும் நிதியுதவியும் இருப்பதாலேயே மக்கள் போராட்டங்கள் எல்லாம் தவறாகிவிடும் என்றால் வங்கதேசம் முதல் சமீபத்திய இலங்கை-ஈழம், மாலத்தீவு விவகாரங்களில் இந்திய அரசின் தலையீடு ஏற்கக்கூடியனவா?

கூடங்குளம் போராட்டத்துக்கு எதிரான மத்திய அரசின் சூழ்ச்சிகள், தந்திரங்கள், அடக்குமுறைகள் எல்லாவற்றிலும் ஜெயலலிதா அரசுக்கும் பங்கு இருக்கிறது. கூடங்குளம் போராட்டக்காரர்கள் மீது நூற்றுக்கணக்கான வழக்குகள் போட்டு, 'கியூ' பிரிவு போலீசை ஏவி, திரைமறைவு நடவடிக்கைகள் மேற்கொள்வது முதல் கடைசியாக பரமக்குடி பாணியில் கொலைவெறி தாக்குதல் தொடுப்பதற்கு வசதியாக ஏ.டி.ஜி.பி. ஜார்ஜ் தலைமையில் போலீசை அனுப்பி தயாரிப்புகள் செய்கிறது.

ஆனால், புலிகள் பிரபாகரனைப் போல ஜெயலலிதா உதவியுடன் மத்திய அரசை எதிர்த்துப் போராடி வெற்றி பெற முடியுமென்று உதயகுமார் நம்பச் சொல்கிறார். முள்ளிவாய்க்காலுக்கு நேர்ந்த முடிவு இடிந்தக்கரையிலும் ஏற்படக் கூடாது என்பதுதான் புரட்சிகர, ஜனநாயக சக்திகளின் அக்கறை, எச்சரிக்கை! ●

## குஜராத்-இந்து மதவெறிப் படுகொலைகள்:

# மறுக்கப்படும் நீதி!

**இந்து மதவெறி பயங்கரவாதிகளைச் சட்டப்படி தண்டிக்க முடியாது என்பதை குஜராத் படுகொலை வழக்கு விசாரணைகள் அம்பலப்படுத்துகின்றன.**

குஜராத் மாநிலத்தில் முசுலீம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இந்து மதவெறிப் படுகொலையின் பத்தாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, கடந்த பிப்ரவரி 27, 2012 அன்று அப்படுகொலை நிகழ்வில் பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்கு உரிய நீதி வழங்கக் கோரி பல்வேறு முசுலீம் அமைப்புகளும், ஜனநாயக - மனித உரிமை இயக்கங்களும் நாடெங்கும் ஆர்ப்பாட்டங்களை நடத்தின. அதே பத்தாண்டுகளுக்கு முன்பு கோத்ரா ரயில் நிலையத்தில் சபர்மதி விரைவுவண்டியின் இரு பெட்டிகள் தீக்கிரையாகி, 59 பேர் இறந்து போன வழக்கில் 11 முசுலீம்களுக்குத் தூக்கு தண்டனையும், 20 முசுலீம்களுக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கும்பொழுது, இந்து மதவெறிப் படுகொலை வழக்குகளில் தண்டிக்கப்பட்டவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

நீதிமன்றத்தை எட்டியிருக்கும் இப்படுகொலை வழக்குகளுள் பத்து-பதினைந்து வழக்குகளில் மட்டும்தான் விசாரணை முடிவடையும் தருவாயில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இப்படுகொலை வழக்குகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இந்து மதவெறிக் குண்டர்கள் பலரும் சிறைக்குப் போன வேகத்திலேயே பிணையில் வெளியே வந்துவிட்டனர். உள்ளூர் அளவில் இப்படுகொலைகளைத் தலைமையேற்று நடத்திய பாபு பஜ்ரங்கி, ஜெய்தீப் படேல், மாயா கோத்நானி உள்ளிட்ட பலரும் பிணையில் வெளியே வந்து சுதந்திரமாகச் சுற்றித் திரிவதோடு, படுகொலை வழக்குகள் தொடர்பான சாட்சியங்களைப் மிரட்டிப் பணிய வைக்கும் வேலைகளையும் பகிரங்கமாகச் செய்து வருகின்றனர். இவை அனைத்திற்கும் மேலாக, இந்து மதவெறி பயங்கரவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட இஷான் ஜாஃப்ரியின் மனைவி ஜாகியா ஜாஃப்ரி நரேந்திர மோடிக்கு எதிராக, தொடுத்த வழக்கில், மோடி மீது குற்றச்சாட்டு பதியப்படுமா என்பதைக்கூட இன்றுவரை நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை.

இப்படுகொலையை நடத்திய இந்து மதவெறிக் கும்பலே கடந்த பத்தாண்டுகளாக குஜராத்தை ஆண்டு வருவதும்; குஜராத் போலீசு, நீதித்துறை உள்ளிட்ட அம்மாநில அரசு நிர்வாக இயந்திரம் முழுவதும் காவிமயமாக்கப்பட்டிருப்பதும், மோடியின் கைக்கூலிகளால் நிரப்பப்பட்டிருப்பதும்; இன்னொருபுறம் இப்படுகொலை தொடர்பான சில வழக்குகளில் தலையிட்டு விசாரணை நடத்தி வரும் குஜராத் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம், சிறப்புப் புலனாய்வுக் குழு போன்ற அமைப்புகள் பல்வேறு சமயங்களில் இந்து மதவெறிக் கும்பலுக்கு ஆதரவாக, அனுசரணையாக நடந்துகொண்டு வருவதும் முசுலீம்களுக்கு நீதி மறுக்கப்படுவதற்குக் காரணங்களாக உள்ளன. சதித் திட்டம் தீட்டிக் கொடுத்த மோடி தொடங்கி தெருவில் இறங்கி இப்படுகொலையை நடத்திய மோடியின் கடைசி அடியாள் வரை - இவர்கள் அனைவருக்கும் எதிராக ஏராளமான சாட்சியங்கள், ஆதாரங்கள் இருந்தாலும், போலீசு, சிறப்புப் புலனாய்வுக் குழு, நீதித்துறை என்ற இந்தக் கூட்டணி சட்டத்தின் ஓட்டைகள், வரம்புகளைக் காட்டியும், இந்து மனோநிலையிலிருந்தும் அக்கொலைகாரர்களைத் தண்டனையிலிருந்து தப்பவைத்து விடுகிறது. இந்த அநீதி கடந்த பத்தாண்டுகளாக நடந்து வருவதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

இந்து மதவெறிப் படுகொலையின் பத்தாமாண்டு நினைவு தினத்தன்று, பாதிக்கப்பட்ட முசுலீம்கள் நீதி கேட்டு நடத்திய ஆர்ப்பாட்டம்.



**குஜராத் போலீசு:**

நரேந்திர மோடி குஜராத் முதல்வராகப் பதவியேற்றவுடனேயே, அம்மாநில போலீசு துறையை முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு காவிமயமாக்கும் திருப்பணியைச் செய்யத் தொடங்கினார். அம்மாநில அரசில் இருந்துவரும் 65 ஐ.பி.எஸ். பதவிகளுள் 64 பதவிகளை ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கு அனுசரணையாக நடந்து கொள்ளும் அதிகாரிகளைக் கொண்டு நிரப்பினார்.



நரேந்திர மோடிக்கு எதிராகச் சட்டப் போராட்டம் நடத்திவரும் ஜாகியா ஜாஃப்ரி.

இந்து மதவெறிப் படுகொலை தாண்டவமாடிய பொழுது,போலீசார் மோடியின் உத்தரவுப்படி, ''இந்துக்கள் தங்கள் கோபத்தை வெளிப்படுத்தியதை''த் தடுக்காததோடு, பல இடங்களில் இந்து மதவெறி குண்டர்களுக்குத் தேவையான ஆயுதங்களையும் கொடுத்தனர். விசுவ இந்து பரிசத்தைச் சேர்ந்த பாபு பஜ்ரங்கி, ரமேஷ் தாவே, அனில் படேல் ஆகியோர் இந்த உண்மைகளை வாக்குமூலமாக தெகல்கா இதழின் நிருபர் ஆஷிஷ் கேதானிடம் ஆரவாரத்தோடு கூறியுள்ளனர்.

இப்படுகொலையில் போலீசுக்கும் நேரடியாகத் தொடர்பிருப்பதால், 2,107 வழக்குகள் போலீசு நிலையத்திலேயே மங்களம் பாடி புதைக்கப்பட்டன. இப்படி விசாரணையின்றி மூடப்பட்ட வழக்குகளில் 1,594 வழக்குகளை மீண்டும் நடத்தக் கோரி உச்ச நீதிமன்றம் ஆணையிட்ட பிறகும், குஜராத் போலீசு வெறும் 117 வழக்குகளில் மட்டும் விசாரணை நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

ஜாகியா ஜாஃப்ரி மோடிக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கில் இப்படுகொலை தொடர்பாக 38 ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளையும் குற்றவாளிகளாகச் சேர்க்க வேண்டும் எனக் கோரியிருக்கிறார். அகமதாபாத் நகரிலுள்ள நரோடா பாட்டியா, நரோடா காவ்ன் பகுதிகளில் நடந்த படுகொலைகளுக்கு எம்.கே.டாண்டன், பி.பி. கோந்தியா என்ற இரு போலீசு உயர் அதிகாரிகள் உடந்தையாக இருந்ததை விசாரித்த சிறப்புப் புலனாய்வுக் குழு, அக்குற்றச்சாட்டை உறுதிப்படுத்தினாலும், அவர்கள் இருவர் மீதும் கிரிமினல் வழக்குத் தொடரப் பரிந்துரைக்காமல், துறைரீதியான நடவடிக்கை எடுத்தால் போதும் எனக் கூறிவிட்டது.

மதவெறிப் படுகொலையின்பொழுது, இந்து மதவெறிக் குண்டர்களோடு கைகோர்த்துக் கொண்ட போலீசாருக்குப் பிற்பாடு பதவி உயர்வு அளிக்கப்பட்டது; கொலைகாரக் கும்பலைக் கைது செய்யத் துணிந்த அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டனர். இதனை விசாரித்த சிறப்புப் புலனாய்வுக் குழு, ''இது வழக்கமான நிர்வாக நடைமுறை தான்; இதில் மோடி அரசிற்கு எந்த உள்நோக்கமும் கிடையாது'' எனக் கூறியது.

**நானாவதி - ஷா கமிசன்:**

இக்கமிசனின் நீதிபதிகளுள் ஒருவரான ஷாவை, ''எங்க ஆளு'' என்றும், மற்றொரு நீதிபதியான நானாவதியை, ''பணத்துக்காகத்தான் அவர் கமிசனில் சேர்ந்திருக்கிறார்'' என்றும் குறிப்பிட்டு, குஜராத்தின் முன்னாள் அட்வகேட் ஜெனரல் அர்விந்த் பாண்டியா தெகல்கா நிருபர் ஆஷிஷ் கேதானிடம் உண்மையைப் போட்டு உடைத்துள்ளார். அக்கமிசனின் விசாரணை முறையும், அதன் உண்மை சொரூபத்தைக் கடந்த பத்தாண்டுகளில் பலமுறை காட்டிக் கொடுத்திருக்கிறது.

நீதிபதி நானாவதி, தான் கமிசனில் சேர்ந்தவுடனேயே, ''கலவரங்களைக் கட்டுப்படுத்த போலீசு எடுத்த நடவடிக்கைகளில் எந்தக் குற்றங்குறையும் காணமுடியவில்லை'' எனப் பத்திரிக்கைகளுக்கு பேட்டி அளித்தார். ''சபர்மதி விரைவுவண்டியின் பெட்டிகள் எரிக்கப்பட்டது மிகப் பெரிய சதிச்செயல்'' என மோடிக்கு ஆதரவாக தீர்ப்பளித்திருக்கும் கமிசன், மதவெறிப் படுகொலைகள் பற்றிய விசாரணையை இழுத்தடிக்கும் வேலையைத்தான் கடந்த பத்தாண்டுகளாகச் செய்துவருகிறது. குறிப்பாக, படுகொலை நடந்து கொண்டிருந்த சமயத்தில், அந்த இடங்களில் இருந்த சங்கப் பரிவார அமைப்புகளின் தலைவர்களுக்கும் போலீசுஅதிகாரிகளுக்கும் இடையே நடந்த உரையாடல்கள் அடங்கிய ஒலித்தகடை, கமிசன் இன்றுவரை ஆய்வு செய்யவே மறுத்து வருகிறது.

நீதிபதி ஷா மார்ச், 2008-இல் இறந்த பிறகு, அவர் இடத்திற்கு அக்சய் மேத்தா என்ற நீதிபதியை மோடி அரசு நியமித்தது. நீதிபதி அக்சய் மேத்தா நரோடா பாட்டியா மற்றும் நரோடா காவ்ன் என்ற இரு இடங்களில் நடந்த படுகொலைகளைத் தலைமை தாங்கி நடத்திய பஜ்ரங் தள் அமைப்பைச் சேர்ந்த பாபு பஜ்ரங்கியைப் பிணையில் வெளியே அனுப்பி வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**கீழமை நீதித்துறை:**

குஜராத் மாநில விசுவ இந்து பரிசத் பொதுச் செயலர் திலீப் திரிவேதி, விசுவ இந்து பரிசத்தின் சபர்கந்தா மாவட்டத் தலைவரான பாரத் பட், பாஞ்ச்மஹால்

மாவட்ட விசுவ இந்து பரிசத்தின் தலைவர் பியுஷ் காந்தி என இவர்களைப் போன்ற சங்கப் பரிவார ஆட்கள்தான் மதவெறிப் படுகொலை வழக்குகள் அனைத்திலும் அரசு வழக்குரைஞர்களாக நியமிக்கப்பட்டனர். மேலும், மதவெறிப் படுகொலை வழக்குகளில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதாடிய வழக்குரைஞர்களை, அரசு வழக்குரைஞர்களாக நியமித்த கேலிக்கூத்தும் நடந்திருக்கிறது.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த இந்து மதவெறிக் குண்டர்களுக்கு விரைவாகப் பிணை கிடைக்க ஏற்பாடு செய்வது; சாட்சிகளை மிரட்டுவது, கலைப்பது அல்லது சாட்சிகளிடம் பேரம் நடத்தி வழக்கையே நீர்த்துப் போகச் செய்வது போன்ற சட்டவிரோத வேலைகளைத்தான் இந்தக் கும்பல் அரசு வழக்குரைஞர் என்ற போர்வையில் செய்து வருகிறது. கீழமை நீதிமன்ற நீதிபதிகள் இந்தச் சட்டவிரோதச் செயல்களைக் கண்டுகொள்ளவில்லை என்பதோடு, அந்நீதிமன்றங்கள் மோடியின் இன்னொரு மூளையாகத்தான் செயல்பட்டு வருகின்றன. கீழமை நீதிமன்ற நீதிபதிகள் குற்றவாளிகளுக்குச் சாதகமாகச் செயல்பட்டு வருவதை பெஸ்ட் பேக்கரி வழக்கு நாடெங்கும் அம்பலப்படுத்தியது.

நானாவதி - ஷா கமிசனின் சிறப்பு அரசு வழக்குரைஞராக நியமிக்கப்பட்ட அரவிந்த் பாண்டியா, ''ஒவ்வொரு நீதிபதியும் தொலைவில் இருந்துகொண்டே எங்களுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து வருகிறார்கள் ... ஏனென்றால், அவர்கள் அனைவரும் அடிப்படையில் இந்துக்கள்'' என நீதிபதிகளின் இந்து மனோபாவத்தை வெளிப்படையாகவே புட்டு வைத்தார்.

**உச்ச நீதிமன்றம் மற்றும் சிறப்புப் புலனாய்வுக் குழு:**

நரேந்திர மோடியைக் குற்றவாளியாகச் சேர்க்கக் கோரி ஜாகியா ஜாஃப்ரி தொடுத்த வழக்கு, பெஸ்ட் பேக்கரி வழக்கில் மறுவிசாரணை நடத்தக் கோரிய வழக்கு ஆகியவற்றில் குஜராத் உயர் நீதிமன்றம் மோடிக்கு ஆதரவாகவே தீர்ப்பு வழங்கியது. குஜராத் அரசு இயந்திரம் எந்த அளவிற்கு காவிமயமாகி இருக்கிறது என்பதற்கான சான்றுகளாகத்தான் உயர் நீதிமன்றத்தின் இத்தீர்ப்புகளைப் பார்க்க முடியும்.

குஜராத்தில் நடந்த மதவெறிப் படுகொலை தொடர்பான 9 முக்கிய வழக்குகளைத் தனது கண்காணிப்பின் கீழ் விசாரிப்பதற்குச் சிறப்புப் புலனாய்வுக் குழுவை உச்ச

## சிறப்புப் புலனாய்வுக் குழுவின் நயவஞ்சகம்-மோசடித்தனம்

சிறப்புப் புலனாய்வுக் குழுவை அமைக்க வேண்டும் என்ற காகித உத்தரவு மட்டும்தான் உச்ச நீதிமன்றத்திற்குச் சொந்தமானது. மற்றபடி, குஜராத் மாநில போலீசு அதிகாரிகளும், அம்மாநிலத்தைச் சேர்ந்த அரசு வழக்குரைகளும்தான் இக்குழுவின் இரத்தமும் சதையுமாக இயங்கியவர்கள். நரோடா மற்றும் குல்பர்க் சொசைட்டி பகுதிகளில் 500 முசுலீம்கள் படுகொலை செய்யப்பட்டதை வேடிக்கை பார்த்த ஆஷிஸ் பாட்டியா, சிவானந்த் ஜா என்ற இரு போலீசு அதிகாரிகள்கூடச் சிறப்புப் புலனாய்வுக் குழுவில் தலைமை விசாரணை அதிகாரிகளாகச் சேர்க்கப்பட்டிருந்தனர் என்றால், இந்தக் குழுவின் விசாரணை எந்தளவு நியாயமாக நடந்திருக்கும்?

இதற்கு உதாரணமாக சிறப்பு வழக்குரைஞர் ஆர்.கே.ஷாவின் பதவி விலகலைக் குறிப்பிடலாம். குல்பர்க் சொசைட்டி கொலை வழக்கின் விசாரணை அதிகாரியான டி.எஸ்.பி. ஜேம்ஸ் சுதர், அவ்வழக்கு விசாரணையில் நேர்மையாக நடந்துவந்த ஆர்.கே.ஷாவுக்கு ஒத்துழைப்பு கொடுக்க மறுத்ததால், இது பற்றி உச்ச நீதிமன்றத்திடம் புகார் அளித்துவிட்டு, ஆர்.கே.ஷா பதவி விலகினார்.

நரேந்திர மோடியை விசாரிப்பதற்கு சிறப்புப் புலனாய்வுக் குழுவின் சார்பாக ஏ.கே. மல்கோத்ரா என்ற போலீசு அதிகாரி அனுப்பி வைக்கப்பட்டார். இவர் குஜராத் மாநில போலீசு துறையைச் சாராதவர் என்ற போதும், விசாரணை நடத்தும் அளவிற்கு இப்பிரச்சினையோடு பரிச்சயம் இல்லாதவராக இருந்தார். சிறப்புப் புலனாய்வுக் குழு மோடியிடம் இப்படி பம்மாத்து விசாரணை நடத்தியதைத் தற்செயலானதாகப் பார்க்க முடியாது.

பாதிக்கப்பட்ட முசுலீம்கள் அடையாளம் காட்டிய குற்றவாளிகளை விசாரணைக்கு அழைக்க மறுத்தது; குற்றவாளிகளுக்கும் போலீசு அதிகாரிகளுக்கும் நடந்த உரையாடல்கள் அடங்கிய ஒலித்தகடுகளையும், தெல்கா நிருபர் ஆஷிஷ் கேதான் குற்றவாளிகளின் வாக்குமூலங்களை இரகசிய கேமராவில் பதிவு செய்ததையும் பரிசோதிக்க மறுத்தது; சாட்சிகளுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கத் தவறியது; குற்றவாளிகள் சாட்சிகளை மிரட்டிக் கலைத்து வந்ததைத் தடுக்கத் தவறியது என சிறப்புப் புலனாய்வுக் குழு குற்றவாளிகளுக்குச் சாதகமாக நடந்து கொண்டதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

இதுவொருபுறமிருக்க, குஜராத் இனப்படுகொலை குற்றவாளிகளுக்கும் சிறப்புப் புலனாய்வுக் குழுவிற்கும் இடையே இரகசியத் தொடர்பு இருப்பதும் ஏற்கெனவே அம்பலமாகியுள்ளது. குறிப்பாக, குஜராத் அரசின் கூடுதல் அட்வகேட் ஜெனரல் துஷார் மேத்தாவின் மின் அஞ்சல் முகவரியிலிருந்து சிறப்புப் புலனாய்வுக் குழுவின் வழக்கு விசாரணை குறித்த விவரங்கள் குல்பர்க் சொசைட்டி வழக்கின் கொலையாளிகளுக்கும், சென்னையிலுள்ள ஆர்.எஸ்.எஸ். பிரமுகர் எஸ்.குருமூர்த்திக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

குருமூர்த்தி, 17.10.2010 தேதியிட்டு இந்து என். ராமுக்கு அனுப்பியுள்ள மின்அஞ்சலின்படி, சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் ராகவன் உச்ச நீதிமன்றத்திற்குக் கொடுத்திருக்கும் 'இரகசிய அறிக்கையின்' நகலை குருமூர்த்திக்கும் அனுப்பி வைத்திருக்கிறார் எனத் தெரிகிறது. குஜராத் வழக்குகள் தொடர்பாக துக்ளக் சோ, இந்து ராம், குருமூர்த்தி ஆகியோரிடையே ஆலோசனை நடந்திருப்பதும் அந்த மின் அஞ்சலில் இருந்து தெரிய வருகிறது. இந்த மின் அஞ்சலின் பிரதிகளை உச்ச நீதிமன்றத்தில் ஆவணங்களாக முன்வைத்திருக்கிறார், சஞ்சீவ் பட்.

குஜராத் இனப்படுகொலையில் மோடியின் பங்கு குறித்த ஆதாரங்கள் மேலும் மேலும் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், சிறப்புப் புலனாய்வுக் குழு மோடியிடம் நடத்திய விசாரணையின் பொழுது அவர் அளித்த பதில்களைப் பத்திரிக்கைகள் வாயிலாகக் கசியவிட்டு (தி இந்து, பிப்.24, 2012), மோடியை அப்பழுக்கற்றவராகக் காட்டும் முயற்சியிலும் இறங்கியிருக்கிறது, ராகவன் கும்பல்.

நீதிமன்றம் அமைத்திருந்தாலும், இவ்வழக்குகளின் முடிவுகள் பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்கு நீதியை வழங்கும் என்பதற்கு எந்த விதமான உத்தரவாதமும் கிடையாது. நீதிபதிகள் வழக்கு விசாரணையின் பொழுது அடிக்கும் சவடால்களும் இறுதியில் அவர்கள் எழுதும் தீர்ப்புகளும் நேருக்கு மாறாக இருப்பதைப் பல வழக்குகளில் காணமுடியும்.

> **ராஜபக்சே நடத்திய ஈழத்தமிழர் படுகொலைக்கு இணையான குற்றங்களைச் செய்திருக்கும் மோடியின் மீது வெறும் மூன்றாண்டுகள் சிறை தண்டனை அளிக்கக்கூடிய குற்றச்சாட்டுகளைத்தான் பதிவு செய்ய முடியும் என்றால், இதைவிடக் கேலிக்கூத்தும் கையாலாகத்தனமும் வேறெதுவும் இருக்க முடியாது.**

அந்த 9 வழக்குகளுள் ஒன்றான சர்தார்புரா வழக்கில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருந்தாலும், சதிக் குற்றச்சாட்டின் கீழ் அவர்களுள் ஒருவர்கூடத் தண்டிக்கப்படவில்லை. சபர்மதி விரைவுவண்டியின் இரு பெட்டிகள் தீக்கிரையான வழக்கில் 11 முசுலீம்களுக்குத் தூக்கு தண்டனையும், 20 முசுலீம்களுக்கு ஆயுள் தண்டனையும் அளித்து வழங்கப்பட்ட தீர்ப்பில், சிறப்பு நீதிமன்றம், குஜராத் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம், சிறப்புப் புலனாய்வுக் குழு ஆகிய நான்கும் ஜாடிக்கேத்த மூடியாய்ச் செயல்பட்டுள்ளன.

''முசுலீம்கள் அனைவரும் அடிப்படைவாதிகள்'' என இந்து மதவெறி விஷத்தைக் கக்கிவரும் நோயல் பார்மர் என்ற ஐ.பி.எஸ். அதிகாரியைத்தான் சிறப்புப் புலனாய்வுக் குழு இவ்வழக்கின் விசாரணை அதிகாரியாக முதலில் நியமித்தது. மனித உரிமை அமைப்புகளும், குற்றஞ்சுமத்தப்பட்ட முசுலீம்களும் பார்மரின் நியமனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த பிறகு, பார்மரின் வலது கையான ரமேஷ் படேல் என்பவர் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். பிறகெப்படி இவ்வழக்கு விசாரணை நடுநிலையாக நடந்திருக்க முடியும்? இந்த இரண்டு நியமனங்களையும் உச்ச நீதிமன்றம் கண்டுகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

லல்லு பிரசாத் யாதவ் ரயில்வே அமைச்சராக இருந்தபொழுது அமைத்த பானர்ஜி கமிசன், ''சபர்மதி விரைவுவண்டியின் பெட்டிகள் தீக்கிரையானது சதிச் செயல் அல்ல''எனத் தீர்ப்பளித்தது. இந்த அறிக்கையைத் தடை செய்ததோடு, அதனைச் சட்ட விரோதமானது என்றும் கூறி 2005 - இல் தீர்ப்பளித்தது குஜராத் உயர் நீதிமன்றம். அத்தீர்ப்பைத் தடைசெய்ய முடியாது என 2006 - இல் தீர்ப்பளித்தது, உச்ச நீதிமன்றம். சிறப்பு நீதிமன்றம் சபர்மதி விரைவுவண்டியின் பெட்டிகள் தீக்கிரையானதைப் பயங்கரவாதிகளின் சதிச்செயல் எனத் தீர்ப்பளித்து, முசுலீம்களுக்கு தூக்கு தண்டனையும், ஆயுள் தண்டனையும் வழங்கியிருப்பதை உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற தீர்ப்புகளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது.

நரேந்திர மோடி உள்ளிட்டு 63 பேருக்கு எதிராக ஜாகியா ஜாஃப்ரி தொடுத்த வழக்கில், மோடியை விடுவிக்கும் உள்நோக்கத்துடன்தான் தனது விசாரணையை சிறப்புப் புலனாய்வுக் குழு நடத்தி வந்தது. ''விசாரணைக்கும் அதன் இறுதியில் வந்தடைந்த முடிவுகளுக்கும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை'' என இந்த உள்நோக்கம் பற்றி பட்டும் படாமல் கருத்துத் தெரிவித்த உச்ச நீதிமன்றம், நீதிமன்ற நண்பனாக ராஜூ ராமச்சந்திரன் என்ற வழக்குரைஞரை நியமித்து, சிறப்புப் புலனாய்வுக் குழுவின் அறிக்கைககளை ஆய்வு செய்து, தனியாக அறிக்கை தருமாறு உத்தரவிட்டது. எனினும், மோடி மீது குற்-

இந்து மதவெறிக் கும்பல் நடத்திய தாக்குதலால், சுடுகாடு போல் ஆகிப் போன குல்பர்க் சொசைட்டியைப் பார்வையிடும் தீஸ்தா செதல்வாத் மற்றும் அவரது ஆதரவாளர்கள். (கோப்புப் படம்)



றச்சாட்டினைப் பதிவு செய்ய வேண்டிய தருணத்தில், அந்த இக்கட்டிலிருந்து தப்பித்துக் கொள்ள, சட்டத்தின் வரம்பினைக் காட்டி, இது பற்றி முடிவெடுப்பதை அகமதாபாத் பெருநகர நீதிமன்றத்திடம் தள்ளிவிட்டது, உச்ச நீதிமன்றம். மேலும், மோடிக்கு எதிரான ஜாகியா ஜாஃப்ரியின் வழக்கை இனி கண்காணிக்கப் போவதில்லை என்றும் அறிவித்தது.

ஜாகியா ஜாஃப்ரி இந்த வழக்கில், மோடி மீது 32 குறிப்பான குற்றச்சாட்டுக்களை ஆதாரத்தோடு கூறியிருந்தார். இந்த 32 குற்றச்சாட்டுகளுள், சபர்மதி விரைவு வண்டியின் இரண்டு பெட்டிகள் தீக்கிரையான அன்றிரவு நரேந்திர மோடி தனது அதிகாரபூர்வ இல்லத்தில் நடத்திய அதிகாரிகள் கூட்டத்தில், ''இந்துக்கள் தங்களது கோபத்தை வெளிப்படுத்துவதைத் தடுக்காதீர்கள் என உத்தரவிட்டார்'' என்ற குற்றச்சாட்டு மிக முக்கியமானதாகும். ஜாகியா ஜாஃப்ரி, தனது இக்குற்றச்சாட்டுக்குச் சாட்சியமாக, படுகொலை நடந்த பொழுது குஜராத் மாநில அரசின் உளவுத் துறையில் துணை ஆணையராகப் பணியாற்றி வந்த சஞ்சீவ் பட்டைக் குறிப்பிட்டிருந்தார். மோடி நடத்திய இக்கூட்டத்தை, ''மிகப் பெரிய சதியின் தொடக்கம்'' எனக் குறிப்பிட்டு வரும் சஞ்சீவ் பட், சிறப்புப் புலனாய்வுக் குழுவின் முன் ஆஜராகி, தான் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதற்கான ஆதாரங்களைத் தந்து, இக்குற்றச்சாட்டை உறுதிப்படுத்தினார்.

சிறப்புப் புலனாய்வுக் குழு தற்பொழுது அகமதாபாத் பெருநகர நீதிமன்றத்திடம் அளித்துள்ள அறிக்கையில் சஞ்சீவ் பட் அக்கூட்டத்தில் கலந்து கொண்டிருப்பதாகக் கூறுவதை நம்ப முடியாது எனக் கூறியிருக்கிறது. இந்த அறிக்கை அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை என்றாலும், அறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய முடிவுகள் ஊடகங்கள் வாயிலாக கசிந்து வெளிவந்துவிட்டன.

மோடி நடத்திய அந்தக் கூட்டத்தில் சஞ்சீவ் பட் உள்ளிட்டு எட்டு அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர். அந்தக் கூட்டத்தில் பட் கலந்துகொண்டது பற்றிய கேள்விக்கு மற்ற ஏழு அதிகாரிகளுள் மூன்று பேர் நினைவில்லை எனப் பதில் அளித்துள்ளனர்; மூன்று பேர் ''வரும், ஆனா வராது'' என்ற பாணியில் தெளிவில்லாத பதிலை அளித்துள்ளனர். ஒரேயொரு அதிகாரி மட்டும்தான் பட் கலந்து கொள்ளவில்லை எனப் பதில் அளித்தார். இந்த ஏழு அதிகாரிகளுள் மூன்று பேர் மோடிக்கு மிகவும் நெருக்கமாக இருந்ததால், அவர்கள் தமது பதவி ஓய்விற்குப் பின்பு மோடியின் தயவால் பசையான பதவியில் அமர்ந்துள்ளனர். ஒருபுறம் இந்த ஏழு அதிகாரிகளையும் நம்பமுடியாத சாட்சியங்கள் எனக் குறிப்பிடும் சிறப்புப் புலனாய்வுக் குழு, இன்னொருபுறம் சஞ்சீவ் பட் விவகாரத்தில் இந்த நம்ப முடியாத ஏழு அதிகாரிகளின் சாட்சியங்களைக் கொண்டு, சஞ்சீவ் பட் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என முரண்பாடான முடிவை அறிவித்திருக்கிறது; சஞ்சீவ் பட் அக்கூட்டத்தில் கலந்து கொண்டதை நிரூபிக்கும் வேறு சாட்சியங்களை விசாரிக்கவும் மறுத்துவிட்டது. (பார்க்க: பெட்டிச்செய்தி)

## உண்மையைப் பேசும் சாட்சியங்கள்

**கோ**த்ரா தொடர்வண்டி நிலையத்தில் பிணங்கள் விழுந்த அன்றிரவு (பிப்.27, 2002) நரேந்திர மோடி கூட்டிய உயர் அதிகாரிகள் கூட்டத்தில் சஞ்சீவ் பட் கலந்து கொண்டிருந்தார் என குஜராத் போலீசு துறையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள நரேஷ் ஹர்மன்பாய் பிரம்பட் என்ற தலைமைக் காவலர் உச்ச நீதிமன்றத்திடம் சாட்சியம் அளித்திருக்கிறார். மோடிக்கு எதிராக உண்மையைப் பேசத் துணிந்த சஞ்சீவ் பட்டைப் பாராட்டிய ஒரே காரணத்திற்காகப் பதவி நீக்கம் செய்யப்பட்டவர் நரேஷ் ஹர்மன்பாய்.

நரேஷ் ஹர்மன்பாய் சம்பவ நாளன்று சஞ்சீவ் பட்டின் வீட்டிற்கு அருகாமையிலுள்ள மேம்நகர் போலீசு நிலையத்தில் பணியாற்றியுள்ளார். அன்றிரவு சுமார் 9.30 மணியிலிருந்து 10.00 மணிக்குள் இப்போலீசு நிலையத்தைத் தொடர்பு கொண்ட போலீசு கட்டுப்பாடு அறை அதிகாரிகள், ''சஞ்சீவ் பட் மோடியின் இல்லத்தில் நடைபெறவுள்ள கூட்டத்திற்குக் கிளம்பிச் சென்றுவிட்டாரா, இல்லையா என போலீசு தலைமை இயக்குநர் கேட்பதாக''த் தகவல் அளித்துள்ளனர். இந்த விவரத்தை அறிந்து சொல்ல தானே சஞ்சீவ் பட்டின் வீட்டிற்குச் சென்றதாகக் கூறுகிறார், இந்த முன்னாள் தலைமைக் காவலர்.

இவர் சஞ்சீவ் பட்டின் வீட்டிற்குச் சென்று இந்த விவரத்தைக் கேட்டபொழுது, ''சஞ்சீவ் பட் காந்தி நகர் கூட்டத்திற்குக் கிளம்பிப் போய்விட்டதாகவும், தான் பட்டின் வீட்டிற்குச் செல்வதற்குச் சற்று முன்னால், இது பற்றிய விவரத்தை போலீசு கட்டுப்பாடு அறை அதிகாரிகள் கேட்டுத் தெரிந்து கொண்டதாகவும்'' பட்டின் மனைவி இவரிடம் தெரிவித்திருக்கிறார்.

இந்நிகழ்வுகளைப் பிரமாண வாக்குமூலமாக அளித்துள்ள நரேஷ் ஹர்மன்பாய், இதற்கு ஆதாரமாக மேம்நகர் போலீசு நிலையத்தில் தான் பணியாற்றி வந்தபொழுது தனது அன்றாட நடவடிக்கைகள் பற்றிப் பதியப்படும் குறிப்பேட்டின் நகலையும் உச்ச நீதிமன்றத்திடம் அளித்திருக்கிறார். வேறு வேலை தேடிக் கொண்டிருக்கும் நரேஷ் ஹர்மன்பாய், இந்த இக்கட்டான நிலையிலும் தனது வாக்குமூலத்தைத் திரும்பப் பெறப் போவதில்லை என உறுதியாக நிற்கிறார்.

இவர் தவிர, சம்பவ நாளன்று சஞ்சீவ் பட்டை பேட்டி எடுப்பதற்காக அவரது வீட்டிற்கு வந்திருந்த பி.பி.சி. நிருபர் சுப்ரான்ஷு சௌத்ரி, ''மோடியின் வீட்டில் நடக்கும் கூட்டத்திற்குத் தான் அவசரமாகச் செல்ல வேண்டும் என சஞ்சீவ் பட் கூறிவிட்டு, பேட்டியைப் பாதியிலேயே முடித்துக் கொண்டார்'' எனக் குறிப்பிட்டுத் தனது சாட்சியத்தை உச்ச நீதிமன்றத்திடம் பதிவு செய்திருக்கிறார்.

சிறப்புப் புலனாய்வுக் குழு இந்த இரண்டு சாட்சியங்களையும் விசாரிக்காமல் புறக்கணித்துவிட்டது. ஒரு வேளை மோடியே முன்வந்து காந்தி நகர் கூட்டத்தில் சஞ்சீவ் பட் கலந்து கொண்டார் எனச் சாட்சியம் அளித்தாலும், அதையும் கூட நம்பமுடியாது எனச் சிறப்புப் புலனாய்வுக் குழு அடித்துச் சொல்லக்கூடும்!

ஜாகியா ஜாஃப்ரி மோடிக்கு எதிராகத் தொடுத்த வழக்கில் நீதிமன்ற நண்பனாக நியமிக்கப்பட்ட வழக்குரைஞர் ராஜூ ராமச்சந்திரன் அளித்திருக்கும் அறிக்கை, சிறப்புப் புலனாய்வுக் குழுவின் அறிக்கையிலிருந்து ஓரளவிற்கு வேறுபட்டிருக்கிற உண்மையும் ஊடகங்கள் வாயிலாகக் கசிந்து வெளிவந்துவிட்டது. குறிப்பாக, அவரது அறிக்கை மோடி நடத்திய கூட்டத்தில் பட் கலந்து கொண்டிருக்கக் கூடும் என்பதற்குப் பல்வேறு சந்தர்ப்ப சாட்சியங்களை முன்வைத்துள்ளது. மேலும், சஞ்சீவ் பட்டின் சாட்சியத்தை நீதிமன்றத்தின் முன் வைத்து, அவரை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தியிருக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்திருக்கிறது.



வழக்குரைஞர் ராஜூ ராமச்சந்திரன்

''நரேந்திர மோடிக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்குப் போதிய ஆதாரமோ, விசாரிக்கத்தக்க சாட்சியமோ இல்லை; இப்படுகொலை தொடர்பாகச் சில சில்லறைத் தவறுகள் நடந்திருக்கலாமேயொழிய, மோடிக்குக் கிரிமினல் உள்நோக்கம் எதுவுமில்லை; அந்தத் தவறுகளும்கூட மோடி மீது குற்றஞ்சுமத்தி வழக்குத் தொடுக்கும் அளவிற்கு வலுவானவையல்ல'' எனக் கூறி, மோடியின் மீது சுமத்தப்பட்ட 32 குற்றச்சாட்டுகளிலிருந்தும் அவரை விடுவித்துவிட்டது, சிறப்புப் புலனாய்வுக் குழு.

குஜராத்தில் கடந்த பத்தாண்டுகளாக முசுலீம்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுவதற்குப் பல சான்றுகள் உள்ளன. இனப்படுகொலையில் பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்கு நீதி வழங்குவது ஒருபுறமிருக்கட்டும்; அவர்களுக்கு உரிய நட்ட ஈடுகூட வழங்காமல் வக்கிரமாக நடந்துவருகிறது, மோடி அரசு. இப்படிபட்ட நிலையில், மோடிக்கு இந்த இனப்படுகொலை தொடர்பாக எந்தவிதமான கிரிமினல் உள்நோக்கமும் கிடையாது என்ற முடிவை அறிவிக்க சிறப்புப் புலனாய்வுக் குழு துணிகிறதென்றால், இதிலிருந்தே இந்தக் குழு காவிச் சிந்தனையில் ஊறிப் போன நயவஞ்சகக் கும்பல் என்பதை நாம் புரிந்துகொண்டுவிடலாம். இந்த அறிக்கை மோடியைப் பிரதமராக்கிவிடத் துடித்துக் கொண்டிருக்கும் பார்ப்பனக் கும்பலின் வக்கிரத்தை விசிறிவிடத்தான் பயன்படுகிறது.

அதே சமயம், ஊடகங்களால் பெருத்த எதிர்பார்ப்புக்கு உள்ளாக்கப்பட்ட ராஜூ ராமச்சந்திரனின் அறிக்கையோ, இம்மதவெறி படுகொலை தொடர்பான சதித் திட்டத்தில் மோடிக்கு உள்ள பங்கு குறித்துப் பேசாமல், இரண்டு மதத்தைச் சேர்ந்தவர்களிடையே பகைமையைத் தூண்டிவிடுதல், சட்டத்தை மதிக்காது அரசு ஊழியர் நடத்தல் போன்ற இரண்டாம்பட்சமான குற்றச்சாட்டுகளைத்தான் மோடி மீது சுமத்தியிருக்கிறது. அகமதாபாத் பெருநகர நீதிமன்றம் ஒருவேளை சிறப்புப் புலனாய்வுக் குழுவின் அறிக்கையை நிராகரித்துவிட்டு, ராஜூ ராமச்சந்திரனின் அறிக்கையை விசாரணைக்கு எடுத்துக் கொண்டால், இவ்வழக்கு விசாரணையின் முடிவில், ஒருவேளை நரேந்திர மோடிக்கு மூன்று ஆண்டுவரை சிறை தண்டனை கிடைக்கக்கூடும்.

இட்லர் நடத்திய யூத இனப் படுகொலைக்கு இணையான, ராசபக்சே நடத்திய ஈழத்தமிழர் படுகொலைக்கு இணையான குற்றங்களைச் செய்திருக்கும் மோடியின் மீது, குஜராத்தில் பல போலி மோதல் கொலைகளை நடத்தியிருக்கும் மோடியின் மீது வெறும் மூன்றாண்டுகள் சிறை தண்டனை அளிக்கக்கூடிய குற்றச்சாட்டுகளைத்தான் பதிவு செய்ய முடியும் என்றால், இதைவிடக் கேலிக்கூத்தும் கையாலாகத்தனமும் வேறெதுவும் இருக்க முடியாது.

மதச்சார்பின்மை, சிறுபான்மையினர் பாதுகாப்பு என நீட்டி முழங்கும் எந்தவொரு ஓட்டுக்கட்சியும் இந்த வெட்கக்கேட்டைக் கண்டிக்க முன்வரவில்லை. இது மட்டுமல்ல; காங்கிரசு, போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு மதச்சார்பின்மை பேசும் ஓட்டுக்கட்சிகளில் ஒன்றுகூட, கடந்த பத்தாண்டுகளில் பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்கு நீதியைப் பெற்றுத் தருவதற்கு ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடவில்லை. மோடி தன்னைத் தற்காத்துக் கொள்ள முன்வைக்கும் இந்து மதவெறியும் குஜராத் பெருமையும் கலந்த அரசியலை எதிர்கொள்ளத் திராணியற்று, இந்த ஓட்டுக்கட்சிகள் ஒடுங்கிக் கிடந்தனர் என்பதே உண்மை. ''மோடியைக் கொல்ல முசுலீம் தீவிரவாதிகள் குஜராத்திற்கு வருவதாக'' உளவுத் தகவல்களை அனுப்பி, மோடியின்இந்து மதவெறி அரசியலுக்குத் தீனிபோடும் வேலையைத்தான் காங்கிரசு செய்து வந்தது. தீஸ்தா செதல்வாத், ஹர்ஷ் மந்தேர், மல்லிகா ஷெராவத் போன்றவர்கள்தான் பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்கு ஆதரவாக, மோடியை எதிர்த்துக் களத்தில் நிற்கிறார்கள்.

துக்ளக் சோ போன்ற பார்ப்பன பாசிஸ்டுகள் போலி மோதல் கொலைகள் மூலம்தான் முசுலீம் தீவிரவாதத்தை ஒழித்துக் கட்ட முடியுமே தவிர, சட்டம் - நீதிமன்றம் மூலம் இதனைச் சாதிக்க முடியாது என வெளிப்படையாகவே கூறிவருகின்றனர். அரசியல் செல்வாக்குமிக்க இந்து மதவெறி பயங்கரவாதிகளான மோடி, அத்வானி, பால் தாக்கரே போன்றவர்களைச் சட்டப்படி தண்டிக்க முடியாது எனும்பொழுது, சோவின் வாதத்தை இக்கும்பலுக்கு நாம் ஏன் பொருத்தக்கூடாது?

● குப்பன்

# ஹரி மசூதி படுகொலை வழக்கு:

# சி.பி.ஐ.-க்குள் ஒளிந்திருக்கும் காவித்தனம்!

**“முசுலீம் பொய் சொல்வான்; இந்து பொய் சொல்லமாட்டான்” என்பதுதான் சி.பி.ஐ.யின் விசாரணை அணுகுமுறையாக உள்ளது.**

இருபது ஆண்டுகளுக்கு முன்பு, அயோத்தியில் பாபர் மசூதியை இடித்துத் தள்ளிய கையோடு ஆர்.எஸ்.எஸ்.-சிவசேனா கும்பல் மும்பய் நகரில் நடத்திய கலவரத்தின் பொழுது, அந்நகரின் வடாலா பகுதியில் அமைந்துள்ள ஹரி மசூதியில் தொழுகை நடத்திக் கொண்டிருந்த முசுலீம்கள் மீது மும்பய் மாநகர போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 5 முசுலீம்கள் கொல்லப்பட்டனர்; மற்றொருவர் ‘காணாமல்’ போனார். மும்பய் உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற உத்தரவின்படி இப்படுகொலை சம்பவத்தைக் கடந்த மூன்றாண்டுகளாக விசாரித்து வந்த மையப் புலனாய்வுத் துறை, ‘‘இத்துப்பாக்கிச் சூடு சட்டவிரோதமான முறையில் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை உறுதி செய்யும் சுதந்திரமான சாட்சியங்கள் (Neutral witnesses) எதுவுமில்லை’’ என நீதிமன்றத்தில் கடந்த டிசம்பரில் அறிக்கை அளித்திருக்கிறது. இத்துப்பாக்கிச் சூடு சம்பவமும், அது பற்றி மையப் புலனாய்வுத்துறை விசாரணை நடத்தி முடிவுக்கு வந்த விதமும் இந்து மதவாதம் அரசு இயந்திரத்தின் பல்வேறு பிரிவுகளிலும் எத்துணை ஆழமாக ஊடுருவி நிறைந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன.

ஹரி மசூதியில் துப்பாக்கிச் சூடு நடத்தி அப்பாவி முசுலீம்களைப் படுகொலை செய்த போலீசாரைத் தண்டிக்கக் கோரிநீதி சட்டரீதியான போராட்டம் நடத்திய ஃபரூக் மாப்கர்.



ஜனவரி, 1993 - இல் ஆர்.எஸ்.எஸ். - சிவசேனை கும்பல் தலைமையில் நடந்த இந்து மதவெறிக் கலவரம் மும்பய் நகரெங்கும் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த ஒரு மதிய வேளையில், போலீசு உதவி ஆய்வாளர் நிகில் காப்சே தலைமையில் வந்த போலீசு பட்டாளமொன்று ஹரி மசூதியைச் சுற்றி வளைத்தது. மதிய வேளை தொழுகை நடந்துகொண்டிருந்த நேரமது. அக்காக்கிச் சட்டை கிரிமினல் கும்பல் எவ்வித முன்னெச்சரிக்கையும் செய்யாது, மசூதிக்குள் தொழுகை நடத்திக் கொண்டிருந்த முசுலீம்களை நோக்கிச் சுட்டதில் நான்கு பேர் மசூதிக்குள்ளேயே குண்டடிபட்டு இறந்து போனார்கள். ஒருவர் மசூதியிலிருந்து வெளியேற முயன்றபொழுது, நேருக்கு நேராக மிகவும் அருகாமையிலிருந்து சுட்டுக் கொல்லப்பட்டார். சுட்டுக் கொல்லப்பட்ட முசுலீம்களின் உடல்களை போலீசு வேனில் எடுத்துப்போட்டு அப்புறப்படுத்திய மற்றொரு முசுலீம் அதற்குப் பின்‘காணாமல்’ போனார். பலர் படுகாயமடைந்தனர். இத்துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்துவதற்காக, ஹரி மசூதிப் பகுதியில் முசுலீம்கள் கலவரத்தில் இறங்கியதாகவும் கொலைவெறியோடு இந்துக்களைத் தாக்கியதாகவும் மும்பய் போலீசாரால் கதை புனையப்பட்டதோடு, அப்பொய்க் குற்றச்சாட்டின் அடிப்படையில் 50 முசுலீம்கள் கைது செய்யப்பட்டனர்.

இத்துப்பாக்கிச் சூடு நடந்த ஒருசில நாட்களிலேயே அது பற்றி விசாரணை நடத்திய சர்வதேச பொதுமன்னிப்புக் கழகம் (Amnesty International) மும்பய் போலீசின் கட்டுக்கதையை அம்பலப்படுத்தியதோடு, நிகில் காப்சேயின் தலைமையில் துப்பாக்கிச் சூடு நடத்திய போலீசு பட்டாளத்தைக் குற்றவாளியாகவும் அறிவித்தது. மும்பய்க் கலவரம் பற்றி விசாரணை நடத்துவதற்காக மகாராஷ்டிர மாநில அரசால் நியமிக்கப்பட்ட சிறீ கிருஷ்ணா கமிசனும், ‘‘மனிதத்தன்மையற்ற முறையிலும் மிகக் கொடூரமாகவும் நடத்தப்பட்ட இத்துப்பாக்கிச் சூட்டை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது’’ எனத் தீர்ப்பளித்தது.

இத்துப்பாக்கிச் சூடு பற்றிய கிருஷ்ணா கமிசனின் பரிந்துரையை மகாராஷ்டிரா மாநிலத்தைப் பத்தாண்டுகளுக்கு முன்பு ஆண்ட பா.ஜ.க. - சிவசேனா கூட்டணியும் சரி,

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக அம்மா நிலத்தை ஆண்டு வரும் காங்கிரசு - தேசியவாத காங்கிரசு கூட்டணியும் சரி, ஒரு பொருட்டாக மதிக்கவேயில்லை. கலவரத்தின்பொழுது இந்து மத வெறி கிரிமினல் கும்பலுக்குத் துணையாக நின்ற போலீசு அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு அளித்து கௌரவிக்கும் வேலையை இவ்விரண்டு அரசுகளுமே சிரமேற்கொண்டு செய்தன.

இந்நிலையில் இத்துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் படுகாயமடைந்த ஃபரூக் மாப்கர், அப்பாவி முசுலீம்களைச் சட்டவிரோதமான முறையில் படுகொலை செய்த போலீசாரைத் தண்டிக்கக் கோரிப் போராடத் தொடங்கினார். இதனையடுத்து, நிகில் காப்சே உள்ளிட்ட போலீசார் மீது துறைரீதியான விசாரணை என்ற நாடகத்தை நடத்தி, அவர்களை உத்தமர்களாக அறிவித்தது, மாநில அரசு. இதன் பின்னர், உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் படி, ஹரி மசூதி படுகொலை உள்ளிட்டு, அக்கலவரத்தின்பொழுது நடந்த பல படுகொலை சம்பவங்களை விசாரிப்பதற்காகச் சிறப்புப் புலனாய்வுக் குழு ஏற்படுத்தப்பட்டது. மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த போலீசு அதிகாரிகளைக் கொண்டே உருவாக்கப்பட்ட இச்சிறப்புப் புலனாய்வுக் குழுவும் ஹரி மசூதி உள்ளிட்ட பெரும்பாலான வழக்குகளை ஊத்தி மூடும் வேலையைச் சட்டப்படியே செய்து முடித்தது. இனி மாநில அரசை நம்ப முடியாது என்ற நிலையில் இப்படுகொலை பற்றி சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரி ஃபரூக் மாப்கர் வழக்கு தொடுத்தார்.

இவ்வழக்கு மும்பய் உயர் நீதிமன்றத்தில் நடந்தபொழுது, ''இது சாதாரணமான வழக்கு'' எனக் கூறி, இவ்வழக்கு விசாரணையை மீண்டும் மகாராஷ்டிரா போலீசிடமே தள்ளிவிட முயன்றது, சி.பி.ஐ. எனினும், ஹரி மசூதி படுகொலையை சி.பி.ஐ. விசாரிக்குமாறு மும்பய் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மகாராஷ்டிரா மாநில அரசு இத்தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டது. இம்மேல்முறையீட்டின்பொழுது, ''போலீசு அதிகாரி நிகில் காப்சே இவ்வழக்கின் காரணமாக கடந்த 16 ஆண்டுகளாகப் பெரும் மனஉளைச்சலுக்கு ஆளாகியிருப்பதாக'' வாதாடியது, காங்கிரசு கூட்டணி அரசு.

இத்துணை இழுத்தடிப்புகள், எதிர்ப்புகளுக்குப் பின் விசாரணையைத் தொடங்கிய சி.பி.ஐ., இத்துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து உயிர் பிழைத்த முசுலீம்களின் சாட்சியங்களை ஏற்றுக் கொள்ள மறுத்தது. ''அவர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டவர்கள்; எனவே, அவர்களின் சாட்சியத்தை சுதந்திரமான சாட்சியமாகவோ, நம்பகமான சாட்சியமாகவோ கருத முடியாது'' என அவர்களுக்கு உள்நோக்கம் கற்பித்து அந்த சாட்சியங்களை நிராகரித்தது. மேலும், நிகில் காப்சே உள்ளிட்ட போலீசு அதிகாரிகளுக்கு எதிராகச் சாட்சியம் அளித்த முசுலீம்கள் அனைவரின் மீதும் கலவர வழக்குகள் பதிவாகியுள்ளன என்ற காரணத்தையும் வலிந்து சுட்டிக்காட்டியது. அவ்வழக்குகள் பொய் வழக்குகள் என்பதையோ, அந்த உண்மை நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டு குற்றஞ்சுமத்தப்பட்ட முசுலீம்கள் அனைவரும் நிரபராதிகள் என விடுதலை செய்யப்பட்டதையோ ஒதுக்கி வைத்துவிட்ட சி.பி.ஐ., பாதிக்கப்பட்ட முசுலீம்களைக் குற்றவாளிகளாகவே கருதி ஒருதலைப்பட்சமாகவே தனது விசாரணையை நடத்தியது.



அயோத்தி பாபர் மசூதியை இடித்ததோடு ஆர்.எஸ்.எஸ். - சிவசேனா இந்துவெறி பயங்கரவாத கும்பல் மும்பை நகரில் நடத்திய கலவரத்தில் அப்பாவி முசுலீம்கள் கொல்லப்பட்ட கொடூரம்.

இவ்விசாரணையின்பொழுது, பக்க சார்பு அற்றவர்கள் என்று தன்னால் மதிப்பிடப்பட்ட இரு சாட்சிகளும் சி.பி.ஐ.-ஆல் விசாரிக்கப்பட்டனர். அதிலொருவர் இந்து; மற்றொருவர், முசுலீம் மதத்தைச் சேர்ந்தவர். அந்த இந்துவின் சாட்சியம் துப்பாக்கிச் சூடு தொடர்பாக ஃபரூக் மாப்கர் அளித்த சாட்சியத்திலிருந்து வேறுபட்டிருந்தது. முசுலீம் மதத்தைச் சேர்ந்தவர் அளித்த சாட்சியமோ, பாதிக்கப்பட்ட முசுலீம்கள் அளித்த சாட்சியங்களை ஒத்திருந்தது. ஒரு இந்து அளித்த சாட்சியத்தை நம்பத்தக்கது என்று ஏற்றுக்கொண்ட சி.பி.ஐ., மற்றொரு சாட்சியம் அளித்த வாக்குமூலத்தை, அவர் முசுலீம் என்பதனாலேயே நிராகரித்தது.

இவை அனைத்தும் சி.பி.ஐ. நடத்திய விசாரணை ஆர்.எஸ்.எஸ். சார்பு இந்து மதவாதக் கண்ணோட்டத்தில், அதாவது, இந்து பொய் சொல்லமாட்டான், துப்பாக்கிச் சூடு சட்டவிரோதமாக நடந்திருந்தாலும், துப்பாக்கியால் சுட்டவன் நம்ம ஆளு என்ற முசுலீம் வெறுப்பு அரசியல் அடிப்படையிலும்; இந்து மதவெறி கொண்ட போலீசாரைக் காப்பாற்ற வேண்டும் என்ற உள்நோக்கத்தோடும் தான் நடத்தப்பட்டுள்ளது என்பதை நிரூபித்துக் காட்டுகின்றன. ஃபரூக் மாப்கர் சி.பி.ஐ. அளித்துள்ள இந்த அறிக்கையை நிராகரிக்கக் கோரி தற்பொழுது வழக்கு தொடுத்திருக்கிறார்.

குஜராத் இனப் படுகொலையின்பொழுது நடந்த குல் பர்க் சொசைட்டி படுகொலைகளுக்கும் மோடிக்கும் உள்ள தொடர்பு குறித்து விசாரிக்க உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சிறப்பு விசாரணைக் குழு, மோடிக்கும் அப்படுகொலைக்கும் தொடர்பில்லை என அறிக்கை அளித்திருப்பதாகக் கூறப்படுவதையும், ஹரி மசூதி படு கொலை வழக்கில் தொடர்புடைய காக்கிச்சட்டை கிரி மினல்களை விடுவித்து சி.பி.ஐ., இறுதி அறிக்கை அளித் திருப்பதையும் வெவ்வேறானதாகப் பிரித்துப் பார்க்க முடி யாது.

அதுபோல, குஜராத் இனப் படுகொலையில் பாதிக் கப்பட்ட முசுலீம்களுக்கு நீதி வழங்க மறுத்துவரும் ஆர்.எஸ்.எஸ். கும்பலையும், மும்பய்க் கலவரத்தில் பாதிக்கப்பட்ட முசுலீம்களுக்கு நீதி வழங்க மறுத்துவரும் காங்கிரசையும் இருவேறு துருவங்களாகப் பார்க்க முடியாது.

அப்சல் குருவுக்கும், கசாபுக்கும் தூக்கு தண்டனை விதிப்பதில் காட்டப்பட்ட நீதிமன்ற முனைப்பும் வேகமும், பால் தாக்கரே, அத்வானி, மோடி உள்ளிட்ட இந்து மதவெறி பாசிச கிரிமினல்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதில்கூடக் காட்டப்படுவதில்லை. நரேந்திர மோடி மீது கொலைக் குற்றச்சாட்டினைப் பதிவு செய்யக் கோரி ஜாகியா ஜாஃப்ரி கடந்த பத்தாண்டுகளா கவும், நிகல் காப்சே மீது கொலைக் குற்றச்சாட்டினைப் பதிவு செய்யக் கோரி ஃபரூக் மாப்கர் கடந்த இருபது ஆண்டுகளாகவும் சட்டப் போராட்டம் நடத்திக் கொண் டிருக்கிறார்கள். இந்து மதவெறிக் கலவரங்களால் பாதிக் கப்பட்ட முசுலீம்களுக்குச் சட்டப்படியான உரிய நீதியை வழங்காமல் அலைக்கழிப்பதன் மூலம், அவர்களை இந்திய அரசு இரண்டாம்தர குடிமக்களாக நடத்துகிறது என்பது மட்டுமல்ல, முசுலீம் பயங்கரவாதம் வளர்வதற் கான வாய்ப்பினையும் வாரி வழங்கி வருகிறது.

● குப்பன்

## யேனாம் படுகொலை:

# முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு எதிராக...

புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த யேனாம்-இலுள்ள (புதுச் சேரிக்கு உட்பட்ட இப்பகுதி ஆந்திராவில் உள்ளது) ரீஜென்சி செராமிக்ஸ் நிறுவனத்தின் தொழிற்சங்கச் செயலாளரை போலீசார் அடித்தே கொன்றுள்ளனர். இப்படுகொலையைக் கண்டித்து போராடிய தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி பலரைப் படுகாயப்படுத்தியுள்ளனர்.

யேனாம்-இல் உள்ள ரீஜென்சி செராமிக்ஸ் நிறுவனத்தின் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைத்துப் போராடியதுதான் இவர்கள் செய்த குற்றம். நிர்வாகத்தின் பழிவாங்கலை எதிர்த்துப் போராடிய தொழிலாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து நிர்வாகத்தைப் பணியவைத்தனர். இருப்பினும், அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்தால்தான் பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள முடியும் என்ற நிர்வாகத்தின் அடாவடியை எதிர்த்தும், தொழிலாளர்களை வேறு கிளைகளுக்கு மாற்றி பழிவாங்கு வதை எதிர்த்தும், தினக்கூலிகளை நிரந்தரமாக்கவோ, விலை வாசிக்கேற்ப ஊதியத்தை உயர்த்தித் தரவோ மறுத்துவரும் ஆலை நிர்வாகத்தை எதிர்த்தும் தொழிலாளர்கள் கடந்த ஜனவரி 1-ஆம் தேதியிலிருந்து வேலைநிறுத்தம் செய்தனர். முத லாளிக்கு விசுவாசமாக நின்ற போலீசு, கடந்த ஜனவரி 27 அன்று தொழிற்சங்க முன்னோடிகள் 10 பேரைக் கைது செய்து போலீசு நிலையத்தில் கொடூரமாகத் தாக்கியதில், தொழிற்சங்கச் செயலாளர் தோழர் முரளிமோகன் மாண்டு போனார்.

இப்பயங்கரவாதப் படுகொலையை எதிர்த்துப் போராடிய தொழிலாளர்கள் மீது போலீசு கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தி பலரைப் படுகாயப்படுத்தி மருத்துவமனையில் கிடத்தியுள்ளது. சங்கத் தலைவர் கொல்லப்பட்டதை அறிந் ததும் தொழிலாளர்களும் பகுதிவாழ் உழைக்கும் மக்களும் இணைந்து அந்நிறுவனத்தின் வாகனங்களைத் தாக்கி, நிர்வாக மேலாளர் சந்திரசேகரனை அடித்து நொறுக்கினர். பின்னர் அந்த மேலாளர் மருத்துவமனையில் மாண்டு போனான். அரசு மற்றும் போலீசின் துணையுடன் போராடும் தொழிலாளி வர்க்கத்தை அச்சுறுத்தி ஒடுக்கிவிடலாம் என்ற கனவு கண்ட முதலாளி வர்க்கத்தின் தலையில் சம்மட்டி அடியைக் கொடுத்துள்ளனர், யேனாம் தொழிலாளர்கள். முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு எதிராக தங்களாலும் எதிர்த்தாக்குதல் தொடுக்கமுடியும் என் பதை நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

தனியார்மய-தாராளமயத்துக்குப் பின்னர், தலைவிரித் தாடும் முதலாளித்துவ பயங்கரவாதத்துக்கு சாட்சியம்தான் ரீஜென்சி நிறுவனத்தில் நடந்துள்ள படுகொலை. முதலாளி கள் - போலீசின் பயங்கரவாதப் படுகொலையையும் தாக்கு தலையும் எதிர்த்து, 1.2.2012 அன்று புதுச் சேரியிலும், 2.2.2012 அன்று சென்னையில் மெமோரியல் ஹால் அருகிலும் பெருந் திரளான தொழிலாளர்களைத் திரட்டி விண் ணதிரும் முழக்கங்களுடன் பு.ஜ.தொ.மு. ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. முதலாளித் துவப் பயங்கரவாதத்துக்கு எதிராகத் தொழி லாளர்கள் தமக்கென ஒரு தற்காப்புப் படையைக் கட்டியமைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்துவதாக அமைந்த இந்த ஆர்ப்பாட்டங்கள், தொழி லாளர்களிடமும் உழைக்கும் மக்களிடமும் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்தன.


புதுச்சேரியில்...

-பு.ஜ. செய்தியாளர்கள்

# ‘இந்துக்களே’, மரத்துப் போனதா உங்கள் மனசாட்சி?

**இருபது பொய் வழக்குகளின் கீழ் கைது செய்யப்பட்டு, 14 ஆண்டுகள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஒரு முசுலீமின் துயரக்கதை.**

முஸ்லீம்கள் என்றாலே பயங்கரவாதிகள், சந்தேகத்துடன் பார்க்கப்பட வேண்டியவர்கள், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவாளிகள் — இதுதான் இன்று நாட்டு மக்களின் பொதுப்புத்தியில் முஸ்லீம்கள் மீதான அபிப்பிராயமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எங்கே எப்போது குண்டு வெடித்தாலும் முதலில் கைது செய்யப்படுவது அப்பகுதியில் வாழும் இஸ்லாமியர்கள்தான். எல்லா குண்டுவெடிப்புகளுக்கும் காரணம் முஸ்லிம் தீவிரவாதிகள்தான் என ஆளும் வர்க்கமும் ஊடகங்களும் உடனே தீர்ப்பெழுதிவிடுகின்றன.

ஆனால் உண்மையில் குண்டு வெடிப்புகளில் கைது செய்யப்படுபவர்களில் பலர் அப்பாவி இஸ்லாமியர்கள். பல ஆண்டுகளைச் சிறைச்சாலையில் கழித்த பின்னர் வழக்கிற்கும் இவர்களுக்கும் சம்பந்தமில்லை எனக் கூறி இவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். முஸ்லீம் என்ற ஒரே காரணத்திற்காக செய்யாத குற்றத்திற்குத் தங்களது வாழ்நாளை இழந்தவர்கள் கோவை முதல் தில்லி வரை இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரது துயரக் கதைதான் இது.

முகமது அமீர்; 18 வயதில் நாட்டை அச்சுறுத்திய மிகப் பெரிய தீவிரவாதி எனக் கைது செய்யப்பட்டு 14 ஆண்டுகளைத் தனிமைச் சிறையில், இருட்டில் கழித்த இவர், கடந்த ஜனவரி மாதம் அப்பாவி என விடுவிக்கப்பட்டுள்ளார்.

1996 டிசம்பர் முதல் 1997 அக்டோபர் வரை பத்து மாத காலத்தில், தில்லி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 20-க்கும் மேற்பட்ட சிறிய குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன. இதில் 5 பேர் கொல்லப்பட்டனர். இவற்றில் 5 குண்டுகள் ஓடும் பேருந்துகளில் வெடித்தன. 1997-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மட்டும் 10 குண்டுவெடிப்புகள் நிகழ்ந்தன; இவற்றில் 5 ஒரே நாளில் வெடித்தன. அதுவும் வெவ்வேறு இடங்களில். ஒரே நேரத்தில் தில்லியின் சதார் பஜார் பகுதியிலும், காசியாபாத் பகுதியிலும் குண்டுகள் வெடித்தன. இதுபோல அடுத்தடுத்து நடந்த குண்டு வெடிப்புகள் ஒரே நேரத்தில் நடந்தன. காசியாபாத்தில் நடந்த குண்டுவெடிப்பு ஓடும் ரயிலில், அதுவும் வெவ்வேறு பெட்டிகளில் நடந்தது.

ஓராண்டு வரை தொடர்ச்சியாக நடந்த இந்தக் குண்டு வெடிப்புகளில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாமல் தில்லி போலீசார் திணறினர். இந்தச் சூழலில் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்த பகுதியிலிருந்த அமீர் ஒரு முறை பாகிஸ்தான் சென்று திரும்பியது போலீசின் கண்களை உறுத்தியது. உண்மையில் பாகிஸ்தானில் மணம் முடித்துள்ள தனது சகோதரி வீட்டுக்குத்தான் அமீர் சென்று வந்தார். அதுவும், மேற்கூறிய குண்டு வெடிப்புகள் எல்லாம் முடிந்த பின்னர் 1997-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில்தான் அவர் அங்கே சென்றார். ஆனால் அமீர், பாகிஸ்தான் சென்று குண்டு வைக்கப் பயிற்சி எடுத்து வந்து இந்தியாவில் குண்டுவைப்புகளில் ஈடுபட்டதாகக் கூறி அவரைப் போலீசார் கைது செய்தனர்.

1998-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அமீர் கைது செய்யப்பட்டார். அவர்மீது கொலை, பயங்கரவாதம், அரசுக்கு எதிராகப் போரிட்டது ஆகிய பிரிவுகளில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 20 குண்டுவெடிப்பு வழக்குகளில்

டெல்லியில் 20 குண்டுவெடிப்புகளை நிகழ்த்தியதாகப் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு, 18 வயதில் சிறையிடப்பட்டு 14 ஆண்டுகளுக்குப் பின்னர் நிரபராதி என்று விடுவிக்கப்பட்டுள்ள முகமது அமீர், தனது தாயுடன்.



அமீர் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டார். இந்த குண்டு வெடிப்புகள் அனைத்தையும் அமீர், அவரது கூட்டாளி சகீலுடன் இணைந்து நடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் 10 வழக்குகளில், விசாரணை துவங்கும் முன்னரே சகீல் விடுவிக்கப்பட்டார். அதுமட்டுமன்றி, 2009-ஆம் ஆண்டு தாஸ்னா சிறைச்சாலையில் சகீல் பிணமாகத் தொங்கினார். அந்தச் சிறைச்சாலையின் கண்காணிப்பாளர் வி.கே.சிங் மீது சகீலைக் கொலை செய்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.



முஸ்லிம்கள் மீது பொய்க்குற்றம் சாட்டி வதைக்கும் குஜராத் அரசின் பயங்கரவாதத்தை எதிர்த்து கடந்த டிசம்பர் 28,2010 அன்று டெல்லியில் முஸ்லிம் பெண்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

அமீரின் வழக்கறிஞரான என்.டி.பன்சோலி கடந்த 35 ஆண்டுகளாகக் குற்றவியல் வழக்கறிஞராக உள்ளார். இது போன்றதொரு வழக்கைத் தனது அனுபவத்தில் பார்த்ததே இல்லை எனக் கூறும் அவர், ஒரு 18 வயது சிறுவன் தனியாகத் திட்டமிட்டு 20 குண்டு வெடிப்புகளை நிகழ்த்தியதாக, எவ்வித ஆதாரமும் இன்றி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்.

நீண்ட நெடிய சட்டப்போராட்டத்திற்குப் பின், இறுதியாக அமீர் சிறைச்சாலையை விட்டு வெளியே வந்துள்ளார். அவர் மீது போடப்பட்ட 20 வழக்குகளில் 18 -லிருந்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இவற்றில் 17 வழக்குகளில் அவருக்கு எதிராக ஒரு சாட்சியைக் கூட அரசால் காட்ட முடியவில்லை. எஞ்சியுள்ள இரு வழக்குகளிலும் இதே நிலைதான்.

இத்தனை ஆண்டுகளையும் அவர் தனிமையில், இருட்டுச்சிறையில் கழித்துள்ளார். சிறைக்கொட்டடியே அவரது உலகமாக இருந்தது. ஆனால் சிறைச்சாலைக்கு வெளியிலிருந்த உலகம் 14 ஆண்டுகளில் வெகுவாக மாறிப் போயிருந்தது. அவர் பிறந்து வளர்ந்த தில்லி மாநகரம் அடையாளம் தெரியாத அளவிற்கு மாறியிருந்தது. அமீரின் தந்தை நோய்வாய்ப்பட்டு இறந்தது கூட அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. அவரது தாய் மூளைக் கோளாறால் பக்கவாதத்தில் பாதிக்கப்பட்டு, ஊமையாகியிருந்தார். இதுவும் சிறையிலிருந்த அமீருக்குத் தெரிந்திருக்கவில்லை.

அமீரின் மீது போடப்பட்ட 20 வழக்குகளில் எதிலாவது அவரது குற்றம் நிரூபிக்கப்பட்டிருந்தால் கூட, அவருக்கு வெறும் 10 ஆண்டுகள்தான் தண்டனை கிடைத்திருக்கும். ஆனால் அவர் எல்லா வழக்கிலும் நிரபராதி என விடுவிக்கப்பட்டாலும் 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்துள்ளார்.

அமீரைப் போன்றே இன்னும் எத்தனையோ அப்பாவி முஸ்லீம்கள் போலீசால் குற்றவாளிகளாகச் சித்தரிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். கோவை குண்டுவெடிப்பு வழக்கி பல அப்பாவிகள் பல ஆண்டுகளைச் சிறையில் கழித்த பின்னர் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டுள்ளனர். 10 ஆண்டுகால சிறைவாசத்தில் வெளியே எல்லாம் மாறிவிட, விடுதலையாகி வந்த பின்னர் அவர்களது வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிட்டது.

அமீர் மீதான 20 வழக்குகளும் சிறிய அளவிலான வெடிகுண்டு தாக்குதல்கள் தான். இது போன்ற சிறிய குண்டுகளை ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவா கும்பல் பல இடங்களில் வைத்துள்ளது என்பது தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. மாலேகான், அஜ்மீர், நாந்தேடு, தானே, கோவா, ஹைதராபாத், கான்பூர், பானிபட், சம்ஜௌதா எக்ஸ்பிரஸ் — என இந்து மதவெறியர்களின் தாக்குதல்கள் நீண்டு கொண்டே செல்கின்றன. ஆனால் எல்லா இடங்களிலும் முதலில் கைது செய்யப்பட்டவர்கள் முஸ்லீம்கள்தான். ஹைதராபாத் மற்றும் உ.பி.யில் நடந்த பல சம்பவங்களில் இஸ்லாமிய சமூகத்தில் முன்னணியில் நின்று போராடுபவர்களைக் குறிவைத்துப் போலீசார் கைது செய்தனர். அவர்கள் நிரபதிகள் என்ற போதும் வழக்கிலிருந்து வெளிவர, குறைந்தது 10 ஆண்டுகளாவது ஆகும் என்பதால் இதை வைத்து அவர்களை முடக்கிவிட அரசு முயற்சிக்கிறது.

வழக்குகளில் குற்றமற்றவராக விடுதலை செய்யப்படுபவர் அனுபவித்த சிறைத் தண்டனை குறித்து யாரும் கவலைப்படுவதில்லை; அதற்கு யாரும் பொறுப்பாக்கப்படுவதில்லை. இதனால் அப்பாவி முஸ்லீம்களை அச்சுறுத்த குண்டு வெடிப்புகளை ஆளும் வர்க்கம் பயன்படுத்திக் கொள்கிறது. இவையெல்லாம் இந்திய அரசும் ஆளும் வர்க்கமும் முஸ்லீம்களை இரண்டாந்தரக் குடிகளாகப் பார்ப்பதையே நிரூபித்துக் காட்டுகின்றன.

● அன்பு

## காஷ்மீர்:

# அரசுப் படைகளின் கொலைவெறி

**மைய அரசு தரும் பாதுகாப்பால், அரசுப் படைகள் காஷ்மீர் மக்களைக் காக்கைக் குருவிகளைப் போலச் சுட்டுக் கொல்கின்றன.**

**கா**ஷ்மீர் மாநிலம் - பாரமுல்லா மாவட்டத்திலுள்ள போனியார் என்ற நகர்ப்புறத்தில் கடந்த ஜனவரி மாதம் மத்திய தொழிற்பாதுகாப்புப் படை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அல்டாஃப் அகமது ஸூத் என்ற 25 வயது இளைஞர் சம்பவம் நடந்த இடத்திலேயே இறந்து போனார்; 70 வயதான அப்துல் மஜித் கான் என்ற முதியவரும், பர்வாயிஸ் அகமது கான் என்ற மற்றொரு இளைஞரும் காயமடைந்தனர். இத்துப்பாக்கிச் சூடு துணை இராணுவப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த மோதலோ அல்லது காஷ்மீரின் விடுதலையைக் கோரும் ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையோ அல்ல. ‘‘தங்கள் பகுதிக்குத் தடையில்லாமல் மின்சாரம் வழங்க வேண்டும்’’ என்ற சாதாரணமான, அதேசமயம் அடிப்படைத் தேவைக்கான கோரிக்கையை முன்வைத்து ஊரி மின்சார நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்த வந்த பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதலாகும்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வந்த பொதுமக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஐநூறுதான் எனப் பத்திரிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. அதேசமயம், அம்மின்சார நிலையத்தைப் பாதுகாத்து வந்த மத்திய தொழிற்பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சிப்பாய்களின் எண்ணிக்கையோ ஆர்ப்பாட்டம் நடத்துவதற்காகத் திரண்டிருந்த பொதுமக்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக இருந்ததையும் அச்சிப்பாய்கள் நிராயுதபாணியாக ஆர்ப்பாட்டம் நடத்த வந்த மக்கள் மீது துப்பாக்கியால் பல ரவுண்டுகள் சுட்டுத் தள்ளியதையும் அப்படையின் தலைமை அதிகாரி என்.ஆர். தாஸ் பத்திரிக்கையாளர்களிடம் எவ்விதக் குற்ற உணர்வுமின்றி அகங்காரத்தோடு விவரித்திருக்கிறார். ‘‘ஆர்ப்பாட்டக்காரர்களைச் சுட்டுக் கொல்ல வேண்டும்’’ என்ற கொலைவெறியோடுதான் இத்துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை.

காஷ்மீரில் குவிக்கப்பட்டுள்ள இராணுவமும் துணை இராணுவப் படைகளும் காஷ்மீரைச் சேர்ந்த முசுலீம் மக்களை எந்த அளவிற்குப் புழு -பூச்சிகளைவிடக் கீழாக மதிக்கிறார்கள் என்பதற்கு இந்தத் துப்பாக்கிச் சூடு மற்றொரு உதாரணமாகும். துணை இராணுவப் படையால் இந்த ஆர்ப்பாட்டத்தை மூடிமறைக்க முடிந்திருந்தால், சுட்டுக் கொல்லப்பட்ட அல்டாஃப் அகமதுவும் காயம்பட்ட இருவரும் தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டிருப்பார்கள்.

இப்படுகொலை தொடர்பாக மத்திய தொழில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஐந்து சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். காஷ்மீர் மாநில முதல்வர் ஓமர் அப்துல்லா, கொல்லப்பட்ட அல்டாப் அகமதுவின் பெற்றோரைச் சந்தித்து ஆறுதல் சொன்ன கையோடு, ‘‘இந்த ஐந்து பேருக்கும் தக்க தண்டனை வாங்கிக் கொடுப்பேன்’’ எனச் சவால்விட்டுள்ளார்.

ஆனால், இந்தக் கைதும், காஷ்மீர் முதல்வரின் சவடாலும் ஊரை ஏய்க்கும் நாடகம் என்பது காஷ்மீர் மக்களுக்குத் தெரியாத விசயமல்ல. காஷ்மீரில் குவிக்கப்பட்டுள்ள இராணுவமும் துணை இராணுவப் படைகளும் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம், கலவரப் பகுதிச் சட்டம், மத்திய ரிசர்வ் படைச் சட்டம் ஆகிய கருப்புச் சட்டங்களால் பாதுகாக்கப்படுகின்றன. இச்சட்டங்கள் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை, கொட்டடிச் சித்திரவதை, ஆள் கடத்தல், சட்டவிரோத துப்பாக்கிச் சூடு என அனைத்துவிதமான மனித உரிமை மீறல்கள், அட்டூழியங்களை காஷ்மீர் மக்களின் மீது ஏவிவிடும் அதிகாரத்தையும், ஆணவத்தையும் இந்திய இராணுவத்திற்கும் துணை இராணுவப் படைகளுக்கும்

மத்திய தொழிற்பாதுகாப்புப் படையின் கொலைவெறியாட்டம்: துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இளைஞர் அல்டாஃப் அகமது ஸூத்-இன் சடலத்தை எடுத்துச் செல்லும் போனியார் நகர மக்கள்.



வழங்கியுள்ளன. மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் இராணுவ, துணை இராணுவப் படை சிப்பாய்கள், அதிகாரிகளின் மீது காஷ்மீர் மாநில அரசு வழக்குத் தொடுக்க வேண்டுமென்றால்கூட, அதற்கு மைய அரசின் அனுமதியைப் பெற வேண்டும் என்ற நிபந்தனை ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்திலும் மத்திய ரிசர்வ் போலீசு சட்டத்தின் 17-ஆவது பிரிவிலும் உள்ளது.

காஷ்மீரில் பாகிஸ்தானால் தூண்டிவிடப்படும் பயங்கரவாதத்தை ஒடுக்க வேண்டுமென்றால் தமக்கு இப்படிபட்ட அதிகாரமும் பாதுகாப்பும் வேண்டுமென இராணுவம் கூறி வருகிறது. இச்சட்டத்தில் சில்லறை சீர்திருத்தங்களைச் செய்வதற்குக்கூட காங்கிரசும், பா.ஜ.க.வும், இராணுவமும் சம்மதிப்பதில்லை. ஏதோ தீவிரவாதிகளை வேட்டையாடுவதற்காகத்தான் இராணுவத்திற்கு இந்த அதிகாரமும் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளதைப் போல நம்மை நம்பவைக்க ஆளும் கும்பல் முயன்று வருகிறது. ஆனால், இது அப்பட்டமான பொய்; அரசியல் உரிமைகளுக்காகப் போராடும் காஷ்மீரிகளை மட்டுமல்ல, தெருவில் நடந்துபோவோரைக் கூடச் சுட்டுக் கொல்வதற்கும் இராணுவம் இச்சட்டத்தைப் பயன்படுத்தி வருகிறது என்பது பல நூறு முறை அம்பலமாகியிருக்கிறது.


இந்திய இராணுவத்தின் பயங்கரவாத அட்டூழியம்: காஷ்மீரில் இந்திய இராணுவத்தால் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு, 2700க்கும் மேலான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு, பின்னர் அடையாளம் தெரியாதவர்கள் என்ற பெயரில் புதைக்கப்பட்டுள்ள கல்லறைகளில் சிலவற்றை, மாநில மனித உரிமைக் கமிசன் 2011 ஆகஸ்ட் மாதத்தில் தோண்டி பிணங்களைச் சோதித்தபோது, அனைவரும் காஷ்மீரின் உள்ளூர்வாசிகள் என்பது நிரூபணமாகியுள்ளது.

கிரிக்கெட் விளையாடிவிட்டுத் திரும்பிவந்த 16 வயதான ஜாஹித் ஃபரூக், 14 வயதான வாமிக் ஃபரூக், 16 வயதான பஷாரத் அகமது, 14 வயதான முஷ்டாக் அகமது மிர் உள்ளிட்டு எண்ணற்ற சிறுவர்களை இச்சட்டத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு அரசுப் படைகள் சுட்டுக் கொன்றுள்ளன. காஷ்மீரின் பாரமுல்லா, பண்டிபோரா, ஹந்த்வாரா, குப்வாரா ஆகிய நான்கு மாவட்டங்களில் அரசுப் படைகளால் கொல்லப்பட்டு, இரகசியமாகப் புதைக்கப்பட்ட 2,730 சடலங்கள் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த இரகசியக் கல்லறைகள் குறித்து காஷ்மீர் மாநில அரசின் மனித உரிமை ஆணையம் நடத்திய ஆய்வில், பாகிஸ்தான் தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டுப் புதைக்கப்பட்ட இவர்களுள் 574 பேர் உள்ளூர்வாசிகள் என்பது தெரியவந்துள்ளது. இப்படி அப்பட்டமாக அம்பலமான மனித உரிமை மீறல் வழக்குகளில்கூட இராணுவத்தினர் தண்டிக்கப்படுவதை இச்சட்டத்தைப் பயன்படுத்தித் தடுத்து வருகிறது, மைய அரசு.

காஷ்மீர் மாநில அரசு இந்திய இராணுவ, துணை இராணுவப் படைகள் மீது 50 மனித உரிமை மீறல் கிரிமினல் வழக்குகளைத் தொடுத்து, அவற்றில் தொடர்புடைய சிப்பாய்கள்/அதிகாரிகளை விசாரிப்பதற்கான அனுமதி வழங்கக் கோரி மைய அரசிடம் விண்ணப்பித்திருந்தது. இந்த 50 வழக்குகளில் 31 வழக்குகள் பாலியல் வன்முறை மற்றும் கொலை தொடர்புடையவை; 11 வழக்குகள் சட்டவிரோதக் கைது, சித்திரவதை தொடர்பானவை. இவ்வழக்குகள் குறித்து காஷ்மீர் மாநில போலீசு விசாரணை நடத்தி, அதில் உண்மை இருப்பதைக் கண்டுபிடித்து ஏற்றுக்கொண்டு, அதன்பிறகுதான் மைய அரசிடம் குற்றமிழைத்த இராணுவத்தினரை விசாரிப்பதற்கு அனுமதி கோரியது.

இதில் ஒரு கொலை வழக்கு 1991- ஆம் ஆண்டு நடந்ததாகும். பட்வாரா என்ற ஊரைச் சேர்ந்த முகம்மது ஆயுப் பட் என்ற அப்பாவியை இந்திய இராணுவம் கொலை செய்து, அவரது சடலத்தை தால் ஏரியில் வீசியெறிந்தது. இப்படுகொலையை அப்பொழுது சிறீநகர் பகுதியில் பணியாற்றிவந்த பிரிகேடியர் குல்ஷன் ராவ்தான் செய்தார் என்பது காஷ்மீர் மாநில போலீசு நடத்திய விசாரணையில் அம்பலமானது. கொலை நடந்து பதினெட்டு ஆண்டுகள் கழித்து, மார்ச் 3, 2009 அன்று அந்த அதிகாரியை விசாரிக்க அனுமதிக்க முடியாது என அறிவித்தது மைய அரசு.

பீர்வாஹ் பகுதியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவரை மேஜர் பதவியிலிருந்த இராணுவ அதிகாரி பாலியல் பலாத்காரப்படுத்த முயன்ற சம்பவம் 1997-ஆம் ஆண்டு நடந்தது. நான்கு ஆண்டுகள் கழித்து, 2001-இல்தான் குற்றவாளியை அடையாளம் காண முடிந்தது. இதற்குப் பின் பத்து ஆண்டுகள் கழித்து, குற்றவாளியான அந்த இராணுவ மேஜரை விசாரிக்க அனுமதிக்க முடியாதென செப்.12, 2011-இல் அறிவித்தது, மைய அரசு. பல ஆண்டுகளாகக் கிடப்பில் போட்டு வைத்திருந்த இந்த 50 வழக்குகளில் 42 வழக்குகளைக் கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் ஒவ்வொன்றாக எடுத்து, ''ஆதாரம் இல்லை'', ''விசாரணை மேலோட்டமாக நடத்தப்பட்டுள்ளது'', ''இராணுவத்தின் மரியாதையைக் கெடுக்கும் வண்ணம் புனையப்பட்ட பொய்க் குற்றச்சாட்டு'' என்ற மொன்னையான காரணங்களைக் கூறி, அந்த வழக்குகளில் சம்மந்தப்பட்ட இராணுவ, துணை இராணுவத்தினரை விசாரிக்க அனுமதிதர மறுத்துவிட்டது, மைய அரசு.

அப்பாவிகளை எல்லைப்புறத்திற்குக் கடத்திக் கொண்டு போய் போலி மோதலில் சுட்டுக் கொல்வது மட்டுமல்ல, மோதல் நடந்திருப்பதாகப் பொய்க்

கணக்குக் காட்டி பரிசுப் பணத்தைச் சுருட்டிக் கொள்வது, பதவி உயர்வுகளைப் பெறுவது என இராணுவமும் துணை இராணுவமும் காஷ்மீரில் நடத்தியிருக்கும் கிரிமினல் குற்றங்களுக்கும் மோசடிகளுக்கும் அளவே கிடையாது. 1990-ஆம் ஆண்டு தொடங்கி 2007-ஆம் ஆண்டு முடியவுள்ள பதினேழு ஆண்டுகளில் காஷ்மீரில் ஏறத்தாழ 70,000 பேர் துப்பாக்கிச் சூடு, போலி மோதல், கொட்டடிக் கொலைகள் ஆகிய அரசு பயங்கரவாத அட்டூழியங்களுக்குப் பலியாகியுள்ளனர். அரசுப் படைகளால் விசாரணைக்கு இழுத்துச் செல்லப்பட்ட 8,000 பேர் காணாமல் போயிருப்பதாக மற்றொரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. காஷ்மீரிலிருந்து இராணுவத்தை விலக்கவும், ஆயுதப் படைச் சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கவும் கோரி கடந்த 2010-ஆம் ஆண்டு காஷ்மீர் பள்ளத்தாக்கில் நடந்த ஆர்ப்பாட்டங்களின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். காஷ்மீரில் அரசுப் படைகள் நடத்தியிருக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து அம்மாநில மனித உரிமை ஆணையத்திடம் மட்டும் கடந்த 14 ஆண்டுகளில் 5,699 புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

உண்மை இவ்வாறிருக்க, கடந்த இருபது ஆண்டுகளில் வெறும் 50 வழக்குகளில் மட்டுமே குற்றமிழைத்த இராணுவத்தினரை விசாரிக்க மைய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்த 50 வழக்குகளில் தற்பொழுது 42 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன. தப்பித் தவறி மீதமுள்ள எட்டு வழக்குகளில் அனுமதி வழங்கப்பட்டாலும், வழக்கு விசாரணையை சிவில் நீதிமன்றங்களில் நடத்த மைய அரசு சம்மதிக்காது. உண்மையும் நீதியும் இராணுவ நீதிமன்றங்களில் புதைக்கப்படும். இந்த அநீதியைத் தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் காஷ்மீரிகள் ஏன் சகித்துக் கொள்ள வேண்டும்?

● செல்வம்

# “கூடங்குளம் அணுஉலையை இழுத்து மூடு!”

## - மக்களின் பேராதரவோடு தொடரும் பிரச்சார இயக்கம்

எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும்சரி, கூடங்குளம் அணு உலையைத் திறக்காமல் விடமாட்டோம் என்று வெறி கொண்டு அலைகிறது, மன்மோகன் தலைமையிலான அரசு. இந்துவெறிக் கும்பலோ அணுஉலைக்கு ஆதரவான போராட்டம் என்ற பெயரில் அணுஉலைக்கு எதிராகப் போராடும் மக்கள் மீதே வன்முறைத் தாக்குதலை நடத்துகிறது. இந்நிலையில், அணு உலைக்கு எதிரான கூடங்குளம் - இடிந்தகரை மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்தும், மக்களின் உயிருக்கும் நாட்டின் அரைகுறை இறையாண்மைக்கும் உலை வைக்கும் அணு உலையை இழுத்து மூட அறைகூவியும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் பிரச்சார இயக்கத்தை வீச்சாக நடத்தி வருகின்றன.

கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டக் குழுவினரைத் தாக்கிய காங்கிரசு, பா.ஜ.க; இந்து முன்னணிக் காலிகளை எதிர்த்து, சென்னையில் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட உயர்நீதிமன்ற வழக்குரைஞர்கள், கடந்த பிப்ரவரி முதல் நாளன்று உயர்நீதி மன்றம் அருகே ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். கொலைகார காங்கிரசு, இந்துவெறி கும்பலுக்கு எதிரான முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரசு, பா.ஜ.க; இந்துமுன்னணியின் கொடிகள் எரிக்கப்பட்டன.

திருச்சி பு.மா.இ.மு. சார்பில் 8.2.2012 அன்று காலை பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரியிலும், பிற்பகலில் அரசு சட்டக் கல்லூரியிலும் கூடங்குளம் அணு உலையை இழுத்து மூடக் கோரி மாணவர்களிடம் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இந்தியாவில் இயக்கப்படும், இயக்கப்படவிருக்கும் ஒவ்வொரு அணு உலையும் இந்திய - அமெரிக்க இராணுவ ஒப்பந்தத்தின் ஒரு பகுதிதான்; அணு உலைகள் என்பவை மின்சாரம் தயாரிப்பதற்காக என்று அரசு கூறுவது மக்களை ஏய்க்கும் அயோக்கியத்தனம்; இவற்றின் உண்மையான நோக்கம் இராணுவப் பயன்பாட்டுக்கானது என்பதை விளக்கி கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி வைத்த பு.மா.இ.மு. இணைச் செயலர் செழியனின் உரையைக் கேட்டு மாணவர்களும் பேராசிரியர்களும் கைதட்டி வரவேற்றனர். ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள், சிறுவெளியீடு ஆகியவற்றின் மூலம் பு.மா.இ.மு. தோழர்கள் மாணவர்களிடம் பிரச்சாரம் செய்துள்ளதால், மாணவர்கள் உற்சாகத்துடன் ஆளும் வர்க்கப் பொய்ப்பிரச்சாரங்களுக்கு எதிராக தங்கள் கருத்துகளைப் பதிவு செய்து கையெழுத்து இயக்கத்தில் உற்சாகமாகப் பங்கேற்றனர். சமூக அக்கறையுள்ள விசயங்களில் மாணவர்களை ஈடுபடுத்தும் பு.மா.இ.மு.வின் முயற்சியை வாழ்த்தி பேராசிரியர்கள் தங்கள் கருத்துகளைப் பதிவு செய்தனர்.


திருச்சியில்...

அனைத்துத் தரப்பு உழைக்கும் மக்களின் ஊக்கமான பங்கேற்புடன் பிரச்சார இயக்கம் தொடர்ந்து முன்னேறி வருகிறது.

-பு.ஜ. செய்தியாளர்கள்

# “ஆபத்தான அணுஉலை வேண்டாம்! அனைவருக்கும் தடையற்ற மின்சாரம் வேண்டும்”

## – எதிரிகளை இனங்காட்டி... துரோகிகளைத் தோலுரித்து... போராட அறைகூவிய பொதுக்கூட்டம்!

‘‘மக்களின் உயிருக்கும் நாட்டின் அரைகுறை இறையாண்மைக்கும் உலை வைக்கும் கூடங்குளம் அணு உலையை இழுத்து மூடு!’’ என்ற முழக்கத்துடன் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் வீச்சாக நடத்திவரும் பிரச்சார இயக்கத்தின் ஓர் அங்கமாக, சென்னை எம்.ஜி.ஆர். நகரில் 25.02.2012 அன்று ‘‘ஆபத்தான அணு உலை வேண்டாம்! அனைவருக்கும் தடையற்ற மின்சாரம் வேண்டும்!’’ என்ற தலைப்பில் பிப்ரவரி 25-ஆம் தேதியன்று பொதுக்கூட்டத்தை நடத்தின.

பு.ஜ.தொ.மு. மாநில தலைவர் தோழர் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், ம.உ.பா. மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு, நாட்டிலுள்ள 20 அணு மின் நிலையங்கள் மூலம் தற்போது கிடைப்பது 4130 மெகாவாட் மின்சாரம்தான் என்றும், இந்த அணு உலைகளை இயக்குவதற்கே 4000 மெகாவாட் மின்சாரம் அளிக்கப்படுவதையும் விளக்கி, மின்வெட்டிற்கு அணுஉலைகள் மாற்று அல்ல என்பதை அம்பலப்படுத்தினார். அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த மனோ.தங்கராஜ், கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டத்துக்கு வெளிநாட்டிலிருந்து பணம் வருவதாக பிரதமர் மன்மோகன் சிங் கூசாமல் புளுகுவதைத் திரைகிழித்து, கடந்த 25 ஆண்டுகளாக கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டம் நடந்துவருவதை விளக்கி, புரட்சிகர அமைப்புகளின் துணையோடு கூடங்குளம் அணு உலையை விரட்டியடிக்க மக்களை அணிதிரளுமாறு அறைகூவினார்.



இப்பொதுக் கூட்டத்தில், கூடங்குளம் அணு உலைக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வரும் அப்பகுதியைச் சேர்ந்த போராளிகள் வரவேற்கப்பட்டு மேடையில் அறிமுகப்படுத்தப்பட்டனர். அணு உலைக்கு எதிராக முழக்கமிட்ட அவர்கள் ‘‘அணு உலையை எதிர்க்கும் மக்கள் போராட்டம் வெல்கவே!’’ என்ற பாடலைப் பாடி, போராட்ட உணர்வைத் தட்டியெழுப்பினர்.



சி.ராஜு

உழைக்கும் மக்களால் நடத்தப்படும் கூடங்குளம் போராட்டம், ஓட்டுக் கட்சிகளைத் தமிழகத்திலிருந்தே விரட்டுவதற்கான ஒரு முன்னறிவிப்பு எனக் கூறி தனது உரையைத் தொடங்கிய ம.க.இ.க. மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் மருதையன், நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குத் தாரைவார்க்கப்படுவதையும், இதனால் 70 சதவீத சிறுதொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதையும் விளக்கி, தனியாரிடம் ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.19-க்கு வாங்கும் அரசு அதனை ஹூண்டாய், போர்டு முதலான பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு சலுகை விலையில் அளிப்பதுதான் இந்த மின்பற்றாக்குறைக்குக் காரணம் என்பதைச் அம்பலப்படுத்தினார். இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தின் விளைவாகக் கொண்டுவரப்படும் அணு உலைகள் மின்சாரத்துக்கு அல்ல என்பதை உணர்த்தி,பேரழிவைக் கருக்கொண்டுள்ள கூடங்குளம் அணுஉலையை அங்கேயே புதைக்கும் போராட்டத்துக்கு அறைகூவினார்.



துரை.சண்முகம்

பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களை விரட்டியடிக்காமல் மின் பற்றாக்குறைக்குத் தீர்வு இல்லை என்பதை உணர்த்திய ‘‘பவர் கட்டு, பன்னாட்டுக் கம்பெனிக்கு பாடை கட்டு!’’ என்ற ம.க.இ.க. மையக் கலைக்குழுவினரின் பாடலும், நக்சல்பாரிகள் தலைமையில் கூடங்குளம் மக்களின் போராட்டப் புயல் கரைசேர்ந்தே தீரும் என்பதை உணர்த்திய ம.க.இ.க. தோழர் துரை.சண்முகத்தின் கனலாய்த் தெறித்த கவிதையும், மக்களைக் கொல்ல வரும் அணுஉலையை விரட்டியடிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்திய பு.மா.இ.மு. சென்னைக் கிளைத் தோழர்களின் நாடகமும், இக்கூட்டத்தில் வைக்கப்பட்டிருந் புகைப்பட விளக்கக் காட்சிகளும் போராட்ட உணர்வுக்குப் புதுரத்தம் பாய்ச்சி பெருத்த வரவேற்பைப் பெற்றன. ஏறத்தாழ 3000 பேருக்கும் மேலாகத் திரண்டு, பகுதிவாழ் மக்களும் வியாபாரிகளும் தாராள நன்கொடையும் உதவிகளும் செய்து ஆதரித்த இப்பொதுக்கூட்டம், கூடங்குளம் அணு உலைக்கு எதிரான அடுத்த கட்டப் போராட்டத்தின் முன்னறிவிப்பாக அமைந்தது.

– பு.ஜ.செய்தியாளர்கள்

# தீண்டாமையின் புதிய அவதாரம்

**தேசியக் கொடியைக்கூட ஏற்றவிடாமல் தாழ்த்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஆதிக்க சாதி வெறியர்களால் தடுக்கப்படுகின்றனர்.**

**த**னிச்சுடுகாடு, இரட்டைக்குவளை எனத் தெளிவாகத் தெரியும்வண்ணம் தாழ்த்தப்பட்டோர் மீது ஏவப்படும் தீண்டாமைக் கொடுமை, பல புதிய வடிவங்களை எடுத்தவண்ணம் உள்ளது. புதுக்கோட்டை மாவட்டம், கருவடத்தெரு சிற்றூரில் இந்த ஆண்டு குடியரசு தினத்தன்று அது அரங்கேறியுள்ளது. கருவடத்தெருவின் ஊராட்சித் தலைவராக இருக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கலைமணி அண்ணாதுரை, குடியரசு தினத்தை முன்னிட்டு, ஊராட்சி அலுவலகம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி அமைந்துள்ள வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்ற முற்பட்டார். அப்போது அங்கே ஊராட்சி மன்றத் துணைத் தலைவரின் மகனான குமார் தலைமையில் வந்த இருபதுக்கும் மேற்பட்ட கள்ளர் சாதி வெறியர்கள் அவரைக் கீழே தள்ளிவிட்டனர். 'பல ஆண்டுகளாக பள்ளி அலுவலகத்தோடு நெருங்கிய தொடர்பில்' இருக்கும் தாங்கள்தான் கொடியேற்றுவோம் எனக் கூறி கலைமணியைக் கொடியேற்றவிடாமல் தடுத்தனர்.

இது ஜனநாயக நாடென்று அரசு செய்து வரும் பிரச்சாரம், கொடிக்கம்பத்தின் கீழேயே கிழிந்து தொங்கியது. ஊராட்சிமன்றத் தலைவராகவே இருந்தாலும், கள்ளர் சாதியினர் இருக்க தாழ்த்தப்பட்டவர் கொடியேற்றுவதா எனத் தெனாவெட்டாகத் தீண்டாமையை அனுசரித்த அக்கும்பலை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் உள்ளே தள்ளவேண்டிய போலீசோ இருதரப்பினருக்குமிடையே கட்டப்பஞ்சாயத்து பேசி, பள்ளித் தலைமை ஆசிரியரைக் கொடியேற்ற வைத்துள்ளது. மொத்தத்தில், கள்ளர் சாதிக் கும்பலும் போலீசுதுறையும், தாழ்த்தப்பட்டோர் ஒருவர் தேசியக் கொடியை ஏற்றவிடாமல் பார்த்துக் கொண்டனர். கோயில் திருவிழா போன்ற நிலப்பிரபுத்துவ ஊர் மரபுகளில் மட்டுமே கடைப்பிடிக்கப்பட்டு வந்த தீண்டாமை, குடியரசு தின விழாவுக்கும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இல்லாத கடவுளுக்கு ஏற்றப்படும் கோயில் திருவிழா கொடிக்கும், இல்லாத ஜனநாயகத்தை இருப்பது போலக் காட்டுவதற்காக ஏற்றப்படும் குடியரசு தினவிழாக் கொடிக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்பதும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இச்சம்பவம் நடந்த சில நாட்களிலேயே ஈரோடு மாவட்டம் பசுவப்பட்டி ஊராட்சிமன்றத் தலைவியான வள்ளி தெய்வானை என்பவர் தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்துக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் புகார் மனுவை அளித்துள்ளார். ''தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தான் சாதி இந்துக்களால் தீண்டாமைக் கொடுமைக்குள்ளாவதாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்தே ஊராட்சிமன்றத் தலைவர் இருக்கையில் தன்னை ஆதிக்க சாதியினர் அமரவிட்டதில்லை'' என்றும் அப்புகாரில் தெரிவித்துள்ளார். தன்னை பணி செய்யவிடாமல் சாதி இந்துக்கள் தடுப்பதாகவும், தகுதியே இல்லாதவர்களுக்கு முதியோர் ஓய்வூதியத்தை வழங்கக் கோரி அழுத்தம் கொடுப்பதாகவும் புகாரில் தெரிவித்துள்ளார்.

பசுவம்பட்டியில் மட்டுமல்ல, தென்மாவட்டங்களில் தாழ்த்தப்பட்டோருக்கென ஒதுக்கப்பட்டுள்ள பெரும்பாலான ஊராட்சி அமைப்புகளில் இதுதான் நிலைமை.

குடியரசு தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றவிடாமல் சாதிவெறியர்களால் தடுக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம் கருவடத்தெரு ஊராட்சிமன்றத் தலைவி கலைமணி அண்ணாதுரை. ஊராட்சி மன்றத் தலைவர் இருக்கையில் அமர விடாமல் சாதிவெறியர்களால் தடுக்கப்பட்ட ஈரோடு மாவட்டம் பசுவப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவி வள்ளிதெய்வானை.






தலைவராக ஆனாலும் நின்றுகொண்டேதான் கூட்டம் நடத்த வேண்டும். தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த ஊராட்சி மன்றப் பிரதிநிதிகளின் ஆணைகளை அவர்களுக்குக் கீழே பணியாற்றும் உதவி அலுவலர்கள்கூட செயல்படுத்துவதில்லை. அப்பிரதிநிதிகள், நாற்காலியில் அமர விடாமல் தடுக்க, நாற்காலிகளை உடைத்துப் போட்டுவிட்டு, அவற்றை செப்பனிடாமல் போட்டுவைக்கும் கீழ்த்தரமான தந்திரங்களைச் செய்யவும் கூச்சப்படுவதில்லை.

தாழ்த்தப்பட்டோரை, அதிகாரத்தில் பங்கெடுக்க வைக்கும் இட ஒதுக்கீடு சீர்திருத்தங்களைக் கூட ஆதிக்க சாதியினர் சகித்துக் கொள்வதில்லை. பத்தாண்டுகளுக்கும் மேலாக பாப்பாப்பட்டி - கீரிப்பட்டியில் ஆதிக்க சாதியினர், உள்ளாட்சி தேர்தலைக் கேலிக்கூத்தாக்கும் வண்ணம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை உடனே பதவி விலக வைத்து வந்தனர். அவர்களை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் தண்டிக்காத அரசோ, அடுத்தடுத்து இந்தக் கேலிக்கூத்துத் தேர்தல்களை நடத்தியது. அச்சாதி வெறியர்களிடம் பேரம் பேசி ரூ. 25 லட்சம் சிறப்பு ஒதுக்கீடு செய்து தாஜா செய்தது.

பாப்பாப்பட்டி போலன்றி சுமுகமாகத் தேர்தல் நடந்த பல ஊர்களில், தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த பிரதிநிதிகள் சுயேச்சையாக முடிவெடுக்கவோ, சட்டப்படி செயல்படவோ ஆதிக்க சாதியினரால் அனுமதிக்கப்படுவதில்லை. அச்சுறுத்தல்களைப் புறந்தள்ளி செயல்பட முனைந்தவர்களுக்குக் கிடைத்தவையோ கொலைவெறித் தாக்குதல்கள். அதிலும் பெண்ணாயிருந்தால் பாலியல் வன்முறைக்கும் ஆளாகியுள்ளனர். அருந்ததியினர் சாதியைச் சேர்ந்த திருநெல்வேலி தாழையூத்து ஊராட்சித் தலைவர் கிருஷ்ணவேணி மீது நடத்தப்பட்ட கொலைவெறித் தாக்குதல் இதற்கு சான்றாகும்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல; எல்லா மாநிலங்களிலும் சாதிவெறித் தாக்குதல்கள் அன்றாடச் செய்திகளாகி உள்ளன. கடந்த ஜனவரி 22 அன்று ஒடிஸ்ஸா மாநிலத்தை சேர்ந்த லாத்தூரில் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் கணேஷ் சுனா எனும் தாழ்த்தப்பட்ட மாணவன், உள்ளூர் கடையொன்றில் சட்டை வாங்கச் சென்றான். அப்பகுதியில் தாழ்த்தப்பட்டோர் உள்ளாடை அணிவதை ஆதிக்க சாதியினர் அனுமதிப்பதில்லை. கணேஷ் சுனா, பனியன் அணிந்திருந்ததைக் கவனித்த ஆதிக்க சாதியைச் சேர்ந்த கடைக்காரர், ஆத்திரமடைந்திருக்கிறார். அதனை வெளிப்படையாகச் சொல்லாமல், சட்டை வாங்க வந்த மாணவனை, திருட வந்ததாகச் சொல்லி கடைக்காரர் தாக்கினார். தடுத்த, அப்பையனின் தாத்தாவையும் தாக்கியுள்ளார். பின்னர் 50 பேருக்கும் மேல் திரண்டு வந்து சேரியைச் சூறையாடி தீவைத்துள்ளனர்.




கடந்த 2010-ஆம் ஆண்டில் குடியரசு தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றவிடாமல் ஆதிக்க சாதிவெறியர்களால் தாக்கப்பட்ட சிவகங்கை மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி மன்றத் தலைவி மனோன்மணி.

அதே மாதத்தில், மகாராஷ்டிர மாநிலம் முல்கான் கிராமத்தில், 42 வயதான தாழ்த்தப்பட்ட பெண்மணியை நிர்வாணப்படுத்தி சாதிவெறியர்கள் ஊர்வலம் விட்டுள்ளனர். அப்பெண்மணியின் மகன் ஒரு மாதத்திற்கு முன் ஆதிக்க சாதிப் பெண்ணுடன் காதல்வயப்பட்டு ஊரைவிட்டு ஓடியதுதான், இக்கொடுஞ்செயலுக்குக் காரணம்.

இவ்வாறு தொடர்ச்சியாக தாழ்த்தப்பட்டோர் மீது, வன்கொடுமையை ஏவுவதில் ஆதிக்க சாதியினர் தீவிரமாக உள்ளனர். வன்கொடுமையைத் தடுப்பதற்கென கொண்டுவரப்பட்ட வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை இச்சாதிவெறியர்களுக்கு எதிராக அதிகார வர்க்கம் ஏவுவதில்லை. வன்கொடுமையைத் தடுக்கத் தவறுகின்ற மாவட்ட ஆட்சியாளர், காவல்துறை கண்காணிப்பாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கடந்த ஏப்ரலில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பும் கூறியுள்ளது. காகிதத் தீர்ப்பு சாதிவெறியைக் கட்டுப்படுத்திவிடவில்லை.

''அதிகாரத்தைக் கைப்பற்றுவோம்! அதன்மூலம் சாதிக்கொடுமையை ஒழிப்போம்!'' என்ற முழக்கத்தை வைத்து தாழ்த்தப்பட்ட மக்களை அணிதிரட்டின, தலித் இயக்கங்கள். தேர்தல்கள் மூலம் அதிகாரத்தைப் பல இடங்களில் கைப்பற்றிய பின்னரும் சாதிக் கொடுமை தீரவில்லை. உத்திரப் பிரதேசத்தில் பார்ப்பனர் கூட்டணியுடன் மாயாவதி ஆட்சியைப் பிடித்த பின்னர், தாழ்த்தப்பட்டோர் மீதான தாக்குதல்கள் அதிகரித்தன. தலித் இளைஞரைப் படுகொலை செய்த தன் கட்சியை சேர்ந்த சாதிவெறியர்களை சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப வைப்பதற்கே பகுஜன் சமாஜ் கட்சி துணைபோனது.

சாதி ஆதிக்கத்தையும் தீண்டாமையையும் தொடர்ந்து பேணுவதற்காக, தலித் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணமே இட ஒதுக்கீடு என்பது சாதிவெறியர்களின் கருத்து. தலித் மக்களில் யாருக்கு எவ்வளவு ஜனநாயகத்தை, எங்கே, எப்போது வழங்கலாம் என்பது குறித்து முடிவெடுக்கும் அதிகாரத்தைத் தாங்கள் பெற்றிருப்பதாகவே ஆதிக்க சாதியினர் கருதுகிறார்கள். இந்த அதிகாரம் வன்கொடுமைத் தடைச்சட்டத்துடன் மோதும் இடங்களில், மிகவும் இலாவகமாக, அதனை மடை மாற்றி விட்டு, ஆதிக்க சாதியினரின் அதிகாரத்தைப் பாதுகாக்கும் பணியை போலீசும் அதிகார வர்க்கமும் செய்கின்றன.

சமரசம் என்ற பெயரில் நடத்தப்படும் இந்த அயோக்கியத்தனத்தை அடையாளம் காட்டி, அம்பலப்படுத்தி முறியடிப்பதுதான் சாதி-தீண்டாமையை ஒழிக்க விரும்பும் அனைவரின் கடமை.

● செங்கதிர்

## மீனவர் சுட்டுக்கொலை:

# இத்தாலியின் திமிர்த்தனம் இந்தியாவின் அடிமைத்தனம்

**கொலைகார இத்தாலியர்களைக் கைது செய்து தண்டிக்காமல், ஏகாதிபத்தியவாதிகளுக்கு அடிபணிந்து வழக்கை இழுத்தடிக்கிறது இந்திய அரசு.**

கேரளத்தின் கொல்லம் மீன்பிடி துறைமுகம் அருகே, இந்திய கடல் எல்லைக்குட்பட்ட அரபிக் கடல்பகுதியில் கடந்த பிப்ரவரி 15-ஆம் தேதியன்று மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, ''என்ரிகா லாக்ஸி'' என்ற இத்தாலி நாட்டு எண்ணெய்ச் சரக்குக் கப்பலில் இருந்த பாதுகாப்புப் படையினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் குமரி மாவட்டம் குளச்சல் பகுதியைச் சேர்ந்த ஜெலஸ்டின், அஜீஸ்பிங்கு ஆகிய மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொடுஞ்செயலுக்காக கொலைகாரர்களைக் கைது செய்து தண்டிக்கவும், கொல்லப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு அக்கப்பல் நிர்வாகத்திடம் நிவாரணம் பெறவும், மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்காத இந்திய அரசு, ஏகாதிபத்தியவாதிகளின் நிர்ப்பந்தங்களுக்கு அடிபணிந்து அவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்து கொடுத்து தனது ஏகாதிபத்திய விசுவாசத்தை மீண்டுமொருமுறை நிரூபித்துக் காட்டியுள்ளது.

இந்தியக் கடல் எல்லைக்குட்பட்ட பகுதியில் இத்துப்பாக்கிச் சூடு நடந்துள்ளதால், கடலோரக் காவற்படை அந்தக் கப்பலை கொச்சி துறைமுகத்துக்குக் கொண்டு வந்து, மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களைக் கைது செய்ய முயன்றபோது, எச்சரிக்கை செய்தபோதிலும் விலகிச் செல்லாமல் தங்கள் கப்பலை நோக்கி படகு வந்ததால், கடற்கொள்ளையர்கள் என்று கருதி துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அக்கப்பலின் தலைமை மாலுமி நியாயவாதம் பேசி கைது நடவடிக்கையைத் தட்டிக் கழித்துள்ளார். ஆனால், கப்பலிலிருந்து பைனாகுலர் மூலம் பார்த்தாலே படகில் வருவது மீனவர்களா, அல்லது கடற்கொள்ளையர்களா என்பது தெரிந்துவிடும். மேலும், இது எச்சரிக்கைக்காக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு அல்ல என்பதை மீனவர்களின் படகில் 10-க்கும் மேற்பட்ட இடங்களில் குண்டு பாய்ந்திருப்பதே நிரூபித்துக் காட்டுகிறது. சர்வதேசக் கடல் எல்லையில்தான் துப்பாக்கிச்சூடு நடந்துள்ளதாகப் புளுகி, இந்தியச் சட்டத்துக்கு நாங்கள் கட்டுப்பட முடியாது என்று அந்த இத்தாலிக் கப்பலின் தலைமை மாலுமி திமிராகக் கூறியுள்ளார். இவற்றை நிராகரித்து உடனடியாகக் குற்றவாளிகளைக் கைது செய்வதற்குப் பதிலாக, இந்திய அரசு பணிந்து போய் அக்கப்பலின் பாதுகாப்புப் படைச் சிப்பாய்கள் இருவர் மீது முதல் தகவல் அறிக்கை மட்டும் பதிவு செய்தது.

இத்தாலிய தூதரக அதிகாரிகள், இந்திய அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி 4 நாட்களுக்குப் பின்னர்தான், கொலைகாரர்களான மசிமிலியானோ லதோர் மற்றும் சல்வடோர் கிரோனே என்ற இரண்டு பாதுகாப்புப் படை சிப்பாய்களைச் சரணடையுமாறு கேரள போலீசு கோரியது. ஆனாலும், கெடு முடிந்து 8 மணிநேரத்துக்குப் பின்னர்தான் அவர்களை அக்கப்பலின் அதிகாரிகள் ஒப்படைத்துள்ளனர். அவர்களிடம் விசாரணை நடத்தும்போது இத்தாலிய தூதரக தலைமை அதிகாரியும் பாதுகாப்பு அதிகாரியும் உடன் இருப்பதற்கும் இந்தியா ஒப்புக்கொண்டது. கொச்சி அருகே மத்திய தொழிற்பாதுகாப்புப் படையின் விருந்தினர் மாளிகையில் வைத்து ராஜமரி

ஏகாதிபத்திய திமிர்த்தனம்: இத்தாலிய சரக்குக் கப்பலின் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்ட தமிழக மீனவர்கள்.



யாதையுடன் 'விசாரணை' நடந்துள்ளது. அதன் பின்னரே அவர்கள் கொல்லம் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கடந்த பிப்ரவரி 22-ஆம் தேதி டெல்லி வந்த இத்தாலிய வெளியுறவுத்துறை அமைச்சர், இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவு இந்த விவகாரத்தால் பாதிக்கப்படக் கூடாது என்றும், அந்நிய மண்ணில் எங்கள் நாட்டினர் கிரிமினல் நடவடிக்கையில் ஈடுபட்டால், இத்தாலிய சட்டப்படி தான் விசாரிக்க முடியும் என்றும் எச்சரித்தார். இச்சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகள், குண்டுகள் முதலான வற்றைப் பறிமுதல் செய்து விசாரணை நடத்தவும் இத்தாலி ஒத்துழைக்கவில்லை. அக்கப்பல் அதிகாரிகள் அவற்றை ஒரு அறையில் வைத்துப் பூட்டி, இத்தாலிய அதிகாரிகளிடம் அல்லது சர்வதேசிய புலனாய்வு அமைப்பினரிடம் மட்டுமே அவற்றை ஒப்படைக்க முடியும் என்று திமிராகக் கூறிவிட்டனர். நீண்ட இழுபறிக்குப் பின்னரே, இந்திய மற்றும் இத்தாலிய அதிகாரிகள் சேர்ந்து விசாரணைக்காக அத்துப்பாக்கிகளைக் கைப்பற்றியுள்ளனர்.



இந்தியாவின் ஏகாதிபத்திய விசுவாசம்: கொலைகார இத்தாலியர்களை மத்தியத் தொழிற்பாதுகாப்புப்படை விருந்தினர் மாளிகையில் வைத்து ராஜமரியாதையுடன் நடத்தப்படும் விசாரணை.

இந்தியாவில் ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டால், உடனடியாகக் கைது செய்யும் இந்திய அரசு, ஏகாதிபத்திய நாட்டைச் சேர்ந்தவர்கள் கொலைக்குற்றங்களில் ஈடுபட்டால்கூட கைது செய்து தண்டிக்க முன்வராமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது. இந்திய சட்டப்படியே இச்சம்பவத்துக்குத் தீர்வு காணப்படும் என்று இந்திய அரசு அறிவித்துள்ள போதிலும், அதன் ஒவ்வொரு நடவடிக்கையும் அடிமையை விஞ்சும் விசுவாசத்துடன் இந்த விவகாரத்தை நீர்த்துப் போக வைக்கும் திசையில்தான் உள்ளன.

அரபிக்கடல் பகுதியில் இதுவரை சோமாலியக் கடற்கொள்ளையர்களின் தாக்குதலே நடந்திருந்தாத நிலையில், சோமாலியக் கொள்ளையர்கள் என்று தவறாகக் கணித்து இத்தாலிய வணிகக் கப்பலின் பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும், ஒருவிதப் பதற்றத்தில்தான் இத்துப்பாக்கிச் சூடு நடந்திருக்குமே யொழிய, சிங்கள ராணுவத்தைப் போல வெறிகொண்டு நிகழ்த்தியிருக்க வாய்ப்பில்லை என்றும் இந்திய ஆட்சியாளர்களின் நோக்கத்துக்கு ஏற்ப தினமணி தலையங்கம் எழுதுகிறது. துனா மீன்களுக்கு மிகப்பெரிய வலை விரித்திருக்கும் மீனவர்கள், வர்த்தகக் கப்பல்கள் அந்த வழியில் வரும்போது அவற்றால் தங்கள் வலைகள் சேதமடையும் என்று பயந்து, மீன்பிடி படகுகளைக் குறுக்கே கொண்டுபோய் நிறுத்தி அந்தப் பெரிய கப்பல்களை விலகிப் போகச் செய்வார்கள் என்பதால், ஒரு மீன்பிடிப் படகு தங்களை நோக்கி முன்னேறி வருகிற நிலையில், இத்தாலியக் கப்பலில் இருந்த பாதுகாப்பு வீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கவும் வாய்ப்புள்ளது என்று இத்தாலியக் கப்பலின் தாக்குதலுக்கு வக்காலத்து வாங்கி, மீனவர்களின் மீது பழியைப் போடுகிறது.

தற்போதைய இத்தாலியக் கப்பல் விவகாரம் மட்டுமல்ல; அதற்கு முன்பாக நடந்துள்ள ஏராளமான விவகாரங்களிலும் இந்திய அரசின் அடிமைத்தனமும் ஏகாதிபத்திய விசுவாசமும் நாடெங்கும் நாறிப் போயுள்ளது. 1995 டிசம்பரில் மே.வங்கத்தின் புருலியாவில் இரகசியமாக ஆயுதங்களை விமானம் மூலம் இறக்கிய சர்வதேச கிரிமினல் குற்றக் கும்பலைச் சேர்ந்த பிரிட்டனின் பீட்டர் பிளீச் மற்றும் 5 லாட்விய நாட்டினர் கைது செய்யப்பட்ட பின்னர், ரஷ்ய வல்லரசு மற்றும் பிரிட்டனின் நிர்ப்பந்தங்களால் இக்குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டனர்.

இந்திய முன்னாள் அரசுத் தலைவர் அப்துல் கலாம், முன்னாள் இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்ணாண்டஸ், இந்தியத் தூதரகப் பெண் அதிகாரி உள்ளிட்ட பல பிரபலமான இந்தியர்கள் அமெரிக்க விமான நிலையங்களில் நிர்வாணப்படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டபோதும், அமெரிக்காவில் படிக்கும் இந்திய மாணவர்கள் கிரிமினல்களைப் போல கண்காணிக்கப்பட்டபோதும், இந்த அவமதிப்புகளுக்கு எதிராக இந்தியா வாய் திறக்கவில்லை. இந்திய அரசு, தனது ஏகாதிபத்திய விசுவாசத்தை வெளிக்காட்டியிருப்பதையே, இத்தாலியக் கப்பல் விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

● தனபால்

# டெல்லி கார் குண்டு வெடிப்பு:

# பாவம் ஓரிடம், பழி ஓரிடமா?

**இஸ்ரேல் தூதரக அதிகாரி கார் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு, இரானின் மீது வீண்பழி போடப்படுகிறது.**

கடந்த பிப்ரவரி 13-ஆம் தேதியன்று டெல்லியில் பிரதமர் இல்லத்துக்கு அருகேயுள்ள இஸ்ரேல் நாட்டுத் தூதரகத்தின் கார் வெடித்து தீப்பிடித்ததில், தூதரகத்தைச் சேர்ந்த பெண் அதிகாரி ஒருவர் உள்ளிட்டு 4 பேர் காயமடைந்தனர். டீசலால் இயக்கப்படும் காரின் வாயு அழுத்த சிலிண்டர் வெடித்ததால் தீவிபத்து நேர்ந்ததாகவே ஒரு மணி நேரத்துக்குப் பிறகு போலீசார் ஊடகங்களிடம் கூறினர்.

போலீசார் புலனாய்வு செய்து வருவதாக செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கும் போதே, இது பயங்கரவாதிகளின் தாக்குதல் என்றும், இக்குண்டு வெடிப்புக்கு இரானும் ஹிஸ்புல்லா பயங்கரவாத இயக்கமும்தான் காரணம் என்றும் இஸ்ரேலியப் பிரதமர் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அறிவித்ததோடு, இதற்குப் பதிலடி கொடுக்கப்படும் என்றும் எச்சரித்தார். அமெரிக்காவும், பிரிட்டனும் இத்தகைய பயங்கரவாதங்களை இரான் தூண்டிவிட்டு ஆதரிக்கிறது என்று குற்றம் சாட்டின. மறுபுறம், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் குற்றச்சாட்டை மறுத்து, இக்குண்டுவெடிப்புக்கு தாங்கள் காரணம் இல்லை என்று இரான் அறிவித்துள்ளது.

காந்தத்துடன் கூடிய ஸ்டிக்கர் மூலம் காரில் வெடிகுண்டை ஒட்டவைத்து, பின்னர் தொலைக் கட்டுப்பாட்டு கருவி (ரிமோட்) மூலம் வெடிக்கவைக்கும் நவீன குண்டுவெடிப்புகளின் மூலம் கடந்த இரண்டாண்டுகளில் இரானின் 5 அணு விஞ்ஞானிகள் கொல்லப்பட்டுள்ளனர். மொசாத் எனும் இஸ்ரேலிய பயங்கரவாத உளவு அமைப்புதான் இப்படு கொலைகளைச் செய்திருக்க வாய்ப்புள்ளது என்று சந்தேகிக்கப்பட்டது. தற்போது டெல்லியில் இஸ்ரேலியத் தூதரகக் கார் அதே பாணியில் குண்டு வைக்கப்பட்டு வெடித்துள்ளதால், இது இஸ்ரேலின் கைவரிசைதான் என்று கருதுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன. இருப்பினும், இது இரானால் தூண்டிவிடப்பட்டுள்ள ஹிஸ்புல்லா இயக்கத்தினரின் பழிவாங்கும் நடவடிக்கைதான் என்கிறது இஸ்ரேல். தங்கள் நாட்டிலும் உலகின் பிற நாடுகளில் இஸ்ரேலியர்களைக் குறிவைத்து இத்தகைய கார் குண்டுத் தாக்குதல் நடத்தப்படுவதாக இஸ்ரேல் கூறுகிறது.

அடுத்த நாளில், இஸ்ரேலிய தூதரக காரைப் பின்தொடர்ந்து மோட்டார்சைக்கிளில் ஒரு இளைஞர் வந்ததாகவும், காரில் ஸ்டிக்கர் குண்டை ஒட்டி அதனை வெடிக்க வைத்ததாகவும் இந்திய உளவுத்துறையினர் கூறுகின்றனர். இரு நாட்களுக்குப் பின்னர், ஒரு சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் கைவிடப்பட்டு தெருவில் கிடந்ததாக ஆதாரம் காட்டினர். இந்திய உள்துறைச் செயலாளரோ, இக்குண்டு வெடிப்பின் பின்னணியில் எந்த நாட்டையும் தொடர்புபடுத்த எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை என்கிறார். பிரதமரின் இல்லத்துக்கு 500 மீட்டர் அருகே பலத்த பாதுகாப்பு உள்ள பகுதியில் குண்டு வெடிப்பு நடந்திருப்பதே பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தும் நிலையில், விசாரணை முடிவடையாத நிலையில் கார் வெடிப்பில் காயமடைந்த தூதரகப் பெண் அதிகாரி சிகிச்சைக்குப் பின்னர் அவசரமாகத் தனது நாட்டுக்குச் சென்றுவிட்டார்.

வாயு அழுத்த சிலிண்டர் வெடிப்பினால் ஏற்பட்ட விபத்தா? ஸ்டிக்கர் குண்டு வெடிப்பா? தீப்பிடித்து எரிந்த இஸ்ரேலிய தூதரகக் கார். உள்ளே: சிகிச்சைக்குப் பின்னர் இஸ்ரேலுக்குச் சென்றுவிட்ட தூதரகப் பெண் அதிகாரி தல் யெஹோஷுவா கோரன்.



இவ்வாறு தூதரக அதிகாரியை அவசரமாகத் திரும்பப் பெற்றுள்ள செயலானது, இஸ்ரேல் தனது குற்றத்தை மறைக்கும் முயற்சியாகவே தெரிகிறது.

இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாத், பயங்கரவாதப் படுகொலைகளுக்குப் பேர் போன கொலைகார அமைப்பாகும். பாலஸ்தீன மக்களும் போராளிகளும் இலக்கு வைத்து அப்படையினரால் கொல்லப்பட்டுள்ளதற்கு நீண்ட வரலாறே உள்ளது. கடந்த ஆண்டு நவம்பரில் அமெரிக்காவுக்கான சௌதி அரேபியாவின் தூதரான அப்தல் அல்ஜூபேர் என்பவரைக் கொல்ல சதி செய்ததாக அமெரிக்காவும் இஸ்ரேலும் இரான் மீது எவ்வித ஆதாரமுமின்றிக் குற்றம் சாட்டின.




ஐ.நா.மன்றமும் இக்கொடுஞ்செயலைக் கண்டித்து தீர்மானம் இயற்றியது. ஆனால் இது அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. மற்றும் இஸ்ரேலின் உளவு நிறுவனமான மொசாத் ஆகியவற்றின் கைவரிசைதான் என்று பின்னர் அம்பலப்பட்டது. அமெரிக்காவின் ஏற்பாட்டில் இஸ்ரேலே டெல்லியில் நடந்துள்ள குண்டு வெடிப்பின் பின்னணியில் இருக்கலாம் என்தற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாக இருப்பதையே இவையனைத்தும் காட்டுகின்றன.

மேற்காசியாவில் இரானின் அரசியல்-பொருளாதார ஆற்றலைச் சீர்குலைக்க கடந்த நான்காண்டுகளாகப் பல்வேறு சதிகளை வெளிப்படையாகவே அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் செய்து வருகின்றன. கடந்த 2010-ஆம் ஆண்டில் அந்நாட்டின் 40-க்கும் மேற்பட்ட பொருளாதார-வர்த்தக நிறுவனங்கள் மீதும் முக்கிய வங்கிகள் மீதும் ஐ.நா. மன்றத்தின் மூலம் அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்தது. இரானின் கச்சா எண்ணெய்த் தொழிலில் எந்த நாடும் முதலீடு செய்யக் கூடாது, அணு ஆராய்ச்சிக்குத் தேவையான பொருட்களை ஏற்றிக் கொண்டு செல்வதாகச் சந்தேகித்தால் இரானியக் கப்பல்களை நடுக்கடலிலேயே சோதனையிடவும் தனக்கு அதிகாரமுண்டு என்று பல்வேறுவிதமான மேலாதிக்க நடவடிக்கைகளை இரான் மீது அமெரிக்கா ஏவிவிட்டுள்ளது.

அணுகுண்டு தயாரிப்பதா, வேண்டாமா என்று தீர்மானிக்கும் இரானின் சுயாதிபத்திய உரிமையை அமெரிக்கா மறுக்கிறது. அமெரிக்காவுக்கு விசுவாசமாக, சர்வதேச அணுசக்தி முகமையில் இரானுக்கு எதிராக இந்தியா வாக்களித்தது. இரான் - பாகிஸ்தான் - இந்தியா இடையே குழாய் வழியாக இயற்கை எரிவாயுவைக் கொண்டுவரும் ஒப்பந்தத்தையும் இந்தியா கிடப்பில் போட்டுவிட்டது. இரானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்க்கான நிலுவையை ஆசியன் கணக்குத் தீர்வு ஒன்றியம் மூலம் பட்டுவாடா செய்து வந்த இந்திய ரிசர்வ் வங்கி, அமெரிக்காவின் கட்டளைக்கு ஏற்ப அந்த கணக்குத் தீர்வு ஒன்றியத்திலிருந்து விலகிக் கொண்டுவிட்டது.

இந்தியாவின் மொத்த எண்ணெய் இறக்குமதியில் இரான் 12 சதவீதப் பங்கு வகிக்கிறது. கடந்த டிசம்பர் இறுதியில் இரானின் மத்திய வங்கியுடன் எந்த நிதி நிறுவனம் உறவு கொண்டாலும், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ஒபாமா தடைவிதித்தார். இதனால், இந்தியா தனது எண்ணெய் நிலுவையை இரானுக்குப் பட்டுவாடா செய்ய முடியாமல் சிக்கலாகியுள்ளது.

கடந்த பிப்ரவரியில் இரானும் இந்தியாவும் எண்ணெய்க்கான நிலுவையை எப்படிப் பட்டுவாடா செய்து கொள்வது என்பது பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தின. இந்தியா தனது எண்ணெய்க்கான நிலுவையில் 45 சதவீதத் தொகையை ரூபாயாக யூகோ வங்கியில் செலுத்துவது, அந்த வங்கி இரண்டு இரானிய தனியார் வங்கிக்குத் தொகையைத் திருப்புவது என்று தற்காலிகமாக முடிவு செய்யப்பட்டது. எஞ்சிய நிலுவையை விரைவில் எப்படி பட்டுவாடா செய்வது என்பது பற்றி பேசுவதென முடிவாகியது. இத்தகைய சூழலில்தான் டெல்லியில் இஸ்ரேலியத் தூதகரக் கார் வெடித்துள்ளது.

துருக்கி, சீனா, இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் இரானிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் முக்கிய நாடுகளாக உள்ளன. இரானின் நீண்டகால நட்பு நாடான இந்தியாவில் பயங்கரவாதச் சதியை அரங்கேற்றுவதன் மூலம், இரானை உலக அரங்கிலும் இந்தியாவிலும் தனிமைப்படுத்தலாம் என்பதாலேயே இந்தியாவில் இஸ்ரேலிய கார் வெடிப்பு நடத்தப்பட்டுள்ளது. இரானுடனான உறவை இந்தியா முற்றாகத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்ற அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் நோக்கத்துக்கு ஏற்பவே இக்குண்டுவெடிப்பும் பயங்கரவாதப் பீதியும் கிளப்பப்பட்டுள்ளது. இரானிலிருந்து எரிவாயு கொண்டுவரும் திட்டத்தை கைவிட்டது, அணுசக்தி முகமையில் இரானுக்கு எதிராக வாக்களித்தது ஆகியவற்றில் தொடங்கி, இன்று பொருளாதாரத் தடை, குண்டு வெடிப்பு ஆகிய அனைத்திலும் நீண்டகால நட்பு நாடான இரானுக்கு துரோகம் செய்து, தனது நலனுக்காக அமெரிக்காவின் காலை நக்கிக் கொண்டிருக்கிறது, இந்திய ஆளும் வர்க்கம்.

● பாலன்

# புதை சேற்றில் சிக்கியது ஐரோப்பிய ஒன்றியம்

**ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தமது பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க எடுக்கும் சிக்கன நடவடிக்கைகள், "பூமராங்" போலத் திருப்பித் தாக்குகின்றன.**

உழைக்கும் மக்களின் போராட்டங்களால் ஐரோப்பா கண்டத்திலுள்ள கிரீஸ் நாடு மீண்டும் கொந்தளிக்கத் தொடங்கியுள்ளது. கிரேக்க நாட்டில் கடந்த பிப்ரவரி 12 அன்று நாடாளுமன்றத்தின் முன் நடந்த போராட்டத்தில் ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் பங்கேற்று அரசின் சமூகச் செலவினக் குறைப்புத் திட்டத்துக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியுள்ளனர்.




தீராத நிதி நெருக்கடியில் சிக்கி திவாலாகும் நிலையில் இருந்த கிரீஸ் நாட்டின் நெருக்கடிக்கு, நலத்திட்டங்கள் - மானிய வெட்டு முதலான பொருளாதாரத் தாக்குதல்களையே ஐரோப்பிய ஆணைக்குழு, ஐரோப்பிய மத்திய வங்கி, சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்) ஆகிய மும்மூர்த்திகள் தீர்வாக முன்வைக்கின்றனர். இதனைச் செயல்படுத்தாவிட்டால் நாடு திவாலாகி பொருளாதாரப் பேரழிவு ஏற்படும் என்று நிர்ப்பந்தமாக இதனைத் திணித்து வருகின்றனர். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக திணிக்கப்பட்ட இத்தகைய நெருக்கடிக்கான தீர்வுத் திட்டங்கள் அனைத்தும் மிகப்பெரிய மோசடி என்பதையும், வறுமையும் வேலையின்மையும் துயரமும் தீவிரமாகிவிட்டதையும் தற்போதையை நிலைமேகளே நிரூபித்துக் காட்டுகின்றன. தனியார்துறையில் 20 சதவீத அளவிற்கும், பொதுத்துறையில் 50 சதவீத அளவிற்கும் ஊதியங்கள் குறைந்துள்ளன. கடந்த ஆண்டில் பொருளாதாரம் 7 சதவீத அளவுக்கும், தொழிற்துறை உற்பத்தி 16 சதவீத அளவுக்கும் வீழ்ச்சியடைந்துள்ளது. மதிப்புக் கூட்டு வரி உயர்வால் ஒரு லட்சம் சிறு மற்றும் சில்லறை வர்த்தக நிறுவனங்கள் திவாலாகிவிட்டன.

இத்தனையும் போதாதென்று, கடந்த பிப்ரவரியில் கொண்டுவரப்பட்ட புதிய சமூகச் செலவின வெட்டுத் திட்டத்தின்படி, 2015-இல் இன்னும் கூடுதலாக ஒன்றரை லட்சம் அரசுத்துறை தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்படவுள்ளனர். ''ஒரு முழம் கயிறா, அல்லது ஒரு துளி விஷமா என்கிற வெவ்வேறு வடிவிலான மரணத்துக்கு இடையில் ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுக்குமாறு ஆட்சியாளர்கள் எங்களைத் தள்ளுகின்றனர்; இதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்'' என்று இத்தாக்குதலை எதிர்த்து கிரீஸ் மக்கள் தொடர்ந்து போராடுகின்றனர். கிரீஸ் நாட்டு உழைக்கும் மக்கள் தங்கள் போராட்டத்தில் வெற்றி பெற்றுவிட்டால், அது ஐரோப்பாவிலுள்ள பிற நாடுகளிலுள்ள உழைக்கும் மக்களுக்குப் பெரும் உத்வேகத்தை அளித்துவிடும் என்று இந்த ஒன்றியத்தின் செல்வாக்கு மிக்க நாடுகளான ஜெர்மனியும் பிரான்சும் அஞ்சுகின்றன. ஐரோப்பிய ஒன்றியத்தின் நாணயமான யூரோவின் மதிப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக, விரைவாக கிரீசை நெருக்கடியி

அரசின் மானிய வெட்டுக்களையும் சமூகச் செலவினக் குறைப்புத் திட்டத்தையும் எதிர்த்து கிரீஸ் நாட்டில் பரவும் மக்கள் போராட்டம்.




லிருந்து மீட்பது என்ற பெயரில் மானியவெட்டுகளைத் தீவிரமாக்குமாறு நிர்பந்தித்து, கிரீசை தங்களது மேலா திக்கத் திட்டங்களுக்கான சோதனைக் கூடமாகப் பயன் படுத்தி வருகின்றன.

26 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தில் கிரேக்க நாடு மட்டும்தான் நெருக்கடியில் சிக்கி திவா லாகும் விளிம்பில் இருப்பதாகவும், அதனைத் தீர்க்க ஐரோப்பிய ஒன்றியம் தீவிர நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாகவும் முதலாளித்துவ உலகம் சித்தரித்து வந்தது. ஆனால், இன்று பெரும்பாலான ஐரோப்பிய நாடு கள் கிரீசின் கதியை அடைந்து குடிமுழுகிக் கொண்டிருக் கின்றன என்பதை முதலாளித்துவப் பொருளாதாரவாதி களே வேறுவழியின்றி இப்போது ஒப்புக் கொள்கின்றனர். தான் பட்டகடனைத் திருப்பிக் கொடுக்கும் ஆற்றலில் - ‘‘ஏஏஏ’’ என்ற மிக உயர் தரத்தில் இருந்த உலகின் மிகப் பெரிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள அமெரிக்கா, கடந்த 2011 ஆகஸ்டில் அத்தகுதியை இழந்து விட் டது என்று ஸ்டாண்டர்டு அண்டு புவர் என்ற தர மதிப்பீடு நிறுவனம் அறிவித்தது. மற்றொரு பொருளாதார வல்லரசான ஜப்பானும் அத்தகு தியை இழந்து நீண்டகாலமாகிவிட்டது. எஞ்சியி ருந்த ஐரோப்பிய ஒன்றியமும் இன்று அந்த நிலைக் குத் தள்ளப்பட்டு முழுகிக் கொண்டிருக்கிறது.

ஸ்டாண்டர்டு அண்டு புவர் என்ற தர மதிப் பீட்டு நிறுவனம் கடந்த கடந்த ஜனவரி 12 -இல் பிரான்ஸ், ஆஸ்திரியா, இத்தாலி, ஸ்பெயின் உள்ளிட்ட 9 நாடுகள் கடனைத் திருப்பிச் செலுத்தும் ஆற்றலை இழந்துவிட்டன என்றும், தற்போதைய நிலையில் ஜெர்மனி, லக்சம்பர்க், பின்லாந்து, நெதர்லாந்து ஆகிய நான்கு நாடுகள் மட்டுமே ஓரளவுக்கு தமது கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளதாகவும், இந்நாடுகள் உதவினால்தான் ஐரோப்பிய பொருளாதா ரத்தையும் யூரோ நாணயத்தையும் காப்பாற்ற முடியும் என் றும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது. தங்களது கடன்க ளைத் திருப்பிச் செலுத்துவதற்கான ஆற்றலை 9 நாடுகள் இழந்துவிட்டதால், ‘‘ஏஏஏ’’ தரத்தில் நீடித்து வந்த ‘‘ஐரோப்பிய நிதிச் சீரமைப்பு ஏற்பாடு’’ (EFSF) என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் திவாலான நாடுகளை மீட்ப தற்கான நிதியமைப்பும் இப்போது அதன் தரத்தை இழக் கத் தொடங்கியுள்ளது என்று அடுத்த நான்கு நாட்களில் அந்நிறுவனம் அறிவித்துள்ளது. நெருக்கடியில் சிக்கி யுள்ள நாடுகள் மட்டுமின்றி, ஐரோப்பிய ஒன்றியத்தி லுள்ள அனைத்து நாடுகளிலும் மக்களின் நுகர்வு குறைந் துள்ளதோடு, அரசின் வரிவருவாயும் குறைந்துவிட்டது என்றும், ஐரோப்பிய ஒன்றியத்தின் பல நாடுகளில் உண்மைப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் அந்நிறுவனம் தெரிவிக்கிறது.

ஏற்கெனவே அயர்லாந்தில் ஏற்றுமதி உபரி மூலம் நெருக்கடியைச் சமாளித்துவிட்டதாக ஏகாதிபத்திய வாதிகள் சித்தரித்தனர். ஆனால் நெருக்கடிக்கு முன் பிருந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை விட, இப் போது அந்நாட்டில் வேலையின்மை தீவிரமாகிவிட்டது. இதர நாடுகள் இறக்குமதி செய்தால்தான் அந்நாடு தனது நெருக்கடிகளிலிருந்து தப்பிக்க முடியும் என்ற நிலையில் இருப்பதால், அது எந்நேரமும் திவாலாகும் நிலையில் உள்ளது. கிரீசும் அயர்லாந்தும் இரட்டை இலக்க பண வீக்கத்தால் தவிக்கின்றன. ஸ்பெயின் நாடு 23 சதவீத வேலையின்மையால் தத்தளிக்கிறது. ஏறத்தாழ அனைத்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அரசாங்கக் கடன் பத்தி ரங்களும் இன்று மதிப்பிழந்து போய்விட்டன. ஐரோப் பிய ஒன்றியத்தில் செல்வாக்கு மிக்க இன்னொரு நாடான பிரிட்டன், 1930-களில் நிலவிய பெருமந்த நிலைமையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. பிரிட்டனில், 1996 -ஆம் ஆண்டுக்குப் பிறகு 2011-ஆம் ஆண்டில்தான் மிக அதிகமாக 20.64 லட்சம் பேர் வேலையின்றித் தவிப் பதாகவும், இது 2012-இல் 30 லட்சமாக உயரும் என்றும் அரசின் புள்ளிவிவரம் கூறுகிறது.




கூடுதல் விலைக்கு கடன்களை வாங்கி, தமது நாடு களின் திவாலாகும் நிலையிலுள்ள வங்கிகளை மீட்கு மாறு நெருக்கடியில் சிக்கி திவாலாகும் நிலையிலுள்ள நாடுகளிடம் ஜெர்மனியும் பிரான்சும் நிர்ப்பந்திக்கின்றன. இதன் விளைவாக, நிதித்துறையில் கடுமையான சிக் கனத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும்; இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைந்து அரசின் வரி வரு வாயும் குறையும் என்பதால் என்ன செய்வது என்று புரி யாமல் இந்நாடுகளின் வங்கிகள் தடுமாறுகின்றன.

மொத்தத்தில் அமெரிக்கா, ஜப்பான் மட்டுமின்றி, ஐரோப்பிய ஒன்றியமும் வீழ்ச்சியைச் சந்தித்துக் கொண் டிருக்கிறது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலைவர்கள் யூரோ நாணயத்தைக் காப்பாற்றுவதற்காக கடந்த டிசம்பர் 9 அன்று பிரஸ்ஸெல்ஸ் நகரில் நடத்திய உச்சி மாநாடும் தோல்வியில் முடிந்துள்ளதால், ஐரோப்பிய ஒன்றியமே சிதைந்து சின்னாபின்னமாகிப் போகும் சூழல்தான் நிலவு கிறது. பெருகிவரும் நெருக்கடிகள் மீண்டுமொரு உலகப் பொருளாதார நெருக்கடி முற்றுவதற்கான அறிகுறி களைத்தான் காட்டுகிறதேயொழிய, தீர்வதற்கான வாய்ப் புகளோ வழிகளோ தென்படவேயில்லை.

● குமார்

## ஜெயாவின் நிர்வாகத் திறன்:

# கலைகிறது பார்ப்பன பம்மாத்து!

**ஜெயாவின் பத்து மாத ஆட்சியில், மின்வெட்டு, கொலை, கொள்ளை எனத் தமிழகம் இருண்ட காலத்திற்குள் சிக்கித் தவிக்கிறது.**

ஆறு மடிப்பு கொண்ட மற்போர் வீரனின் கட்டுடலுக்கு ஊத்தை உடம்பு இம்சை அரசன் 23-ஆம் புலிகேசியின் தலையைப் பொருத்தி ஓவியம் வரைந்து வைத்துக் கொள்வதாக ஒரு காட்சி அத்திரைப்படத்தில் வருகிறது.

அதைப் போல உல்லாச, ஊதாரி, சொகுசு வாழ்க்கையில் மூழ்கிக் கிடக்கும் இம்சை அரசி 24-ஆம் புலிகேசியான செல்வி ஜெயலலிதாவை சிறந்த அறிவாளி, துணிச்சல்காரி, நிர்வாகத் திறமைசாலி என்ற பொய்யான சித்திரம் வரையப்படுகிறது.

ஆனால், இவரது ஆட்சியில் மின் பற்றாக்குறையில் தமிழகமே இருளில் மூழ்கிக் கிடக்கின்றது. தொழிலகங்களின் இயந்திரங்கள் துருப்பிடிக்கின்றன; அலுவலகங்களில் ஒட்டடைகள் படிகின்றன; கோப்புகள் தூசு மண்டிப் போயுள்ளன; சாலைகள் குண்டும் குழியுமாக சிதிலமடைந்து போயுள்ளன; சாலைகளில் சாக்கடைகள் ஆறாக ஓடுகின்றன; குப்பைக் கூளங்கள் மலைகளாகக் குவிகின்றன.

போலீசு அதிகாரிகள் சசிகலா கும்பல் பதுக்கிய சொத்துக்களை மீட்பதிலும், எதிர்க்கட்சிகளை மிரட்டிப் பொய் வழக்குகள் புனைவதிலும், அம்மா பரிவாரங்களுக்குப் பாதுகாப்பு என்ற பெயரில் அணிவகுத்து நிற்பதிலும் குவிக்கப்பட்டிருக்கின்றன. அதனால் கொலை, கொள்ளை, வழிப்பறிப்புகள் நடத்துவதற்கான வாய்ப்புகள் தொழில்முறை குற்றக்கும்பல்களுக்குத் திறந்து விடப்பட்டிருக்கின்றன. இந்த வகைக் குற்றங்களைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குப் பதில் போலீசு நிலையக் கொட்டடிக் கொலைகளும், போலி மோதல்களும் (என்கவுண்டர்) அரங்கேற்றப்பட்டு பீதி உருவாக்கப்படுகின்றது. ஒருவேளை இதுதான் நிர்வாக திறமைசாலி என்பதைக் குறிக்கிறதோ!

ஜெயலலிதாவின் நிர்வாகத் திறமை குறித்து மூத்த முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியும் அரியானா மாநில முன்னாள் தலைமைச் செயலாளருமான எம்.ஜி.தேவசாகாயம் (இவர் தி.மு.க.காரர் அல்ல) கூறுகிறார், ''தமிழகத்தின் கடந்த 6 மாத ஆட்சி நிர்வாகச் சீரழிவு தவிர வேறொன்றுமில்லை. ஒரு தனி நபர் தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்கிறார். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் முதுகெலும்பு அற்றவர்களாக இருக்கிறார்கள். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இந்த நிலைமை இல்லை. இது இப்படியே போனால் தமிழகம் அதல பாதாளத்திற்குப் போகும்''. இந்தக் கணிப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஜெயா ஆட்சியில் நிர்வாகச் சீர்கேடு மேலும் மேலும் அதிகரித்து வருகிறது.

நிர்வாகப் பொறுப்பில் எந்தவொரு அமைச்சரும் அதிகாரியும் தொடர்ந்து இரண்டு மாதங்கள் கூட நீடிக்க முடியாது; கோப்புகளையும், பொறுப்புகளையும், தம்முடன் பணிபுரியும் அதிகாரிகளும் ஊழியர்களும்ம் புரிந்து கொள்வதற்கு முன்பாகவே அமைச்சர்களையும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளையும் பந்தாடுவதுதான் ஜெயலலிதாவின் இன்னொரு நிர்வாகத்திறமை! முதலமைச்சர் பதவிக்குத் தகுதியானவர் தானா என்று மதிப்பீடு செய்யாமலேயே ஜெயலலிதாவை மக்கள் தேர்ந்தெடுத்ததைப் போலவே - தகுதி, திறமைகளை மதிப்பீடு செய்து அமைச்சர்களையும் அதிகாரிகளையும் ஜெயலலிதா நியமிக்கவில்லை.

வேறு எந்த அடிப்படையில் பொறுப்புகளைத் தருகிறார் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம். கடந்த அமைச்சரவை மாற்றத்துக்கு சில மணி நேரத்துக்கு முன்பு செங்கோட்டையனை போயசு தோட்டத்துக்கு அழைத்த ஜெயலலிதா, ''அமைச்சரவையில் சில மாற்றங்கள் செய்யப் போறேன். இதுநாள் வரைக்கும் நான் உங்களுக்கு எதுவும் செய்ய முடியலை. என் சூழ்நிலை உங்களுக்குப் புரியும்னு நினைக்கிறேன்.

நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகும் தம்மை மீண்டும் வேலையில் சேர்க்க மறுக்கும் ஜெயாவின் திமிர்த்தனத்தை எதிர்த்து மக்கள் நலப் பணியாளர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்



கேளுங்க... உங்களுக்கு எந்த இலாக்கா வேணும்'' என்று கேட்டார். ''நீங்க நல்லா இருந்தா போதும்மா... நீங்க எது கொடுத்தாலும் சரிங்கம்மா'' என்றார், செங்கோட்டையன். ''இப்போதைக்கு வருவாய்த்துறை உங்ககிட்ட இருக்கட்டும். இன்னும் சில நாட்களில் வேறு சில துறைகளும் உங்களுக்கு வரும் சரியா'' என்று கேட்ட ஜெயாவிடம் குனிந்தபடியே தலையாட்டினார் செங்கோட்டையன்.

அமைச்சர் சிவபதியை முன்பு நீக்கியதற்கும் மீண்டும் சேர்த்ததற்கும் ஜெயலலிதா காரணம் சொல்கிறார்: ''ஒரு விழாவுல ராவணன் வந்தபோது, அதைக் கவனிக்காம அவர் செல்போன்ல பேசிட்டு இருந்தார் என்ற ஒரே காரணத்துக்காக, எங்கிட்ட தவறான தகவல்களைச் சொல்லி அவரை அமைச்சரவையில் இருந்து நீக்கி இருக்காங்க. எனக்கு இப்போதுதான் அது தெரிய வந்தது. தப்பு செய்யாத யாரும் தண்டனை அனுபவிக்கக் கூடாது இல்லையா?'' என்று சொன்ன ஜெயலலிதா, சிவபதியை மீண்டும் அமைச்சராக்கினார்.

எந்த தகுதி அடிப்படையில் அமைச்சர்கள் சேர்க்கப்படுகிறார்கள், நீக்கப்படுகிறார்கள் பாருங்கள்! ஜெயாவின் விசுவாசிக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காக வருவாய் துறை உட்பட முக்கியத்துறைகளின் அமைச்சராக்கப்படுகிறார்; முன்னாள் பங்காளி (ராவணன்)யை ''மதிக்கவில்லை'' என்பதற்காக ஒரு அமைச்சர் பதவி நீக்கப்படுகிறார். (யார் நீக்கியது? ஜெயாவுக்கு என்று சொந்த மூளை இல்லையா? யாராவது கோள் மூட்டினால் நம்பி விடுவாரா? தவறுக்குரிய பொறுப்பு இல்லையா?) பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார். ஆக, தகுதி, மதிப்பீடு அடிப்படையில் பொறுப்புகள் ஒதுக்கப்படுவதும் நீக்கப்படுவதும் இல்லை. விசுவாசம், அடிமைத்தனம், திமிர்த்தனமே அடிப்படை.

கொலை, கொள்ளை, வழிப்பறியில் நாட்டிலேயே முதன்மை இடத்தை நோக்கி தமிழகம் முன்னேறிக் கொண்டிருக்கும் வேளையில், இவைகளைச் செய்யும் குற்றவாளிகள் தான் ஆட்சிக்கு வந்தவுடன் ஆந்திராவுக்கு ஓடிப்போய் விட்டார்கள் என்று ஜெயா புளுகினார். கொடூரமான துப்பாக்கிச் சூடு நடத்தி தலித் மக்களைச் சுட்டுக் கொன்ற சம்பவத்தை சாதித் தகராறு என்று சித்தரித்தார்.



சென்னை-வேளச்சேரியில் நடந்த 'மோதலில்' சுட்டுக் கொல்லப்பட்ட வடநாட்டு இளைஞர்களின் சடலங்கள்: அரசு பயங்கரவாத வெறியாட்டம்.

இப்படியெல்லாம் பச்சையாகப் புளுகும் ஜெயா உண்மையில் துணிச்சல்காரர்தான்!

அப்புறம் மரியம் பிச்சை, பரஞ்ஜோதி விவகாரம்; மூன்று பெண்டாட்டிக்காரர் மரியம் பிச்சை ஜெயாவுக்குத் தன் விசுவாசத்தைக் காட்ட, மின்னல் வேகத்தில் காரை ஓட்டச் செய்து, விபத்து ஏற்படுத்தி, மாண்டு போனார். அவருக்கு மாற்றாக பெண் மருத்துவரிடம் மோசடித் திருமணம், சொத்துப் பறிப்பு செய்த கிரிமினல் பேர்வழி பரஞ்ஜோதியை இடைத்தேர்தலில் நிறுத்தி வெற்றி பெறச் செய்து, அறநிலையத்துறை அமைச்சரும் ஆக்கி, இரண்டே மாதத்தில் அதே வழக்கில் சிக்கியதால் பதவி நீக்கமும் செய்யப்படுகிறார். விவகாரத்துக்குரியவர் என்று தெரிந்தே நியமனம், நீக்கம் என்று செயல்படும் ஜெயலலிதா தனக்குத் தெரியாமல் நடந்து விட்டதென்று எத்தனை தடவைதான் மழுப்புவார்? ஏதாவது போதையில் மூழ்கிக் கிடப்பவருக்கு எதுவும் தெரியாமல், எதுவும் செய்யலாம் என்றவாறுதானே அரசு நடக்கிறது.

வகுப்புகளைத் தொடங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கக் கோரி பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள் நடத்தி வரும் போராட்டம்: ஜெயா ஆட்சியின் இலட்சணம்!



அடுத்து, ஜெயலலிதா துணிச்சல்மிக்கவர் என்ற கருத்து தொடர்ந்து பிரச்சாரம் செய்து, நிலைநாட்டப்பட்டிருக்கிறது. தான் எதைச் செய்தாலும் அதிரடியாகவும் அடாவடியாகவும், திமிர்த்தனமாக செய்வது; எதைச் சொன்னாலும் அண்டபுளுகு ஆகாசப்புளுகாக சொல்வது; மக்கள் எதிர்க்க மாட்டார்கள், ஏமாந்து போவார்கள் எதிர்க்கட்சிகளுக்கும் கேள்வி கேட்கும் திராணியில்லை என்ற எண்ணத்தில் விளைவதுதான் ஜெயலலிதாவின் துணிச்சல்.

கோவில் பிரசாதத்தில் நஞ்சு வைத்தும், லாரியை மோதவிட்டும் தன்னைக் கொல்ல முயன்றதாகப் புளுகியது; சட்டப்பேரவையில் தன்னை மானபங்

கப்படுத்தினார்கள், ஆளுநர் சென்னாரெட்டியே தன்னிடம் தவறாக நடக்க முயற்சித்தார் என்று புளுகியது; பணத்துக்காகத்தான் காவல்நிலையக் கற்பழிப்புப் புகார்கள் செய்வதாக பழிபோட்டது; தன் ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு கெட்டு விட்டதாகக் காட்டுவதற்கு தி.மு.க.வினரே திருட்டு, கொள்ளை வழிப்பறியில் ஈடுபடுகின்றனர் என்றும் ராஜீவ் காந்தியையும் கொன்றனர் என்றும் குற்றஞ்சாட்டியது; வெடிகுண்டு, துப்பாக்கிக் கலாச்சாரம் தீவிரவாதம், பிரிவினைவாதம் பெருகிவிட்டதாகக் கூறி போலீசாருடன் போலி மோதல்கள், கொட்டடிக் கொலைகளை நியாயப்படுத்தியது; லட்சக்கணக்கான அரசு ஊழியரை வீடு புகுந்து தாக்கியதோடு ஒரே கையெழுத்தில் பணிநீக்கம் செய்தது — இப்படி ஜெயலலிதாவின் துணிச்சலுக்கான பழங்கதைகளைக் கூட விட்டு விடுவோம்.



சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து ஜெயா விடுபட வேண்டி அமைச்சர்கள் பன்னீர் செல்வமும் செங்கோட்டையனும் சேர்ந்து காஞ்சிபுரம் வழக்கறுத்தீஸ்வரர் கோவிலில் நடத்திய சிறப்பு வழிபாடு.

1.76 இலட்சம் கோடி ரூபாய் ஊழலை தி.மு.க. செய்து விட்டதாக (அப்படி ஒரு குற்றச்சாட்டை ஜெயாவும் அவரது பங்காளிகளும் தவிர யாருமே கூறவில்லை) ஒரு பொய்ப் பிரச்சாரம் செய்து ஆட்சியைப் பிடித்ததும் கடந்த பத்து மாதங்களில் ஜெயலலிதா சொன்னவையும் செய்தவையுமே அவரது துணிச்சல் எத்தகையவை என்பதற்கு சான்றாக உள்ளன. தேர்தல்களில் வெற்றி பெற்றவுடன், இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றுவேன்; தமிழர்கள் தெருக்களில் பாதுகாப்பாக நடமாடலாம்; சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதுதான் என் ஆட்சியின் முதற்பணி; ஒரு சில மாதங்களில் மின்பற்றாக்குறை அடியோடு முடிவுக்கு வரும், மின்வெட்டே இருக்காது என்று அறிவித்தார் ஜெயலலிதா.

ஒரு அரசியல் கட்சியின் தலைவி, தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்கிற முறையில் திட்டங்களை அறிவிப்பதும், வாக்குறுதிகள் வழங்குவதும் தவறில்லை. ஆனால், இப்படியெல்லாம் சொல்லிவிட்டு தனது அரசு எந்திரத்தை - அதிகாரிகளையும் போலீசையும் - முதன்மையாக எந்தெந்த வேலைகளில் அவர் ஏவி விடுகிறார்? சமச்சீர் கல்வியும், பாடப்புத்தகங்களும் கேட்டுப் போராடும் மாணவர்கள் மீது தடியடி நடத்துவது; நீண்டநாள் ஆகியும் திறக்காமல் இருக்கும் தனிச்சிறப்பான வசதி கொண்ட மருத்துவமனையைத் திறக்கக் கோரும் மாணவர்-இளைஞர் அமைப்பினர் மீது தாக்குதல் நடத்துவது; மின்வெட்டுக்கு எதிராகவும், புயல் நிவாரணமும் கோரிப் போராடும் மக்கள் மீது தடியடி நடத்துவது; பழங்குடிப் பெண்களைக் கடத்திக் கொண்டு போய் பாலியல் வன்முறை செய்வது; குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களைச் சித்திரவதை செய்து கொட்டடிக் கொலைகள் புரிவது; அமைதியாகப் போராடும் தாழ்த்தப்பட்ட இளைஞர்களைத் திட்டமிட்டு போலீசைக் குவித்து, சுட்டுக் கொல்வது; வழக்கறிஞர்களைத் தாக்குவது; இரகசியப் படுகொலைகள் செய்வது; தனது பங்காளி சசிகலாவையும் அவரது உறவினர்களையும், எதிர்க்கட்சியினர் மற்றும் தம் கட்சியினரையும் உளவுவேலை செய்து கண்காணித்து வழக்குகள் சோடித்து சிறையிலடைப்பது.

இவை மட்டுமல்ல; ஜெயா ஆட்சியில் போலீசு - உளவுத் துறையின் வேலையைப் பாருங்கள். அமைச்சர் செங்கோட்டையனுக்கும் அவரது உதவியாளர் ஆறுமுகத்தின் மனைவிக்கும் தவறான உறவு இருப்பதாக செங்கோட்டையன் மகன் ‘அம்மா’விடம் கோள் மூட்டுகிறார் அல்லது முறையிடுகிறார். உடனடியாக உளவுத்துறையை அனுப்பி அம்மா விசாரிக்கிறார். ஆறுமுகத்தின் மனைவியை மிரட்டுகிறார். ஆறுமுகம் கைது செய்யப்படுகிறார்.

ஜெயா ஆட்சியில் அமைச்சர்களின் வேலையைப் பாருங்கள். சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து முதல்வர் ஜெயலலிதா விடுபட வேண்டி காஞ்சிபுரம் வழக்கறுத்தீஸ்வரர் கோவிலில் தமிழக அமைச்சர்கள் பன்னீர் செல்வம், செங்கோட்டையன் ஆகியோர் சிறப்பு வழிபாடுகள் நடத்துகின்றனர். கூடவே ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்களும் கலந்து கொள்கிறார்கள். அம்மாவுக்காக சுவர்ணாபிஷேகம் நடத்துகிறார்கள். கோவில் சார்பிலே அமைச்சர்களுக்கு ரோஜா மாலைகள் அணிவிக்கப்படுகின்றன. கோவிலுக்கு கோபுரம் கட்டி கொடுக்குமாறு கோரிக்கை வைக்கப்படுகிறது. அதையும் அமைச்சர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஜெயலலிதா ஆட்சி என்றால் இவைதான் வாடிக்கை என்று பல ஆண்டுகளாகத் தொடரும் அதிரடி, அடாவடி, திமிர்த்தனம் தான் அவரது துணிச்சலா? அதேபோல உயர்நீதி மன்றம், உச்சநீதி மன்றத் தீர்ப்புகளால் திரும்பத் திரும்ப கன்னத்தில் கரிபூசப்பட்டும், சட்டத்துக்கு புறம்பான முடிவுகள் எடுக்கிறார் ஜெயலலிதா. இவைதான் ஜெயலலிதாவின் அறிவுத்திறமைக்கு சான்றுகளா? இல்லை, தன்மீது தொடுக்கப்பட்ட 42 லஞ்ச ஊழல்-அதிகார முறைகேடு வழக்குகளைச் சமாளித்து, கடந்த பதினைந்து ஆண்டுகளாக, நீதித்துறைக்கு தண்ணி காட்டுகிறாரே, இதுதான் அவரது அரசியல் சட்ட ஞானத்துக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

— தொடரும்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

வந்தனர். இடிந்தகரைப் போராட்டப் பந்தலில் ம.க.இ.க. கலைக் குழுவினரின் நிகழ்ச்சி பெரும் வரவேற்பை பெற்றதனால், அடுத் தடுத்து மூன்று நாட்கள் தொடர்ந்து நடத்தப்பட்டது.

அணு உலை ஆதரவு கருத்து கொண்ட சிறு நகரங்களிலும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. பல இடங்களில் காங்கிரசு, பாரதிய ஜனதா காலிகளுடனான கைகலப்பின் ஊடாகவே பிரச் சாரம் கொண்டு செல்லப்பட்டது. படித்த நடுத்தர வர்க்கத் தினரிடையே கூட ஆளும் வர்க்கத்தின் அணு உலை ஆதரவுக் கருத்துகளே ஆதிக்கம் செலுத்தின. எனினும் அவற்றுக்கு எதிராக வாதிட்டுப் புரியவைக்க முடிகிறது. குறிப்பாக, கல்லூரி மாண வர்கள் இது குறித்த உண்மைகளைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினர். மின்வெட்டுக்கு கூடங்குளம்தான் தீர்வு என்ற பொய்ப் பிரச்சாரத்துக்கு பலியான பலர், பேருந்துகளிலும் ரயில்களிலும் பிரச்சாரம் செய்த போது அணு உலைக்கு ஆதரவு தெரிவித்து சண்டைக்கு வந்த போதும், அவர்களது கேள்விகளை பொறுமை யாக எதிர்கொண்டு பதிலளித்தார்கள் தோழர்கள்.

பிப்ரவரி 11 அன்று காலை நெல்லை ஜவகர் திடல் செங் கொடி ஏந்திய தோழர்களால் நிரம்பி வழிந்தது. பு.ஜ.தொ.மு. மாநிலத்தலைவர் தோழர் முகுந்தன் தலைமை தாங்கி முழக்கங் களை எழுப்பினார். தொடர்ந்து பேசிய பேரா. தொ.பரமசிவம், ‘‘இப்பகுதியை இன்னொரு நந்திக்கிராமம் ஆக்காமல் காங் கிரசு அரசு ஓயப்போவதில்லை என்று கூறியதுடன், கூடங் குளம் பிரச்சினையில் இரட்டை வேடமிடும் மார்க்சிஸ்டு களையும் அம்பலப்படுத் தினார். அணு உலை வேண்டுமா, வேண்டாமா என்ற கேள்வியை மின்சாரம் வேண் டுமா, வேண்டாமா என்று திசை திருப்பிய ப.சிதம்பரத்தை அம் பலப்படுத்தினார் ம.உ.பா. மையத்தின் மாநில ஒருங் கிணைப்பாளர் ராஜு. இந் திய-அமெரிக்க அணுசக்தி ஒப் பந்தத்தின் தொடர்ச்சியாகத் தான் மன்மோகன் அரசுக்கு அணுவெறி பிடித்திருக்கிறது என்பதையும், அது ஒரு அமெரிக்க அடிமை ஒப்பந்தம் என்பதை யும் அம்பலப்படுத்தியதுடன், கூடங்குளம் அணு உலையின் பாதுகாப்பு குறித்து ஆய்வதற்காக மாநில அரசு அமைத்திருக்கும் குழுவையும், அதன் உறுப்பினர்களையும் அம்பலப்படுத்தினார், ம.க.இ.க. செயலர் மருதையன்.



கூடங்குளத்தில்...

போராட்டத்தில் அணிதிரளுமாறு அனைவரையும் அறை கூவும் பாடலை ம.க.இ.க. மையக்கலைக்குழு இசைக்க பெருந் திரளாகப் பேரணி நகரத் தொடங்கியது. அணு உலைக்கும் அமெ ரிக்க ஆதிக்கத்துக்கும் காவடி எடுக்கின்ற காங்கிரசு, பா.ஜ.க. அடிமைகளை அம்பலப்படுத்தும் காட்சி விளக்கத்தினை நிகழ்த்தி யவாறு பு.மா.இ.மு. தோழர்கள் முன்சென்றனர். காட்சி விளக்கத் தையும், பேரணியின் முழக்கங்களையும் கருத்தூன்றிக் கவனித் தனர் மக்கள்.

நெல்லையிலிருந்து சுமார் 75 கி.மீ. தொலைவில் உள்ள கூடங்குளத்துக்கு செல்வதற்கு பேருந்து வசதியில்லை என்பது டன், போலீசு மிரட்டல் காரணமாக வாடகை வாகனங்கள் வர மறுத்தன. எனவே, பேரணியின் ஒரு பகுதியினர் மட்டுமே வாகனங் களில் கூடங்குளம் செல்ல முடிந்தது.

மாலையில் கூடங்குளம் சென்று இறங்கிய தோழர்களை வர வேற்கக் காத்திருந்தது ஒரு பெரும் மக்கள் திரள். தங்களுடைய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழகம் முழுவதிலுமிருந்து வந்திருந்த தோழர்களை வரவேற்குமுகமாக சுமார் இரண்டாயிரத் துக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு நின்றனர்.

கைக்குழந்தைகளுடன் பேரணிக்கு வந்திருந்த பெண் தோழர் களின் கையிலிருந்து குழந்தைகளை வாங்கிக் கொண்டனர் பெண்கள். மற்றவர்கள் கொடிகளை, முழக்க அட்டைகளை உரிமையுடன் பெற்று ஏந்தினர். பேரணி நகரத் தொடங்கியது. தோழர்களும் மக்களுமாக இரண்டறக் கலந்து விட்ட அந்தப் பெரும் மக்கள் திரள் போகும் பாதையெங்கும் இரு மருங்கிலும் இருந்த வீடுகளிலிருந்து பெண்களும் சிறுவர்களும் இளைஞர்க ளும் சாரி சாரியாக இறங்கி வந்து பேரணியில் ஒன்று கலந்தனர். அணு உலைக்கு எதிராக ஆவேசத்துடன் முழக்கமெழுப்பினர்.

இப்பேரணிக்கு ஆதரவு தெரிவித்து மதியத்திற்கு மேல் கடை யடைப்பு செய்யப்பட்டிருந்தது. சுமார் 5000- க்கும் அதிகமான மக்கள் நகரின் மையப்பகுதியில் இருந்த தேவாலயத்திற்கு முன்னே திரண்டு நிற்க, போராட்டக் குழுவின் சார்பில், மனோ.தங் கராசு தோழர்களை வரவேற்று உரையாற்றினர். பேரணியில் ஆயி ரக்கணக்கான கூடங்குளம் மக்களும் கலந்து கொள்வதைச் சாத் தியமாக்கும் பொருட்டு மறியல் போராட்டத்தை மாற்றியமைக் குமாறு தாங்கள் கோரியதை ஏற்றுக் கொண்டதற்கு நன்றி தெரி வித்து போராட்டக் குழுவின் சார்பில் பேசினார் வழக்குரைஞர் சிவசுப்பிரமணியன். தொடர்ந்து கலைக்குழுவினர் நடத்திய நாட கத்தில் ‘நாறவாயன் நாராயணசாமி’ பெரும் வரவேற்பைப் பெற் றார். ம.க.இ.க. மற்றும் அதன் தோழமை அமைப்புகள் நடத்திய போராட்டங்களைப் பற்றியும், இப்போராட்டத்தின் அரசியல் முக் கியத்துவத்தையும் சுருக்கமாக விளக்கிப் பேசினார், தோழர் காளி யப்பன். போலீசுக்கோ வழக்குகளுக்கோ அஞ்சவேண்டாம் என் றும் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர்கள் துணை நிற்பார்கள் என்றும் உறுதி கூறினர் வழக்குரைஞர் வாஞ் சிநாதன். பெருந்திரளான பெண்கள் பங்கேற்கும் எந்தப் போராட் டமும் தோற்றதில்லை என்று, ஓட்டுக் கட்சிகளைப் புறந்தள்ளி எழுந்திருக்கும் இந்தப் போராட்டம், ஒரு புதிய துவக்கம் என்றும் பாராட்டினார் வழக்குரைஞர் ராஜு.

வந்திருந்த தோழர்கள் அனைவரையும் வீட்டுக்கு வந்த நெருங்கிய சொந்தங்களாகக் கருதி உணவளித்து உபசரித்தார்கள் கூடங்குளம் மக்கள். கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போதே தேவாலயத்தின் மணி, வழமையான நேரத்தில் ஒலி எழுப்பத் தொடங்கியவுடன், யாரோ ஒருவர் விரைந்து சென்று அதனை நிறுத்தினார். இந்தப் போராட்டத்தை நிறுத்த முடியாது என்பதற்கு வேறு சான்று தேவையா என்ன?

- பு.ஜ.செய்தியாளர்கள்.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14



மருதையன்



மனோ.தங்கராஜ்




மேடையில் முழங்கும் கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராளிகள்



பு.மா.இ.மு.வின் நாடகம்



''மக்களின் உயிருக்கும் நாட்டின் அரைகுறை இறையாண்மைக்கும் உலை வைக்கும் கூடங்குளம் அணு உலையை இழுத்து மூடு!'' என்ற முழக்கத்துடன்
ம.க. இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் வீச்சாக நடத்திவரும் பிரச்சார இயக்கத்தின் ஓர் அங்கமாக சென்னை - எம்.ஜி.ஆர். நகரில் 25.02.2012 அன்று
''ஆபத்தான அணு உலை வேண்டாம்! அனைவருக்கும் தடையற்ற மின்சாரம் வேண்டும்!'' என்ற தலைப்பில் நடந்த பொதுக்கூட்டம் - கலைநிகழ்ச்சி.